

# தமிழரசு

திங்கள் இருமுறை நவ. 16, 1970 - 35 காசு

உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2



மலிவு விலை
நகர்ப்புற வீடு

உறுதியானது, நிலையானது· ஆனாலும் மலிவானது

# சங்கர் சிமெண்ட்

IS 269

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

IS 269

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

23 ஆண்டுகள் நிலைத்து - இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-444TM



# தமிழரசு

மலர் 1 1970 நவம்பர் 16 இதழ் 10

## இந்த இதழில்

நேருவின் இறுதி வேண்டுகோள்
குடிசைக்குக் கலசமா?
பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவும்
நாளொன்றுக்கு 40 டன் அரிசி
ஊசி வாங்கலையோ ஊசி
கொடுத்ததைக் கொடுத்தார்கள்
காலத்தை வெல்லும் கலை
பாப்பா, பாப்பா, ரொட்டி!
தீயவை அணைக்கும் படை
வாதத்தை வென்றிடுவோம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!
குளமும் குறளும்
வெண்பாப் போட்டி

முதல்வர் எழுதும்
இனியவை இருபது

*முகப்பில் :*

**சின்னக் குழந்தையுடன்**
**சிரித்து மகிழும் நேரு**

இந்த தேசத்தின் மக்கள் என்னை நேசிக்கிறார்கள். நடைமுறை இலக்கணங்களைத் தாண்டிய பேரன்புக் கொடையை அவர்களிடமிருந்து பன்முறை நான் பெற்றிருக்கிறேன். முற்றாகவோ அல்லது சிதலமாகவோ நான் திருப்பித் தர முடியாத நன்கொடை அந்த அன்பு.

இந்த உலகத்தின் நேசர்களுக்கு மத்தியில் அதைத் திருப்பித் தந்தவர்கள் யார்? அது “தரமுடிகிற” ஒன்றே தவிர “திருப்பித் தர முடிகிற” ஒன்றல்ல. என்னுடைய போக்குகளோடு பலர் உடன்பாடு கொண்டிருக்கிறார்கள் ; சிலர் மாறுபட்டு விமர்சித்திருக்கிறார்கள். என்றாலும் கூட எல்லா இந்தியர்களும் என்னையே நான் இழக்கின்ற அளவிற்கு அவர்களுடைய அன்பை எனக்குத் தந்திருக்கிறார்கள்.

ஒன்றைமட்டும் நான் கூற முடியும். எஞ்சியிருக்கும் எனது வாழ்காலத்தில் இந்த மக்களுக்கு, இவர்களுடைய அன்புக்குத் தகுதியற்றவனாக நான் நடந்து கொள்ளமாட்டேன்.

எனது பல்வேறு நண்பர்கட்கும், தோழர்கட்கும் ஆழமான அன்பைத் தர நான் கடமைப்பட்டவன். நாங்கள் அனைவரும் எல்லா நிலைகளிலும் தோழர்களைப் போலவே சுகதுக்கங்களைப் பகிர்ந்துகொண்டவர்கள்.

எனது மரணத்திற்குப் பிறகு மதச் சடங்குகள் தேவையில்லை.

அத்தகைய நம்பிக்கைகள் எனக்கில்லை. அவை நமக்கும் பிறருக்குமிடையே வேறுபாட்டையும், நம்மில் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் தன்மையினையும் உருவாக்கிவிடும் என நான் கருதுகிறேன்.

நான் இறக்கும்பொழுது எனது உடல் எரிக்கப்படவேண்டும். நான் ஒரு வேளை ஏதாவதொரு அயல் நாட்டில் இறந்து விட்டால் என் உடல் அங்கேயே எரிக்கப்பட்டு, எனது ‘அஸ்தி’ (சாம்பல்) அலகாபாத்திற்கு அனுப்பப்படவேண்டும். அதில் ஒரு சிறு பகுதியைக் கூடப் புனிதமாகக் கருதிப் பாதுகாக்கக் கூடாது. எனது அஸ்தியின் ஒரு பகுதி கங்கையில் கரைக்கப்பட வேண்டும். அதன் பெரும் பகுதி இந்திய பூமியின் விளை நிலங்களில் உரமாகப் பயன்பட வேண்டும்.

நான் எனது பால்ய காலத்திலேயே அலகாபாத்தில் சிந்திசைக்கும் கங்கை, யமுனை நதிகளோடு உறவு கொண்டேன். நான் வளர வளர அந்த உறவும் மலர்ந்தது. எனது அஸ்தியைக் கங்கையில் கரைக்கச் சொல்வது இந்த உணர்வுகளின் பின்புலத்தில்தான். இதில் மதத்தின் உணர்வுகள் சிறிதும் இல்லை.



அந்த ஜீவநதிகளின் நுரையுமிழும் நீர்ப்பெருக்கின் ஒரு பகுதியாக மாறி விட்ட இந்த தேசத்தின் சரித்திரம், இதிகாசங்கள், நமது பரம்பரைகள், நாடோடிப் பாடல்கள், கிராமியக் கதைகள் இவைகளைப் பற்றியெல்லாம் நான் அடிக்கடி சிந்திக்கிறேன். இந்த மகத்தான செல்வங்களை அந்த நதிகளோடு நிரந்தரமாக இணைத்து விட்ட கால வழிக் கனவுகளை நான் தரிசிக்கிறேன்.

அந்த ஜீவநதிகளின் பல்வேறு நிலைகளையும், பருவ கால மாற்றங்கள் அங்கே பிரதிபலிப்பதையும் கூட நான் கவனத்தோடு ரசித்திருக்கிறேன்; குறிப்பாக கங்கை நதி இந்தியாவின் நதி—இந்த மக்களின் 'செல்லப்பிள்ளை.' பல இனங்களைப் பற்றிய ஞாபகக் குறிப்புகளும், இந்தியத் தாயின் நம்பிக்கைகளும், சஞ்சலங்களும், அவளுடைய இனிய பாடல்களும், வெற்றி தோல்விகளும் கங்கையோடு தான் பிறந்தன. அவளுடைய மடியில்தான் அவை வளர்ச்சி பெற்றன.




எப்போதும் ஓடிக் கொண்டிருக்கிற—எப்போதும் மாறுபடாத, அந்தப் புனித கங்கைதான் இந்தியாவின் கால முதிர்ச்சி பெற்ற பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் 'குறியீடாக' விளங்குகிறாள். நான் நேசித்த இமாலயத்தின் பனி போர்த்த சிகரங்களையும் ஆழமான பள்ளத்தாக்குகளையும் அவள்எனக்குநினைவுபடுத்துகிறாள்.

காலைச் சூரிய வெளிச்சத்தில் இதழ் மலர்ந்து நடனமாடி, மாலை நிழல்மடியில் இருள், சோகம் இவற்றின் ரகசியமாகி, மழைக் காலத்தில் சின்னஞ்சிறிய அமைதியோட்டம் மிகுந்த ஓடையாகி, பருவக் காற்றின் விசிறலில் கடலை நிகர்த்து. அதன் அறிவாற்றலையும் பெற்று விளங்கும் 'அவள்' நிகழ்காலச் சமவெளியில் கடந்த காலத்தின் ஞாபகச் சின்னமாக எதிர்காலக் கடலை நோக்கிச் 'சங்கம யாத்திரை' செய்பவளாக எனக்குத் தோற்றுகிறாள்.

நான் பழைமைவாதி இல்லையெனினும் இந்தியா, அவளுடைய ஆத்மாவையும், உடலையும் வருத்தும் எல்லா இன்னல்களிலிருந்தும் விடுபட வேண்டுமென்று விரும்புகிறேன். எனவே பழமையோடு என் தொடர்புகளை முழுமையாகத் துண்டித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. ஞாபகத்தின் வசப்படாத சரித்திரத்தின் விடியற்பொழுதில் உருவாக்கப்பட்ட இந்தியாவின் உடைக்க முடியாத நெடிய சங்கிலியில் நம் அனைவரையும் போல் நானும் ஒரு தொடரே. அந்தத் தளையினையே கருவூலமாக்கி, அதிலிருந்து மனக் கிளர்ச்சியினையும் பெறுவதால் நான் அதை உடைத்தெறிவதைப் பற்றிய சிந்தனைக்கு இடமில்லை. எனது விருப்பங்களுக்குச் சாட்சியமாகவும், இந்தியாவின் பரம்பரைப் புகழ் மிக்க பண்பாட்டிற்கு நான் செலுத்தும் வீர வணக்கமாகவும் எனது 'அஸ்தி' அலகாபாத்தின் கங்கையில் வீசியெறியப்பட வேண்டும். இந்தியாவின் கரைகளைத் தனது நெடிய அலை வீச்சால் புனிதப்படுத்திக் கொண்டிருக்கும் பெருங்கடலுக்கு அது கொண்டு செல்லப்பட வேண்டும். இது எனது வேண்டுகோள்.

எனது அஸ்தியில் பெரும் பகுதி விமானத்தின் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, ஆகாயத்திலிருந்து உழவர்கள் பாடுபடும் வயல்வெளிகளில் வீசப்படவேண்டும். எனது அஸ்தி அங்கே இந்த தேசத்தின் மண்ணோடும், புழுதியோடும் கலந்து என்றும் இந்தியாவைப் பிரியாதிருக்க வேண்டும்.



உலகப் பெருந்தலைவர்கள் வரிசையில் சிறப்புமிக்க இடம் பெற்று இந்தியத் துணைக்கண்டத்திற்குத் தனிப் புகழிடம் தேடிக் கொடுத்துப், பூசல்கள் பிளவுகளால் நாடு கேடடையாமல் பாதுகாத்துப், பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படாமல் தடுத்து வந்த மாபெரும் காவலர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்.

நேரு பெருமகனாருக்கு நாம் காட்ட வேண்டிய மரியாதை உணர்வைச் சொல்லாலும் செயலாலும் நேர்மையாலும் நன்னெறியாலும் அனைவரும் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.



(சென்னை மத்திய சிறையிலிருந்து அண்ணா விடுத்த இரங்கற் செய்தி.)



# இனியவை இருபது

## முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

# 8. கொடுங்கோலன் நீரோ.

ரோம் நாட்டு வரலாற்று வானிலே ஒளி சிந்தும் நிலவாக சீசரும், மினுமினுக்கும் தாரகைகளாக அந்தோணியும், கிளியோபாத்ராவும் திகழ்ந்தனர். அந்த வரிசையில் நீரோவும், மார்க்கஸ் அரிலீயஸும் இடம் பெற்றுள்ளனர்.

நீரோ என்றதும் ''ரோம் தீப் பற்றி எரியும்பொழுது யாழ் வாசித்தான்'' என்ற வாசகங்கள் தான் நினைவுக்கு வரும்.

கி. பி. 64 ஜூலைத் திங்கள் 18-ஆம் நாள் ஐரோப்பாவின் தலைவி என்றும், அழியாவரம் பெற்றஅழகுத் திருநகர் என்றும், ஏழு குன்றுகளின் மீதெழுந்த எழில் நகரம் என்றும் வாலாற்றுப் புலவர்களால் வருணிக்கப்பட்ட ரோம் நகரம் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது.

வானளாவிய தேவாலயங்கள்—
வனப்பு மிக்க அரண்மனைகள்—
வீர மறவரின் விளையாட்டரங்கங்கள்—
வேல்விழி மாதருடன் உலவிக்குலவிய கவின்மிகு மாளிகைகள்—
பளிங்குக் கல் மாடங்கள்—
பனி மலர்த் தோட்டங்கள்—
பாவாணரின் நூலகங்கள்—
கலைப் பொருள் கூடங்கள்—

அத்தனையும் எரிந்தன.

சாய்கின்ற கட்டடங்களின் பேரோசை;
சாவின் மடியில் இளையோரும் முதியோரும் ஆடவரும் பெண்டிரும் அழுது அரற்றுகின்ற ஓலங்கள்;

எங்கும் கேட்டன.

நள்ளிரவில் பற்றிய தீ நாளெல்லாம் எரிந்தது.

மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, ஓடி ஒளிய இடம் இன்றித் தவித்தனர்.

ஆனால், இத்தனைக்கும் கலங்காமல், தீ அண்டாத உப்பரிகையில் நின்று கொண்டிருந்தான் நீரோ.

கனலைக் கண்டதும் அவனுடைய கண்களில் ஒருபுதுமலர்ச்சி!

''ஆகா! எத்தனை அழகான தீ ஜ்வாலைகள்? என் அருமைத் தலைநகரம் எரிகின்ற அழகே அழகு! ட்ராய் நகரம் அடியோடு பற்றி எரிந்த அற்புதக்காட்சி என் நினைவுக்கு வருகிறது.

என் நெஞ்சில் புதுமையான கவிதை ஒன்று ஊற்றெடுக்கிறது. ''யாரங்கே! அந்த யாழைக் கொண்டு வா!'' என்று கூறி, வந்த யாழை மீட்டிப் பாடிடலானான் நீரோ மன்னன்.

இது என்ன கொடுமை என்று கேட்கத் தோன்றும் நமக்கு.

''மழை வளங் கரப்பின் வான் பேரச்சம்
பிழையுயிர் எய்திற் பெரும் பேரச்சம்''

என்று அஞ்சி வாழ்ந்த அரசர்களின் தண்ணிழற் கொடையின் கீழ் வாழ்ந்தவர்களல்லவா நாம்! அப்படித்தான் தோன்றும்.

1967-ல் சென்னை நகரிலும் தமிழகத்தின் ஒரு சில பகுதிகளிலும் தீ பரவிற்று.

தானாக ஏற்பட்ட தீயா?
கொடியவர் இட்ட தீயா?
ஏழைகளின் குடிசைகளில் ஏன் தீயிட்டனர்?

அவர்களின் அல்லலில் என்ன இன்பம் காண இங்ஙனம் செய்தனர்?

என்ற கேள்விக் குறிகள் நீண்டு கொண்டே போயினவே யன்றித் தீக்குக் காரணத்தையோ, தீயிட்டவரையோ முழுமையாகக்கண்டு கொள்ள முடியவில்லை. ''எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'' என்று அறிவுரைத்த அவராலேயே இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லையே!

காரணத்தைக் காணத் துடித்த என் மனத்தில்

''முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்க மூள்கவே''

என்ற பட்டினத்து அடிகளின் பாடல்தான் நினைவுக்கு வந்தது.

கற்புக்கரசி கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழியனிடம் வழக்குரைத்துத், தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிலை நாட்டிக் கணவனை இழந்த கவலை ஆவேசமாக மாறி, நகரமெல்லாம் சுற்றித் திரிந்தாள்! அப்பொழுது

''பார்ப்பா ரறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி யெனு மிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தோர் பக்கமே சேர்க''

என்று மதுரையைப் பற்றி எரிந்த தீயைப் பார்த்துக் கதறிய காட்சியும், எல்லையற்ற துன்ப நிலையிலும் தமிழ்ப் பெண் ஒருத்திக்கு இருந்த அனுதாப உணர்வும் என் நினைவில் வரத் தவறிடவில்லை. அந்தத் தீக்குப் பின்னர் மதுரை நகரம் புதுப்பிக்கப்பட்டது என்று வரலாற்றுக் குறிப்புக்கள் காணக் கிடக்கின்றன.

ஒவ்வொரு தீயும் ஏற்பட்ட பிறகு, தீயால் அழிக்கப்பட்ட இடங்கள் புது நகரங்களாக உருப் பெற்றன என்பதுதான் வரலாறு. பாவம்; அது புரியாதவர்கள் தீயிட்டு அரசைக் கவிழ்க்க முடியும் என்று ஆருடம் கணித்தனர்!

''ரோம்நகரைமுற்றிலும் அழித்துவிட்டுப், புதிய நகர் ஒன்றைக் கட்டி, அதற்கு ''நீரோ போலிஸ்'' ( Nero Polis ) என்று பெயரிடவேண்டுமென்று நீரோவுக்கு ஓர் ஆசை. அதனால் அவனே ரோமுக்குத் தீவைத்துவிட்டான்'' ''ட்ராய் நகரம் எரிந்ததை அகக் கண்ணால் கண்ட நீரோ புறக் கண்ணால் கண்டு கவிதை ஒன்று எழுத வேண்டுமென்ற எண்ணத்தில் ரோம் நகருக்குத் தணலை மூட்டி விட்டான்'' — இப்படியெல்லாம் பேசப்பட்டன வீதியோரங்களில். நகரை எரித்து அழித்ததே அவன் தான் என்ற எண்ணம் எங்கும் எழலாயிற்று.

இது உண்மை தானா?

வரலாற்று அறிஞர்களில் சிலர் உண்டு என்பர்; சிலர் இல்லை என்பர். அப்படியானால் ரோம் நகருக்குத் தீயிட்ட கொடியவர்கள் யார்?

நீரோ மன்னன் ரோம் நகரில் வாழ்ந்த கிருத்துவர்கள்தான் இதற்குக் காரணம் என்று கூறி, அவர்களைப் பழி வாங்கினுன். சரித்திர ஆசிரியர்கள் இந்த நடவடிக்கையை ''முதல் கிருத்துவ அடக்குமுறை அட்டூழியம்'' (First Christian Persecution) என்று வர்ணித்தனர். நூற்றுக்கணக்கான கிருத்துவர்கள் கொல்லப்பட்டனர். மிருகங்களின் தோல்களுக்கிடையே மனிதர்களை அடைத்து நாய்களிடம் எறிந்தான் நீரோ.

சிலரைச் சிலுவையில் அறைந்தான்.

சிலரை உயிருடன் கொளுத்தினுன்.

சிலரை வெடிமருந்துகள் வைத்துக்கொன்ருன்.

இதையெல்லாம் பார்த்த மக்கள் தீயிலும் கொடியவன் நீரோ என்றனர். ஒன்பது நாட்கள் தான் ரோம் நகரில் தீ எரிந்தது. ஆனுல், ரோம் சாம்ராஜ்யத்தைப் பற்றிய நீரோ என்னும் தீ, பதினுன்கு ஆண்டுகள் எரிந்தது. அந்தப்பதினுன்கு ஆண்டுகள் ரோமானியருக்கு வனவாசக்காலமாக இருந்தது. கொடுமைக்கு ஆளானேர், கொல்லப்பட்டவர், கசக்கி எறியப்பட்ட மலர்கள் கணக்கிலடங்கா!

நீரோவின் தாய் அக்ரிப்பாளு சிறந்த அழகி. அழகு தான் அன்றைய ரோமாபுரி அரண்மனைக்கு நுழைவுச் சீட்டு. அதை அவள் பெற்றிருந்தாள்.

கம்பீரமான உருவம்!

கமலக் கண்கள்!

கருநிறக் கூந்தல்!

புன்னகை அதரம்!

என்று அவளின் அழகை வர்ணித்துக்கொண்டே போகலாம்.

அகஸ்டஸ் பேரரசனின் பேத்தியல்லவா அவள்] அவளது உள்ளமும் உடலும் பண்பட்டு விரிந்த மலராகி மணம் பரப்பியதும் டோமிட்டஸ் என்பவனை மணம் செய்து கொண்டு வாழ்ந்தாள். ஒரு மகனையும் ஈன்ருள்.

அக்ரிப்பாளுவுக்குக் கணவன் என்னும் விலங்கு கத்தரிக்கப்பட்டு விதவைக் கோலம் என்னும் தோற்றம் கிடைத்தது.



அகஸ்டஸ் ஆண்ட காலம் பொற்காலம்

அழகும் சரசமும் ஒருங்கிணைந்த அவள், அரண்மனைக்கு நுழைவுச் சீட்டு பெற அதிக நாட்கள் ஆகவில்லை.

கிளாடியஸ் ஆட்சிக்கு வந்ததும் சாகசங்கள் பல புரிந்து அரசனின் அன்புக்குப் பாத்திரமாகி அரசியானுள்.

அரசன் கிளாடியஸ்ஸோ அக்ரிப்பாளுவின் அடிமையானுன்.

நீரோ, கொடுங்கோலன் கொலைகாரன் எனினும் ஒரு கவிஞன், கலாரசிகன்



அரசி அக்ரிப்பாளுவின் கட்டளைக்காக வெளிநாட்டவரும்—வீரர்களும்—ராஜதந்திரிகளும்—காத்திருந்தனர்.

உலகின் பல பாகங்களிலிருந்தெல்லாம் அவளை மகிழ்விப்பதற்காகப் பரிசுப் பொருள்கள் வந்து குவிந்தன.

அக்ரிப்பாளுவின் ஆதரவு பெற்றோருக்கே அரசவையிலே இடம் கிடைத்தது. அவளின் முன்னுள் காதலர்கள் ரோம் செனேட் சபை அங்கத்தினர்கள் ஆனுர்கள். அறிஞர்களும் திறமைசாலிகளும் இடம் பெற்றிருந்த செனேட் சபையில் அக்ரிப்பாளுவின் சொந்த வாழ்க்கைக்கு உதவியவர்கள் இடம் பெற்றனர்.

பாப்பையா புகழ்மிக்க குடியில் பிறந்தவள். எழில் மிக்கவள். ரூபஸ் கிரிஸ்பினஸ் என்பவனை மணந்து கொண்டாள். பாப்பையாவை மணம் செய்து கொண்டதும், அதிர்ஷ்டத்தையே அணைத்துக்கொண்டதாக அவன் கருதினுன்.

ஆனுல் கொஞ்சநாட்களிலேயே ஆத்தோ என்ற ஆணழகன், நீரோவின் நண்பன், பாப்பையாவின் இரண்டாவது கணவன் ஆனுன். நண்பனை வஞ்சித்துப் பாப்பையாவையும் மணந்து கொண்டான் நீரோ.

ஆக்டேவியா என்பவள் நீரோவின் முதல் மனைவி. அடக்கமும், அன்பும், அறிவும், பண்பும் கொண்ட ஆக்டேவியாவை நீரோவுக்குப் பிடிக்கவில்லை. பாப்பையா, மெசாலினு போன்றவர்கள் தேவைப்பட்டார்கள். ஒரு நாள் ஆத்திரத்தில் கர்ப்பிணியாக இருந்த ஆக்டேவியாவைக் காலால் உதைத்துக் கொன்று விட்டான் நீரோ.

அவனை மணக்க மறுத்த மூன்ருவது பெண் ஒருத்தியும் கொல்லப்பட்டாள்.

நான்காவதாக ஒருத்தியை மணக்க, அவளுடைய நாயகன் கொல்லப்பட்டான். இப்படித் தனக்கு ஆசைநாயகிகளாக வர மறுத்தவர்களையும், வருவதற்குக் குறுக்கே தடையாக நின்றவர்களையும் கொன்று குவித்தான் நீரோ.

பதினேழாவது வயதில், செனேக்கா ( Senaca ) என்னும் அறிவுமிக்க, ஆசானின் துணையாலும், புரஸ் ( Burres ) என்னும் ஆற்றல்மிக்க தளபதியின் உதவியாலும், அன்னையின் தயவாலும் ஆரம்பத்தில் நீரோவின் ஆட்சிச் சக்கரம் சிறப்பாகவே சுழன்றது.

ஆனால், அந்நிலை நீடிக்கவில்லை. அக்ரிப்பானாவின் பிடியிலிருந்து நீரோவை மீட்க செனேக்காவும் புரஸ்ஸூம் முயன்றனர். தன் பிடியிலிருந்து மகன் விலகிப் போகிறான் என்று தெரிந்த அக்ரிப்பானா, பிரிட்டானிகஸ் என்பவனுக்கு முடிசூட்டச் சூழ்ச்சி செய்தாள். பிரிட்டானிகஸ் நீரோவால் கொல்லப் பட்டான்.

ஆக்டேவியா, பாப்பையா இவர்கள் அழகில் மயங்கிக் கிடக்கிறான் தன்மகன்; தனக்கு அரசவையிலும் நாட்டிலும் செல்வாக்கு இல்லை என்பதை உணர்ந்த அக்ரிப்பானா செல்வாக்குப் பெறுவதற்காக மகனையே மயக்கத் திட்டமிட்டாள் ஒரு காதலியைப்போல, என்ற சரித்திரக் குறிப்புகளைப் படிக்கும்போது நம் மனம் கூசத்தான் செய்கிறது.

அக்ரிப்பானாவின் செயலை வெறுத்த நீரோ அவளை ஒழித்திட ஏற்பாடு செய்தான். பட்டத்தரசிகள் செல்லும் படகிலே அக்ரிரிப்பானாவை ஏற்றி, அனுப்பிவைத்தான். திட்டமிட்டபடி, படகு இடையிலே உடைந்தது; பலர் இறந்தனர். ஆனால் அக்ரிப்பானா உயிர் தப்பினாள். பின்னர் நீரோவினால் அனுப்பப்பட்டவன், அக்ரிப்பானாவைக் கொலை செய்யச் சென்றான்.

''நீரோ என்ற கொடியவனைப் பெற்ற இந்த வயிற்றைக் கிழித்தெறி'' என்று மனம் நொந்து கதறினாள்; கொலையுண்டு மாண்டாள். ஆடம்பர வாழ்க்கையின் இருப்பிடம், ஆபாசத்தின் களஞ்சியம் அழிந்தது.

தன்மகனைத் பெயரளவில் அரசனாக்கித் தானே ரோம் சாம்ராஜ்யத்தை ஆள வேண்டுமென்ற தீய எண்ணத்தால் கணவனுக்கே நஞ்சிட்டாள் அந்தக் காரிகை—பின்னர், தானும் தன் மகனால் கொலை செய்யப்பட்டு மாண்டாள்.

நீரோவின் வரலாற்றில் செய்யப்பட்ட கொலைகள் ஏராளம், ஏராளம். ஆற்றல் மிக்க தளபதி புரஸ்ஸூம் மாண்டு போனான். ஆசான் செனேக்காவும் அரசியலை விட்டு ஒதுங்கியிருந்தான். பின்னர் அவனும் தற்கொலை செய்து கொண்டு மாளவேண்டி நேர்ந்தது.

அலுவலர்கள், அரசியல் வித்தகர்கள், புகழ்பெற்ற புலவர்கள், படைவீரர்கள் பலர் அவனால் கொல்லப்பட்டனர். செனேட் உறுப்பினர்கள் அத்தனை பேரையும் அழிக்கப் போகின்றானே நீரோ என்ற அச்சம் பரவியது. ரோம் மக்களுக்கு அவன் மேலிருந்த ஆத்திரமும் வெறுப்பும் வளர்ந்து கொண்டே போயின. நீரோ என்ற பெயரே பலருக்கு

வைகறைப் பொழுதில் துயில் எழுவது முதல் நடு இரவில் உறங்கப் போவது வரை நாட்டு நலனே கவனமாக, கருமமாக இருந்த மார்க்கஸ் அரிலியஸ்



எரிச்சலை யூட்டிற்று. நீரோ கொலைகாரன், கொடுங்கோலன் என்ற பெயரினைச் சுலபத்தில் பெற்றுவிட்டான்.

கிரேக்கத்திற்குச் சென்று, ஒலிம்பிக் முதலான விளையாட்டுகளில் பங்கெடுத்துக் கொண்டு கி.பி.67-ல் தாயகம் திரும்பினான். ஆனால், அவனுக்கெதிராகப் படை வீரர்களும், கிளர்ச்சிக்காரர்களும் திரண்டு நின்றனர்.

ரோம் சாம்ராஜ்யச் சேனையின் அதிபனாக வீற்றிருந்த கால்பா புரட்சிக் கொடியைப் பறக்க விட்டுவிட்டான்.

"மக்களை மதியாத மன்னனை நானும் மதியேன்—அவனை முறியடித்து மக்களின் துயர் தீர்ப்பேன்" என்று கூறிக் கொண்டு ரோம் நகரை நோக்கிப் படையுடன் புறப்பட்டான்.

மது, மங்கை என்று அந்தப்புரத்திலே காலம் கழித்துப் பாடலிலும், உல்லாசத்திலும், பொழுதைப் போக்கிக் கொலை செய்வதற்கு அஞ்சாதவனாகிய நீரோவின் முடிவு நெருங்கிக்கொண்டே வந்தது. அப்பொழுது, அவனுக்கு வயது முப்பத்து ஒன்று.

புரட்சிக்காரர்களால் விரட்டப்பட்ட நீரோ நச்சுக்கிண்ணத்தோடு உலவினான்; தற்கொலை செய்துகொள்ள யத்தனித்தான்; இறக்க மனம் வரவில்லை. மெய்க்காவல் படையினரையும், நண்பர்கள் பலரையும் அடைக்கலம் தருமாறு வேண்டினான். அனைவரும் மறுத்துவிட்டனர். வேறு வழியின்றி, டைபர் நதியில் குதித்து உயிரை மாய்த்துக்கொள்ளத்திட்டமிட்டான். அங்கும் அவனுக்கு இறக்கத் துணிவில்லை. இறுதியில் ஒரு வேலையாள் அவனுக்குப் புகலிடம் தந்தான்.

"அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படையொடு" ஆண்ட நீரோ நான்கு மைல்கள் நடந்து நடை மெலிந்து நடு இரவில் அவன் வீட்டை நண்ணினான்.

"நீரோவைப்பிடித்துவந்து நிர்வாணமாக ஓரிடத்தில் கட்டிச் சாகும் வரை அவனைச் சாட்டையால் அடிக்க வேண்டு"மென்று செனேட் சபை தீர்ப்பளித்தது. எதிரிகளின்கரங்களால் சாகவிரும்பாத நீரோ தன் கைவாளை நெஞ்சில் பாய்ச்சிக் கொண்டு மாண்டு போனான்.

நீரோ, கொடுங்கோலன், கொலைகாரன் எனினும் ஓர் கவிஞன், கலா ரசிகன், நடிகனும் கூட. கிரேக்கக் கலையில், இலக்கியத்தில், மிகுந்த ஈடுபாடு உள்ளவன். ஏழைகளுக்குத் தாராளமாக நன்கொடை வழங்கினான். ரோம் நகரம் பாதிக்கு மேல் தீயினால் அழிக்கப்பட்ட பிறகு, அதனை அழகு மிக்க எழில் நகராக ஆக்கியதில் அவனுக்கு மிகுந்த பங்கு உண்டு. ஆனால் பாவம்; நீரோ மன்னனுடைய கொலை வெறி, அவனுடைய நல்லியல்புகளையெல்லாம் மறைத்துவிட்டது! நாகரிகச் சமுதாயம் என்று சொல்லிக் கொண்ட ரோமானியர்களில் நீரோ போன்ற இரக்கமற்ற, பண்பற்ற மன்னர்கள் பலர் இருந்தனர் என்ற எண்ணத்தைப் போக்குவதைப்போல, நீரோவுக்குப் பிறகு மார்க்கஸ் அரிலீயஸ் என்ற மன்னன் ரோம் சாம்ராஜ்யத்தைச் சிறப்பாக ஆளத்தொடங்கினான். மத்திய தரைக்கடல் நாடுகளின் மணியும் பொன்னும் மார்க்கஸ் அரிலீயஸ்ஸின் கால்களில் கிடந்தன.



அக்ரிப்பானாவின் அடிமையாகிய ளோடியஸ்

அரிலீயஸ் இறுதிவரை எளிமையாக உடுத்தான், சிக்கனமாக வாழ்ந்தான். வைகறைப் பொழுதில் துயில் எழுவது முதல் நடு இரவில் உறங்கப் போவது வரை நாட்டு நலனே அவன் கவனமாக, கருமமாக இருந்தது. எளியோரின் வரிச் சுமையைக் குறைக்க, அடிமைகள், பெண்டிர், குழந்தைகள், வாழ்வு சிறக்கச் சட்டங்கள் பல இயற்றினான். அரசியல் எதிரிகளுக்கும் தண்டனை தருவதில் சலுகை காட்டினான்.

ஆடம்பரங்களை அடியோடு தவிர்ப்பீர் (Block out vain pomp), பசியை ஒழிப்பீர் ( Quench apetite ), அறிவை அறிவால் கட்டுப்படுத்துவீர் ( Keep reason under its own control) என்பன அரிலீயஸின் மூன்று முக்கிய மந்திரங்களாகும்.

மார்க்கஸ் அரிலீயஸ் ஒரு தத்துவ மேதை, அமைதியை விரும்பியவன் அவன். ஆனால் அமர் முகத்து அஞ்சுகின்ற கோழை அல்லன். வாழ்நாள் முழுதும் அவன் புரிந்த இலக்கியப் பேருரைகளே இதற்குச் சான்று. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம், தன் எண்ணங்களையெல்லாம் எழுதி எழுத்தோவியமாக்கியவன். அவன் தனக்குத்தானே எழுதிக்கொண்ட உபதேச உரைகளைச் "சிந்தனை" என்னும் தலைப்பில் நூலாகக் கண்ட பொழுது அவனுடைய அறிவாற்றலை மேதினியே போற்றிற்று.

(தொடரும்)

# காலத்தை வெல்லும் கலை

மதுரை மாநகர்! சங்கம் வைத்துத்தமிழ்வளர்த்த மதுரை! அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியை வளர்த்தமையால் மதுரம்-இனியது-எனப் பெயர் பெற்ற மதுரை. மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையும் தன்னகத்தே கொண்டு செல்வம் கொழித்து நின்றமையால் நான் மாடக் கூடல் எனப் புகழ்பெற்ற மதுரை.

வெற்றி உலா வந்த அந்த வீர மறவர் கூட்டம் இன்று அங்கு இல்லை. நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்று நீதிக்கும் நேர்மைக்கும் இலக்கணமாய் வாழ்ந்த நக்கீரப் புலவன் நம்மிடையே இல்லை. தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்கள், கலையை வளர்த்திட்ட நாயக்க மன்னர்கள், வீர ராணி மங்கம்மாள் ஆகியோர் இறந்து பட்டனர்.

ஆனால் அவர்கள் வளர்த்த இன்பத்தமிழ், அவர்கள் உருவாக்கிய கலைக்கோயில்கள் இன்றும் அங்குக் கொலு வீற்றிருக்கின்றன. வானளாவி நிற்கும் மீனாட்சியம்மன் கோயிலின் கோபுரங்களும் எழில் சிந்தும் நாயக்கர் மகாலும் கூறாமல் கூறிடும் வீர காவியங்கள் எத்தனை எத்தனையோ!

புகழ்மிக்க இந்த மதுரையம் பதிக்குத் தங்கப் பதக்கத்தில் முத்துப் பதித்தது போல் புதிய சிறப்பொன்று விரைவில் வந்தடையவிருக்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் கண்டுபிடிப்பான அந்தக் கலையின் பெயர் 'ஒலி-ஒளிக்' கலையாகும். சன் எட் லுமீர் (Son et Lumiere-Sound and Light) என்று பிரெஞ்சு மொழியில் கூறப்படும் இக்கலையின் நோக்கம், பலவண்ண மின் விளக்கு ஒளியின் மூலமாகவும், இசை-உரையாடல் ஆகிய ஒலிகளின் மூலமாகவும் பார்ப்போரை வரலாற்றுக்காலத்திற்கே அழைத்துச் செல்வதாகும்.

சரித்திரப் புகழ்பெற்ற மாவீரர்கள் எழுப்பிய வரலாற்றுச் சின்னங்கள், காலத்தை வென்ற கலைஞர்கள் விட்டுச்சென்ற கலைச் சின்னங்கள் உலகெல்லாம் பரந்து கிடக்கின்றன. அவற்றை, நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுப் பயணிகள், ஆய்வாளர்கள், பல்கலைப் பயிலும் மாணவர்கள், பக்தர்கள் பார்த்துப்பரவசமடைகின்றனர்; பாராட்டுகின்றனர்; பயன் பெறுகின்றனர். ஆனால், அவற்றைப் பார்ப்போர் அனைவரது உள்ளத்திலும் ஓர் ஏக்கம், நிறைவேறா ஓர் அவா, குடிகொள்கிறது. இந்த வரலாற்று நாயகர்களுடன் வாழும்பேறு கிட்டவில்லையே! அவர்கள் வாழ்ந்த நாகரீக வாழ்வினை நேரிலே காண முடியவில்லையே என்ற ஏக்கம்தான், அது! பலருக்கு அந்தச் சின்னங்களின் பின்னணியில் பின்னிக்கிடக்கும் பெரிய வரலாறு தெரிவதில்லை.


## தமிழரசு

**சந்தா**

ஓர் ஆண்டு.... ரூ. 8.00

அரை ஆண்டு ... ரூ. 4.00

தனிப்பிரதி ... 35 காசுகள்

விவரங்களுக்கு:-

இயக்குநர்,

செய்தி, விளம்பரத்துறை,

தமிழ் நாடு அரசு — சென்னை, 9


இந்தக் குறைபாடுகளை நீக்கி ஒரு நிறைவினை ஏற்படுத்த வேண்டும், பண்டைக்கால வரலாற்றைக் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்று பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர் ஒருவர் விரும்பினார். அவர் விருப்பத்தில் மலர்ந்ததே இந்தக் கண்டுபிடிப்பு!

வரலாற்றுச் சின்னங்களைப் பற்றிய விளக்கங்களை அவர் 'டேப் ரிக்கார்'டில் பதிவு செய்தார். தனது வரலாற்றுக்கான வலிவு தர, ஒளியமைப்பைத் துணைக் கொண்டார். சம்பவத்தின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு வரலாற்றுச் சின்னத்தை ஒளிமயமாக்கி, 'டேப்'பில் உள்ள பின்னணிக் குரலை இணைத்து ஓட விட்டார்; விளைவு—பிரமிக்கத்தக்க அளவில் மகத்தானதாக அமைந்தது.

இன்று பிரான்சு நாட்டில் மட்டும் சுமார் பன்னிரண்டு இடங்களுக்குமேல் இந்த 'ஒளி ஒலி' அமைப்பு சுற்றுப்பயணிகளைக் கவரும் மிகப்பெரும் சாதனமாக அமைந்துள்ளது. பிரான்சைப் பின்பற்றி இங்கிலாந்து, அமெரிக்கா, எகிப்து, பெல்ஜியம், கிரேக்கம், இத்தாலி, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, ஸ்வீடன் போன்ற பல நாடுகள் இந்தக் கலையைத் தங்கள் நாட்டுக் கலைச் சின்னங்களுக்கு உயிரூட்ட நிறுவியுள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்தில் தற்போது டெல்லி, செங்கோட்டையில் சரித்திரப் புகழ்பெற்ற ஆறு கட்டடங்களில் இது அமைக்கப்பட்டுள்ளது. 1965-ஆம் ஆண்டு மார்ச் திங்களில்அன்றைய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியால் அந்த ஒளி-ஒலி அமைப்புத் துவக்கி வைக்கப்பட்டது. இப்போது ஆந்திரத்தில் உள்ள விஜயவாடாவில் ஒன்று உள்ளது.

அடுத்து, தமிழகத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் இதனை அமைக்க அரசு திட்டம் தீட்டியுள்ளது. சுமார் 22 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்த அமைப்பிற்கு மத்திய அரசு 18 லட்சமும் தமிழக அரசு 4 லட்சமும் செலவு செய்ய விருக்கின்றன. நாலாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் நிறுவப்படும் இந்த ஒலி-ஒளி அமைப்பு மதுரைக் கோவிலின் அழகுக்கே அணிசெய்வதோடு பல்லாயிரக் கணக்கான உள்நாட்டு-வெளி நாட்டுச் சுற்றுப் பயணிகளையும்

கவரும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

இந்த ஒலி-ஒளி அமைப்பினை உருவாக்குவதே தனிக்கலை. திறமைமிக்க தொழில் வல்லுநர்கள் பலர் இணைந்து மாதக்கணக்கில் நுணுக்கமாகச் செயல்பட்டு உருவாக்குவர், இந்த அரிய படைப்பினை! முதலில் வரலாற்று வர்ணனைகளும் (உரை நடையில்) இசையும் 'டேப்'பில் பதிவு செய்யப் படுகின்றன. பல தரப்பட்ட ஒலியில் இவை பதிவு செய்யப்படும்; இனிய சம்பவங்களை விளக்கிடும் காட்சிகளுக்கான வர்ணனை மெல்லிய மிருதுவான குரலிலும், இனிய இசையுடனும் பதிவுசெய்யப்படும். வீர முழக்கங்கள், களத்தினில் நடைபெறும் போர்க்காட்சிகள் போன்றவை முரசு அதிர, வீரம் பொங்கும் குரலில் பதிவு செய்யப் படும்.

எடுத்துக்காட்டாகக் கற்புக்கரசி கண்ணகி, பாண்டிய மன்னனின் அரண்மனை புகும் காட்சியைச் சொல்லும் போது கோபத்தைக் குறிப்பிடச் சிவப்பு ஒளியும் வீரமிக்க உரையாடலும் பயன் படுத்தப்படும்.

இந்தக்காட்சி அமைப்புகள் திரைப்படங்களைப் போன்று இரவில் காட்டுவதற்கென்று அமைக்கப்படுபவை. குறிப்பிட்ட சில மணி நேரங்களில் மட்டும் காட்டப்படும். இந்தக் காட்சிகளுக்காக, மிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு எதிரில் மிகப் பிரகாசமான மின் விளக்குகளைப் பொருத்துவர். பகல் நேரங்களில் அவை அந்த இடங்களின் சூழ்நிலையைப்பாதிக்காமல் இருக்க மறைத்து வைக்கப்படும். இதற்காகத் தனி இருக்கைகள் போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி அவற்றின் உட்புறத்தே இந்த விளக்குகளை அமைத்திடுவர். பகலில் மூடி வைக்கப்படும் இவ் விளக்குகள், காட்சி துவக்கும்போது திறக்கப்படும்; கலைச் சின்னங்களின் அழகும், நவீன அமைப்புக்களினால் அவற்றின் பழம் பெருமையும் சிதைக்கப் படாமலிருக்கவே இந்த ஏற்பாடுகள்! சூழ்நிலைக்கு ஏற்றபடி, நீலம் சிவப்பு, மஞ்சள் ஆகிய வர்ணங்



விஜயவாடாவில் உள்ள காந்தி மலை—பகல் தோற்றம்

கள் விளக்குகளுக்குப் பயன் படுத்தப்படும்.

உரையாடல், இசை பதிவு செய்யப்பட்ட 'டேப்' அடங்கிய ஒலி அமைப்புகள் கட்டடங் களின் உள்ளே ஒரு தனி அறை யில் அமைக்கப்பட்டிருக்கும்; அங் கிருந்து தேவைப்படும் இடங் களுக்கு ஒலி பெருக்கிகள் இணைக் கப்படும். காட்சி துவங்கும் போது ஒலியும் ஒளியும் இணைந்து செயல்படும். எடுத்துக் காட்டாக விசுவநாத நாயக்க மன்னன் மதுரைக் கோவிலைச் செப்ப னிடும் காட்சி விளக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம்.

காட்சி-1. ''இதோ வருகிறார் விசுவநாத நாயக்க மன்னர்..'' என்று கம்பீரமான குரல் ஒலிக் கும். பின்னணி இசையும் அதற் கொப்ப இசைக்கும். அதே நேரத்தில் அவர் வருவதாகக் காட்டப்படும் பாதை மாத்திரம் விளக்கால் ஒளி வீசப்படும். அவர் செல்லுவதைக் காட்டுவதுபோல் ஒளி தொடர்ந்து சென்றுகொண் டிருக்கும்.

காட்சி-2. கோபுரம் கட்டப் படுகிறது என்பதைக் காட்டும் போது கோபுரத்தின் அடித்தளத் திலிருந்து மெள்ள மெள்ள ஒளியினை மேலே வளர விடுவார் கள். கோபுரம் உருவாவது போன்ற பிரமையை-கற்பனையை அது பார்ப்போர் மனத்தில் உரு வாக்கும்.

இது சொல்லி விளக்கக்கூடிய கலை அல்ல. பார்த்து, கேட்டு, ரசித்திட வேண்டிய அரிய, பெரிய, நுணுக்கமான கலை.

சுற்றுலாச் சொர்க்கமான ரோமாபுரி சென்று வந்த முதல் வர் தமிழகத்தையும் சுற்றுலாச் சொர்க்கமாக ஆக்கிட வேண்டு மென்று அவாக் கொண்டுள்ளார். மதுரைக் கோவிலில் ஒளி-ஒலி



இரவில், ஒலி—ஒளி அமைப்பினால் கிடைக்கும் தோற்றம்

அமைப்பை விரைவில் செயல் படுத்திட வேண்டுமென்பது அவ ரது திட்டம்.

மதுரையில் இந்த ஒளி-ஒலி அமைப்பு ஏற்படுத்தப்படுவது, மதுரை மாநகருக்கு மட்டுமின் றித் தமிழகத்திற்கே பெருமை யைத் தேடித்தரும் என்பதில் ஐயமில்லை.

# எளிய மருந்து

**து**ளசி ஓர் அற்புதமான மூலிகை ; நாடெங்கும் தானே முளைத்து வளர்வது ; வெப்பமான இடங்களிலும் வேர்விட்டுச் செழிப்பது ; வீட்டிலும் வளரும்; காட்டிலும் வளரும்.

அதில் சிறிது காரமும் துவர்ப்பும் உண்டு ; கற்பூரத்தை வாயிலிட்டால் 'விறுவிறு' என்றிருக்குமல்லவா ? அதைப்போன்று நாக்கிலே ஒரு விதச் சுவை தோன்றும்.

துளசியில் கருந்துளசி, வெள்ளைத் துளசி என்பவை மிகச் சிறந்தவை ; வெண் துளசியை நற்றுளசி என்று சொல்வார்கள். இவை தவிர நிலத் துளசி, நாய்த் துளசி, முள் துளசி செந்துளசி, கல் துளசி எனவும் பல பிரிவுகள் உண்டு. இச் செடி ஏறக்குறைய இரண்டு மூன்றடி உயரம் வரை வளரும்.

துளசியிலே பயன் படாத பொருளேயில்லை; அதனைத்தழுவி வரும் காற்றே நோய்களை நீக்கும் ; 'துளசி யிருக்குமிடத்தில் துளிக் கொசுவும்' கிடையாது என்பார்கள் ; துளசி வாசனையால் கொசுவும் ஓடி விடுமாம்.

**துளசி** இலையை அரைத்துக் கால் முதல் அரை அவுன்ஸ் சாறு பிழிந்து கால் அல்லது அரைத் தேக்கரண்டி தேன் சேர்த்துக் காலை மாலை பருகலாம்.

துளசியைப் பாலிலிட்டுக் காய்ச்சிப் பருகினால் பாலிலுள்ள குற்றங்கள் நீங்கும் ; கபத்தைக் கரைக்கும்.

இலையை நீராவியில் வேகவைத்துப் பிழிந்து எடுத்த சாற்றுடன், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, இவை ஒவ்வொன்றும் அரை அரிசி 'எடை' சேர்த்துச் சிறு குழந்தைகளுக்குக் கொடுக்க, கபக்கட்டு, இருமல், காய்ச்சல், மூச்சுத் திணறல், இழுப்பு, கணை, மாந்தம் இவற்றில் எவை இருந்தாலும் அவற்றை நீக்கும்.

அரைத் தேக்கரண்டி காலையும் மாலையும் பருக வேண்டும்; நோய் நீங்கும் வரை பருகவேண்டும்.

எத்தனையோ பேர் பொடி போடுகிறார்கள் ; பொடி விஷயம் நாட்டிலே பெரிய விஷயமாக இப்போது இருக்கிறது ; புகையிலைக்குப் பதிலாகத் துளசியை உலர்த்திப் பொடி செய்து மூக்கிற்கு இட்டால் மூக்கடைப்பு, பீனசம் முதலியவை நீங்கும்.

துளசிச் சாற்றைப் பூண்டுச் சாற்றுடன் கலந்து இரண்டோர் துளிகள் காதில் ஊற்றி வந்தால் காது நாற்றம், குத்தல், காதில் சீழ் வடிதல் முதலியன நீங்கும்.

துளசிச் சாற்றையும் அளவாகத் தேனையும் கலந்து அஞ்சனம் போல் கண்களுக்குத் தீட்டின் கண்வலி குணமாகும்.

துளசி இலையால் உடலில் வெப்பம் சிறிது உண்டாக்கி, கோழையை அகற்றி, வியர்வையைப் பெருக்கி, பசியையும் ருசியையும் உண்டாக்கும் ; உண்ட உணவை விரைவில் செரிக்கச் செய்யும் ஆற்றல் துளசிக்கு உண்டு.

''வில்வாதி குடிகா' எனும் மருந்தில் துளசிப் பூ சேர்க்கப்படுகிறது ; இம் மருந்து விஷக்கடி, பேதி, வாந்தி, செரியாமை, இடு விஷங்கள் முதலியவற்றை நீக்க வல்லது. மேலும் துளசிச் செடியை அப்படியே செடி முழுவதும் (சமூலம்) உபயோகித்துச் சுப்ரவடி எனும் மாத்திரை செய்யப்படுகிறது. இம் மாத்திரை இருமல், தொண்டைக்கட்டு, நீர்க்கோவை, ஆஸ்த்மா, போன்ற நோய்களை நீக்கும்.

> **மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்பார்கள்; அதுபோல் சிறிய துளசி இலை—பெரும் பெரும் நோய்களைக் குணப்படுத்தி வருகிறது. அந்தத் துளசியின் பேராற்றலைத் தொகுத்துச் சொல்கிறது இந்தக் கட்டுரை.**

'' பிள்ளைப் பேற்றின் பின்னர் தாய்மார்கள் வேதனைப் படுவதுண்டு ; அப்போது துளசி விதையைக் குளிர்ந்த நீரிலரைத்துக் கொடுக்க வேதனை குறையும்; பொடியிருமல் போகும் ; நீரிழிவு நீங்கும் ; வெப்பம் குறையும்.

துளசியில் **நற்றுளசி** கபம், வயிற்றுளைச்சல், அஸ்திகதசுரம், தாகம், சுர மாந்தம், அரோசகம், ஆகியவற்றை நீக்கும்.

**நிலத் துளசி** கணைச் சூடு, பல பித்த நோய்கள், குளிர் காய்ச்சல், வாத சுரம், சிறு குழந்தை கட்குமுத் தாய்ப் பாலால் வரும் மாந்தம் முதலியவற்றை நீக்கும்.

**நாய்த் துளசி**, பொடியிருமல், கோழை, சன்னி, வாதசுரம் இவைகளைப் போக்கும்.

**முள் துளசி** எலி விடம், வெட்டுப்புண் காயம் ஆகியவற்றை மாற்றும்.

**செந்துளசி** கபப் பெருக்கு, வாத பித்த கப நோய்களை நீக்கும்

**கருந் துளசி** இருமல், இரைப்பு, நெஞ்சில் கோழை சேருவதனாலுண்டாகும் 'குறு குறு' என்ற சத்தம், கிருமி, இருமலினால் ஏற்படும் கேவல், மார்புச் சளி, சூலை, சன்னி, பாத சுரம் ஆகியவற்றை நீக்கும்.

பொதுவாகக் கருந் துளசியும், வெள்ளைத் துளசியுமே மிகுதியும் பழக்கத்தில் இருப்பவை ; வெள்ளையை விடக் கருந்துளசியே சாலச் சிறந்தது. துளசியின் குணத்தைத் தொகுத்துச் சொல்வோம். காரமும் துவர்ப்புமுள்ள இந்த இலைச் சாறு இதயத்திற்கு வலிமை யூட்டும்; உடலில் சிறிது வெப்பத்தை ஊட்டிப் பித்தத்தை ஒரு சிறிது பெருக்கிப் பசியை உண்டாக்கும். குஷ்டம். மூத்திரத் தடை, இரத்தக் கோளாறுகள் இவற்றை நீக்குவதுடன் பசி, ருசி பெருக்கி உண்ட உணவை எளிதில் செரிக்கச் செய்யும். வயிற்றுப் பூச்சிகளை அகற்றும்; கோழையை அறுக்கும். உணர்ச்சியும் சுறுசுறுப்பும் ஊட்டும்.

அற்புதமான இந்த மூலிகை நமக்கு இயற்கை அளித்த செல்வமல்லவா ?

# வாழ்வோம் வாரீர்

கவிஞர் ஈரோடு தமிழன்பன்



நிழலிருந்தால் பூங்காவை நினைப்ப தில்லை !
நிறமிருந்தால் வயிரத்தை அணிவ தில்லை !
அழகிழந்தால் மலரெடுத்துச் சூடல் இல்லை
அழல்,வெப்பம் இல்லையென்றால் மதிப்ப தில்லை !
குழல்,கிறல் பட்டதென்றால் இசைப்ப தில்லை !
குறைபட்ட காவியத்தைப் படிப்ப தில்லை !
எழுமான உணர்வற்ற பேரை எல்லாம்
இங்கெவரும் மனிதரெனச் சொல்வ தில்லை !

உருள்தேருக் கச்சாணி வேண்டும் ! மக்கள்
உயிர்வாழ்வுக் கதுபோல மானம் வேண்டும்.
அருங்கவியில் உயிரில்லா எழுத்தை எண்ணி
அலகிடுதல் இலக்கணத்தார் வழக்க மில்லை !
பெருமானம் அற்றவரை எண்ணிப் பார்க்கும்
பிழைச்செயல்கள் நுழைபுலத்தார் செய்வ தில்லை !
வருபாட்டில் அசைச்சொல்போல் பயனி ழந்து
வாழ்வதுமோர் வாழ்வாமோ ? வெட்கக் கேடு !

தன்மானம் எனுந்தண்டின் மேலி ருக்கும்
தாமரைப்பூ இவ்வாழ்க்கை ! தண்ட றுந்தால்
என்னாகும் முடிவல்லால் ? மானம் என்னும்
எழில்நரம்பை எடுத்தெறிந்தால் வாழ்க்கை வீணை
இன்னிசையை எழுப்பாது ! குப்பை சேரும் !
இருவிழியுள் கருமணிகள் மானம் ! கெட்டால்
புன்விழிகள் பொட்டையெனப் போகும் ! சாகும் !
பூவுலகம் எங்கணுமே இருட்டே தோன்றும் !

தன்னிலையில் தாழாமை தாழ்ந்து விட்டால்
தரித்தாவி வாழாமை மானம் என்னும்
பொன்மொழியைச் சிரமேற்று வாழும் போது
புகழ்ச்செயல்கள் மின்னலிடும் ; இருட்டு மாயும் !
வென்றிபெற மனந்துடிக்கும் ! தொப்பை யைப்போல்
வீணுக்குத் தொங்குகின்ற வாழ்க்கை இல்லை !
பின்னலுறும் இழிசெயலைக் கருத்த ரித்துப்
பிழைசெயும் குறுநோக்கும் மடிந்து போகும் !

பிறந்தோர்கள் எல்லாரும் பிறந்தோர் இல்லை !
பெருஞ்செயல்கள் புரிந்தோரே பிறந்தோர் ஆவார் !
இறந்தோர்கள் எல்லாரும் இறந்தோர் இல்லை !
இழிசெயல்கள் புரிந்தோரே இறந்தோர் ஆவார் !
இறவாமை பெறவேண்டில் மானந் தன்னை
இழவாமை தழுவுகின்ற செயல்பு ரிந்தே
அறவழியில் நழுவாமை வேண்டும்—அந்த
அழகான வாழ்க்கையினை வாழ்வோம் வாரீர்!





# கொடுத்தனைக்

தென்னகத் திரைப்படத் தொழில் இந்தியத் துணைக்கண்டத்தில் சிறந்து விளங்கும் பெரும் தொழிலாகும்.

தென்னகக்கலைஞர்களின் அருந்திறனை அனைத்து இந்தியாவிலுள்ளோரும் ஒப்புக்கொள்ளுவர். அத்தகு கலைஞர்களின் கலைப் பணிகளை ஊக்குவிக்கவும், தரமான படைப்புகளை உருவாக்க ஆர்வம் காட்டவும், அப்பணியில் ஈடுபட்டிருப்போரைப் பாராட்டிச் சிறப்பிக்கவும் அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு திட்டத்தை வகுத்து வெளியிட்டார்கள்.

ஆண்டுதோறும் சிறந்த தமிழ்ப் படங்களுக்கும், கலைஞர்களுக்கும் பரிசளிக்கும் திட்டம் அது.

1967-ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் இத்திட்டத்தின்படி 1969-ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படம், கலைஞர்களுக்கான பரிசு அளிப்பு விழா 4-11-70 அன்று சென்னை மியூசிக் அகாடமியில் நடைபெற்றது.

விழாவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் தலைமை வகித்தார்கள்.

சிறந்த திரைப்படங்கள் சிறந்த கலைஞர்களுக்கான பரிசுகளை மேதகு ஆளுநர் அவர்கள் அளித்தார்கள்.

விழாவுக்கு வந்திருந்தவர்களைச் செய்தித் துறை இயக்குநர் வரவேற்றார். சிறந்த படங்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவின் தலைவரான டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், குழுவுக்கு முழு உரிமையும் அளிக்கப்பட்டிருந்ததையும், சிறந்த படங்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசின் குறுக்கீடு எந்தவகையிலும் ஏதுமில்லை என்பதையும் எடுத்துரைத்தார்.



தென்னிந்திய திரைப்படவர்த்தகச் சங்கத் தலைவர் திரு. ஏ. எல். சீனிவாசன், சிறந்த திரைப்படங்களுக்குப் பரிசு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்பு புறக்கணிக்கப்பட்டதையும், இன்று திரையுலகத்தினரின் வேண்டுகோள் நிறைவேற்றப் படு



# கொடுத்தார்கள்

வதையும் எடுத்துரைத்து அரசின் திட்டத்தைப் பாராட்டினர்.

பரிசுகளை வழங்கிய ஆளுநர், இது போன்ற பரிசளிப்பு தரமுள்ள படங்களைத் தயாரிக்க உதவும் என்று குறிப்பிட்டார்.

1969-ஆம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய பரிசு 'அடிமைப் பெண்' திரைப்படத்திற்கும், இரண்டாவது பரிசு 'அக்கா தங்கை' படத்திற்கும் மூன்றுவது பரிசு 'தெய்வ மகன்' படத்திற்கும் அளிக்கப்பட்டன.

சிறந்த நடிகைக்குரிய பரிசு திருமதி சௌகார் ஜானகிக்கும், சிறந்த இயக்குநருக்குரிய பரிசு திரு. ப. நீலகண்டனுக்கும், கதாசிரியருக்குரிய பரிசு திரு. பாலமுருகனுக்கும், வசன கர்த்தாவுக்குரிய பரிசு திரு. சொர்ணத்திற்கும், சிறந்த இசையமைப்பாளருக்குரிய பரிசு திரு. கே. வி. மகாதேவனுக்கும், பாடலாசிரியருக்குரிய பரிசு திரு. அ. மருதகாசிக்கும், சிறந்த துணை நடிகருக்குரிய பரிசு திரு. சுந்தரராஜனுக்கும், சிறந்த துணை நடிகைக்குரிய பரிசு செல்வி பண்டரிபாய்க்கும், சிறந்த பாடகருக்குரிய பரிசு திரு. எஸ். பி. பாலசுப்பிரமணியத்திற்கும், சிறந்த பாடகிக்குரிய பரிசு திருமதி கே. பி. சுந்தராம்பாளுக்கும், சிறந்த ஒளிப் பதிவாளருக்குரிய பரிசு திரு. மார்க்கஸ் பார்ட்லேக்கும், சிறப்புப் பரிசு குழந்தை நட்சத்திரமான பேபிராணிக்கும் அளிக்கப்பட்டன.



பரிசு பெற்ற கலைஞர்களைப் பாராட்டிப் பேசிய தமிழக முதல்வர் அவர்கள் இன்றைய அரசு, நாட்டுக்கும் கலைக்கும்

## ''பிறர் சுமை அகற்றும் பண்பு''

கடந்த 4—11—70 மாலை, 'மியூசிக் அகாடமி'யில் தமிழ்த் திரைப்படத்துறைக் கலைஞர்கட்குப் பரிசு அளிப்பு விழா மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் தலைமையில் சிறப்புமிகு திரைக் கலைஞர்கள் பாராட்டுப் பெறுவதைக் காண மக்கள் பெருங்கூட்டமாகக் குழுமியுள்ளனர். டாக்டர் மு. வ. அவர்கள் வரவேற்புப் பேச்சை ஆரம்பிக்கின்றார். உடனே விழாக் குழுவைச் சேர்ந்த ஒருவர் ஆள் உயர மாலை ஒன்றை அவருக்கு அணிவிக்கிறார். மாலையைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டே மேலே பேச்சைத் தொடர்கின்றார், தமிழ்ப் பேராசிரியர். மாலை கொஞ்சம் கனத்த மாலைதான். அந்தச் சுமையையும் தாங்கிக்கொண்டு வரவேற்புரையையும் நிகழ்த்துகின்றார். இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனிக்கின்றார்கள். உடனே சைகை மூலம் டாக்டர் மு.வ.வின் அருகில் உள்ள ஒருவருக்கு ஏதோ சாடை காட்டுகிறார். அந்த நண்பருக்கு முதலில் என்னவென்று புரியவில்லை. மறுபடியும் முதல்வர் சைகை செய்கிறார். இப்போது அந்த நண்பருக்குப் புரிந்துவிட்டது. அவர் உடனே டாக்டர் மு.வ.விடம் ஓடி அவரது கையிலிருந்து மாலையை வாங்கிச் சுமையை அகற்றுகிறார். நிம்மதியடைந்த முதல்வர் பேராசிரியரின் சொற்பொழிவைக் கவனிக்கிறார்.

எக்காரியத்திலும் பிறருக்குச் சுமை இல்லாது பணியாற்றி, அடுத்தவர் பாரம் அகற்ற என்றும் ஆவன செய்யும் தமிழக முதல்வரது இனிய பண்பு கண்டு வியந்தோம்.

—எல்லைவேலன்.

பாடுபட்டவர்கள் அனைவரையும் மதிப்பதில் அரசியல் கண்ணோட்டத்துடன் காரிய மாற்றுவதில்லை என்பதை விளக்கினார்கள். 1967-ஆம் ஆண்டில் புதிய அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டபொழுது விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறை புகுந்த 605 பேருக்குத்தான் உதவி வழங்கப் பட்டது. இப்பொழுது 6,002 பேருக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது என்பதையும் முதல்வர் எடுத்துரைத்தார்கள்.

அரசியல் துறையிலும் கலைத் துறையிலும் நாட்டுக்காகப் பாடுபட்டவர்களைப் பாராட்டுவதில் இந்த அரசு கட்சிக் கண்ணோட்டத்துடன் நடந்து கொண்டதில்லை என்பதைப் பல்வேறு ஆதாரங்களுடன் முதல்வர் அவர்கள் விளக்கினார்கள்.

'அடிமைப் பெண்' படத்திற்கான முதற்பரிசைப் பெற்ற புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில் 'அடிமைப் பெண்' படத்திற்காக 30 ஆயிரம் ரூபாய் தரப்பட்டுள்ளது; இது மக்களிடம் வாங்கப்பட்ட வரிப் பணம். கலைஞர்கள் மக்களின் ஓர் அங்கம் என்பதை நினைவுபடுத்தவே இந்தப் பரிசுத் தொகை என்பதை உணர்கிறேன். மக்களின் இந்த வரிப்பணத்தை மக்களுக்கே திருப்பித்தர எண்ணியுள்ளேன். இதிலிருந்து முத்துராமலிங்கத் தேவர் கல்லூரிக்கு 10 ஆயிரம் ரூபாயும் பின்தங்கிய மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மீதி 20 ஆயிரம் ரூபாயும் பயன்படுத்த முதலமைச்சரிடம் அளிக்கிறேன்'' என்று கூறி முதலமைச்சர் அவர்களிடம் அளித்தார்.

மூன்றாவது சிறந்த படமான 'தெய்வ மகன்' திரைப்படத்திற்குப் பரிசாகப் பெற்ற ரூ. 10 ஆயிரத்தைத் திரு. பெரியண்ணன் அவர்கள் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு அளித்தார்.

சிறந்த நடிகைக்கான பரிசைப் பெற்ற திருமதி சௌகார் ஜானகி தமக்குக் கிடைத்த ரூபாய் 5 ஆயிரத்தையும் 'பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு நிதி'க்கு அளித்தார்.

அரசு தங்களுக்குக் கொடுத்த பரிசுத் தொகையை நல்ல பணிகளுக்குத் திருப்பித் தந்த கலையுலகத்தவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். கொடுத்ததைக் கொடுத்தார்கள் என்றால் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? 'தரத்தரக் கோடி கோருவர்' என்ற பழங்கருத்து, மாறிக் கொண்டுவருகிறது என்பது தெளிவாகிறது!


இந்திய, வெளிநாட்டுப் பத்திரிகைகளையும்,

நூல்களையும் மலேசியா, சிங்கப்பூர்,

புருணை, ஹாங்காங், தென்வியட்நாம்

முதலான நாடுகளில் வினியோகம்

செய்யும் ஓர் சிறந்த நிறுவனம்

இஸ்மாயில் புக் டிப்போ

அஞ்சல் தொடர்பு :

MESSERS ISMAIL BOOK DEPOT
G.P.O. BOX—149
SINGAPORE



# பாப்பா பாப்பா ரொட்டி!

"பாப்பா பாப்பா ரொட்டி" நாள் தோறும் வீடு தேடி வந்து குழந்தைகளுக்கு ரொட்டிகளை, சீரணித் தொண்டர்களும், சமூகப் பணியில் ஈடுபட்டிருக்கும் மகளிரும் அளிக்கிறார்கள்.

சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்கு இந்த ரொட்டி அளிக்கப்படுகிறது.

'கேர்' நிறுவனத்தினர் அளிக்கும் பால் பவுடரைக் கொண்டு, மைய அரசின் மாடர்ன் ரொட்டி தொழிற்சாலையில் குழந்தைகளுக்காகச் சத்துணவு மிகுந்த ரொட்டி தயாரிக்கப்படுகிறது.

சென்னை நகரில் குடிசைப் பகுதிகளில் வாழும் 40,000 குழந்தைகளுக்கு இந்த ரொட்டி அளிக்கப்படுகிறது. பின்னர் தமிழ் நாடு முழுவதும் விரிவாக்கப்படும்.

ஆறுமாதம் முதல் 3 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இந்த ரொட்டி அளிக்கப்படும்.

குடிசைப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் உடல் வலு குன்றியிருப்பதை எண்ணி, அவர்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த உணவளிக்க இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் 150 மையங்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு இடத்திலிருந்தும், குழந்தைகளுக்கு ரொட்டி வழங்கப்படுகிறது.

ஏறத்தாழ 32,000 குழந்தைகளுக்குச் சீரணித் தொண்டர்கள் மூலம் ரொட்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மீதிக் குழந்தைகளுக்குச் சமூகப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் மகளிர் மன்றங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

ரொட்டி வழங்க வேண்டிய வீடுகளில் உள்ள குழந்தைகளுக்கான அடையாள அட்டையும் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்காக இப்பொழுது ரூ. 6 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

"குழந்தைகளின் உடலுக்கு வலுவேற்றுவோம், குடிசைகளை மாற்றி ஒளியேற்றுவோம்" என்ற நம் அரசின் இலட்சியப் பாதையில், இது ஒரு மைல் கல்லாகும்.

இன்றையக் குழந்தைகள் தான் நாட்டின் எதிர்காலத் திருவிளக்குகள் என்பதை உணர்ந்து அவர்களுக்குச் சத்துணவை அளிக்கும் இந்தத் திட்டம், வசதி வாய்ப்பு குறைந்த ஏழை மக்களுக்குப் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள், இத்திட்டத்தினைச் சென்னை நகரில் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.




(1)

ஒவ்வொருவரிடமும், பற்பல ஆற்றல்கள் உள்ளன. அவை நீறுபூத்த நெருப்புப்போல் உள்ளன. அவை சுடர்விட்டு ஒளிர வழியொன்று கண்டனர். அதுவே, கல்வி.

கல்வி, மனிதனுக்குள் மறைந்து கிடக்கும் அறிவு நுட்பங்கள், செயலாற்றல்கள், குணசிலங்கள், ஆகியவை முழு வளர்ச்சி பெறத், துணை நிற்கவேண்டும்.

**நெ.து. சுந்தரவடிவேலு**

**துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்**

எங்கோ, அடர்ந்த காட்டில், பருவத்திற்குப் பருவம், கண்ட பக்கம் மாறியோடும் காட்டு ஓடைக்கு சிறப்பேது! பயனும் தீங்கானதாகலாம். அதுவே, மெல்ல மெல்ல, அடங்கி ஒரே வழி ஓடும் சிற்றாறாகும்போது, சிறப்புப் பெறுகிறது; பயன் விளைவிக்கிறது. மேலும் ஓடிப், பேராற்றில் கலந்துவிடும்போது, பெருஞ்சிறப்பு வந்தடையும்; பெரும் பயன் விளையும்.

மனிதனது அறிவு இயல்புகளும், செயற்திறங்களும் ஊறிப் பொங்கி, நினைத்தபோது, நினைத்த பக்கம், உடைத்துப் பாய்ந்தால், சிறப்பில்லை; பயனும் கெடுதியாகலாம்; மாறாகத், தன்னுள்ளே, ஊறிப் பொங்கும் இயல்புகளும் திறங்களும், தான் வாழும் சமுதாயத்தின் கரைகளுக்குக் கட்டுப் பட்டுச், சமுதாயத்திற்குப் பயன்படும்போது, சிறப்புப் பெறுகிறது. அத்தகைய நிலையில், தனிமனித வளர்ச்சி, சமுதாய வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் துணை நிற்கிறது.

மனிதன், தனி ஆள்மட்டுமல்ல; குடும்பத்தின் உறுப்பினன்; சமுதாயத்தின் உறுப்பினன். அவன், தன்னறிவால், தன்னாற்றலால், தன் உழைப்பால், தன்னையும் குடும்பத்தையும் காத்துக் கொள்ள வேண்டும். மனித உழைப்பு சமுதாயத்திற்குத் தீங்காக இருத்தல் ஆகாது; உதவியாக இருக்க வேண்டும். எனவே, சமுதாயத்தின் நியாயமான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் நம் உழைப்பு இருக்க வேண்டும்; நம் கல்வியும் பயிற்சியும் அத்தகைய உழைப்பிற்கு, உதவியாக நிற்கவேண்டும்; முட்டுக் கட்டைகளாகக் கூடாது.

கோடியில் ஒருவரே, கல்வி கற்ற பண்டைக்காலத்தில், அந்த ஒருவருக்கு, மற்றவர்கள் சோறு போட்டு, உடைகொடுத்துக் காத்துவிட முடியும். அந்த ஒருவர், இதையும் அதையும் ஒப்புவித்ததின் மூலம், காப்பாற்றப்பட வேண்டியவராகி விடுவார்; உழைக்காமலே வாழ்வதற்கும் உரியவராவார்.

பண்டைய நிலையா இன்று? 'எல்லோரும் கற்போம்', என்கிற நிலை, விரைந்து உருவாகி வருகிறது. சில ஆண்டுகளில், எல்லோரும் பதினாறு வயது வரையாவது, படித்துக்கொண்டிருக்கும் நிலை, நிலைத்துவிடும். அது நல்லதுமாகும். அப்புறம், படித்தவர் என்பதற்காக, யாரை யார் தாங்கிக் கொண்டிருக்க முடியும்? எல்லோரும் உழைத்தே, எல்லோரும் வாழ முடியும். எதிர்காலத்தில் படிப்பாளியின் மறுதோற்றம் பாட்டாளி என்கிற நிலையைக் கவனத்திற்கொண்டு, கல்வியின் கூறுகளை, முறைகளை வகுக்க வேண்டும்.

'கல்வி, கல்விக்காக' என்கிற கொள்கை, 'காயலாங்கடை'க் குப் போய் வெகு நாளாகிவிட்டது. கோடிச் செல்வர் வீட்டு மக்களுக்கும் கூட, 'கல்வியைக் கல்விக்காக'ப் பெற முயல்வதில்லை. தங்கள் கோடியைச், செம்மையாகப் பேணிக் காத்துப், பலகோடியாக்குவது எப்படி, என்று தெரிந்து

கொள்ளவே படிக்கிறார்கள்.' தொழில் நிர்வாகம், 'வாணிக நிர்வாகம்' ஆகிய படிப்புகள் செல்வர்களின் உந்துதலால் பிறந்தவை. அந்தச் சீமான்கள் கூட நிர்வாக நுட்பங்களைத் தெரிந்து கொண்டு போவதோடு நிற்பதில்லை. பெருமைக்காகிலும், பட்டங்களை அடுக்கிக் கொள்ள விரும்புகிறார்கள்.



தமிழ் நாட்டின் கல்வித் துறையை மக்கள் துறையாக இயங்க வைத்துப், பல மறுமலர்ச்சித் திட்டங்களை உருவாக்கிய பெருமை திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களைச் சாரும். தமிழகத்தை அகில இந்தியாவிற்கும் முன்னோடியாக்கிய, இலவச மதிய உணவுத் திட்டம், சீருடைத் திட்டம், பள்ளிச் சீரமைப்புத் திட்டம்—இவை இவரது சிந்தனையிற் பிறந்தவை.

சென்னைப் பல்கலைக் கழகம் பாட திட்டங்களைச் சீரமைக்கும் பணியில் இப்போது ஈடுபட்டுள்ளது. இந்த நேரத்தில் துணைவேந்தரின் 'கல்விச் சிந்தனைகள்' நம் வாசகர்களையும் சிந்திக்க வைக்கும் என்பது திண்ணம். நான்கு கட்டுரைகளில் துணைவேந்தர் நமக்கு அவரது எண்ண அலைகளை அளிக்க இருக்கிறார்.

செல்வ அரசுகளைப் பராமரிப்பதற்காகப், செல்வர்களுக்குக் கல்வி தேவைப்பட்டால், மற்றவர்களுக்கு, வறுமையிலிருந்து விடுபட, இழிவிலிருந்து தப்பியோடக் கல்வி தேவை. மிகமிகத் தேவை; இன்றியமையாத தேவை. கல்வியொன்றே அவர்களுக்குக் கதி. அது இல்லையேல், வாழையடி வாழையாகக் கொத்தடிமைகளாக உழலும் அவலநிலையே.

பொல்லாத சூழ்நிலைகளுக்கிடையில், கல்லாமலே நின்றிருந்தால், அம்பேத்கார் அரசியல் சட்ட பிரம்மாவாகி இருக்க முடியுமா? தாழ்த்தப்பட்டோரை உயர்த்தி, பெருநிலை ஒரு நிலைக்குக் கொண்டுவருவது கல்வியே. ஒதுக்கப்பட்டோரை அழைத்து அவையில் நிறுத்துவது கல்வியே. பின்தங்கிவிட்டோரை முன்னே வந்து வாழ்வாங்கு வாழச் செய்வது கல்வியே. 'பள்ளத்தில் வீழ்ந்திருப்போரெல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்ளச்செய்வது, வெள்ளத்தின் பெருக்கைப் போல், கவிப் பெருக்கும் கலைப் பெருக்கும் மேவுதலே?' பாரதி காட்டிய இவ்வழி நம் எல்லோருக்கும் பொதுவழி. சிறப்பாகத், தாழ்த்தப்பட்டோர்க்கும் பின்தங்கியவர்க்கும் கல்வி வெள்ளம் தேவை. புதுவெள்ளம் தெளிந்த நீராக ஓடாது. அதற்காக, வெள்ளமே இங்கு நெடுநாள் வாழ்ந்துவிட முடியாது. புதுவெள்ளத்தில் சிக்கிச் சீரழியாமல் பார்த்துக் கொண்டால், சில நாட்களில் நன்னீரின் நற்பயனைக்காணலாம். செல்வர்க்கே, பட்டங்களை அடுக்கிக்கொள்ளுதல் தேவைப்பட்டால், ஏழைக்கு அதுவன்றோ மாமருந்து ?

வாய்க்கால் கரை வரதனும், குப்பைமேட்டுக் குப்பனும் அங்கிருந்து நீங்கி நகருக்குச் சென்று, கல்வி கற்றபின், எங்கேபோவது எப்படி பிழைப்பது என்று ஏங்கவிடலாமா? ஆகாது. வேலைவாய்ப்பினைப் பெருக்க வேண்டும். திட்ட வளர்ச்சிகள், இக்கண்ணோட்டத்திலும் தீட்டப்பட வேண்டும்.

வேலை வாய்ப்புப் பெருக்கமே, பட்டதாரிகள் வாழ்வை வளப்படுத்தி விடாது. அவர்கள் கல்வியும், வேலை வாய்ப்பினுக்கு உதவியாக இருக்க வேண்டும். பொறியியல் கல்வியை எடுத்துக் கொள்வோம். அது 'கொள்கை'க்கல்வியாக நிற்கலாமா? 'அனுபவக்' கல்வியாக இருக்கவேண்டும். எந்தக் காலத்து அனுபவக் கல்வியாக இருப்பது? சென்ற நூற்றாண்டு இயந்திரங்களைப் பற்றி அறியும் கல்வியாகவும் இருக்கக் கூடாது; அந்த இயந்திரங்களைச் செய்யும், இயக்கும் அனுபவக் கல்வியாகவும் இருக்கக் கூடாது. நடைமுறையில் உள்ள இயந்திரங்களை அறியவும், செய்யவும், இயக்கவும் துணை செய்கிற மாதிரி பொறியியல் கல்வி அமைய வேண்டும். பொறியியல், அறிவியல் துறைகளில், அண்மைக் கால வளர்ச்சி, முன்னர் எப்போதும் கண்டறியாத அளவு பெருகியுள்ளது. இது பெரிதும் மேனாடுகளில் நிகழ்வது. இதற்கேற்ற வாய்ப்பு அங்கே உண்டு. ஆண்டுக்கு ஆண்டு, வளர்ந்து வரும் அறிவியல் உண்மைகளைச், செல்வமும், இயந்திர வசதிகளும் உடைய மேனாடுகளில் கூடப்பாட நூல்களிலும் பாடத் திட்டங்களிலும் இருந்து முழுமையாகக் கற்றுக் கொள்வதில்லை. நூலக நூல்களிலும், சுடச்சுட விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை வெளியிடும் இதழ்களிலும் இருந்தே, அன்றுவரை வளர்ந்துள்ள தொழில் அறிவியல் உண்மைகளைத்தெரிந்துகொள்ளுகிறார்கள்.

(—இன்னும் வரும்)



# குழந்தைகள் நாளில்



இந்த

எதிர்காலத்

திருவிளக்குகளின்

வாழ்வில்

ஒளியேற்ற

அயராது பாடுபட

## உறுதியேற்போம்!

## உழைப்போம்!

## வெற்றி காண்போம்!



# கீர்த்தி நிலைத்தது!



மேத் திங்கள் இருபத்து ஏழாம் நாளன்று நம் செவிகளை அந்தச் சோகச் செய்தி தாக்கிற்று. செய்தி அன்று அது; செந்தீ! ஜனநாயகப் பாதுகாவலர் ஜவகர் காலமாகிவிட்டார்- நம்பத்தான் முடியவில்லை. ஆனால் நடந்துவிட்டதே! மறைவது இயற்கை. மண்ணாவது திண்ணம். மனிதர்கள் வருகிறார்கள், போகிறார்கள். இப்படி எந்த ஆறுதல் வார்த்தைகளாலும் அணைபோட்டுத் தடுக்க முடியாத சோக வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது.

அத்தகைய பெருஞ் செல்வத்தை இழந்திருக்கிறோம். நம்பிக்கை நட்சத்திரம் மறைந்துவிட்ட ஏமாற்றத்தில் பெருமூச்சு விடுகிறோம். கடும் புயலில் சிக்கிய படகாகத் தவிக்கிறது நாடு. உலகத் தாய் கண்ணீர் வடிக்கிறாள்.

உலகம் வல்லூறுகளின் வேட்டைக் காடாக—நாய், நரிகள் விருந்துண்ணும் ரணகளமாக-மாறிவிடக் கூடாது எனப் பாடுபட்டு, அவர் பறக்கவிட்ட வெண் புரு, சிறகடித்துத் துடிதுடிக்கிறது, அவர் மறைந்த செய்தி கேட்டு! இமயம் முதல் குமரி வரையில் உள்ளோர் இதயங்களில் எல்லாம் இடம் பெற்றிருக்கும் உரிமையை உத்தமர் காந்தியாருக்குப் பிறகு பெற்றிருந்த ஒரே மனிதர்—ஒரே தலைவர்—பண்டித நேரு. அவர் இன்றில்லை. அவர் பேணி வளர்த்த ஜனநாயகக் கொள்கை இருக்கிறது. அதனை மேலும் சீர்பெறச் செயல்படுத்துவதுதான் இருப்பவர்கள் மறைந்தவருக்குச் செய்யும் மரியாதையாகும். மறைந்தவர் இந்த மண்ணுக்கு ஆற்றிய பணிகள் ஏராளம். இன்னும் ஆற்ற வேண்டிய இன்றியமையாத பணிகளும் இருக்கின்றன.



அவர் தொட்ட பணிகளைத் தொடர்ந்து வெற்றி காண்பதுதான் அவருக்கு உளமார அமைக்கும் நினைவுச் சின்னமாகும். ஜனநாயகச் சோலையில்—பகுத்தறிவு மேடை கட்டி—சமாதானக் கொடியை உலகமறிய உயர்த்திப் பிடித்தவர் மறைந்த உத்தமர். அவருக்கு நாம் காட்டுகின்ற நன்றி அந்தச் சோலை வாடாமல் மேடை சரியாமல் பாதுகாப்பதேயாகும். இன்னும் எத்தனையோ வேலைகளை நாடு அவரிடம் எதிர்பார்த்தது. அதற்குள் இயற்கை தன் வேலையை முடித்துக் கொண்டது. கிரீடம் நொறுங்கி விட்டது, கீர்த்தி நிலைத்து விட்டது. வாழ்க நேருவின் பெயர்!

*[நேரு அவர்கள் மறைந்த பொழுது கலைஞர் கருணாநிதி அவர்கள் வானொலியில் ஆற்றிய உரை.]*

சென்னை, தண்டையார்ப்பேட்டையில் நாலு மாடிக் கட்டடம்! அதிலே ஒரு திருடன் புகுந்து தப்பி விட்டான். திருடன் எங்கே இருக்கிறான் என்பது தெரியவில்லை. மொட்டை மாடியிலுள்ள நீர்த் தேக்கத் தொட்டிக்குள் புகுந்திருக்கலாமென்று ஊகம். மொட்டைமாடிக்குச் செல்ல வழியில்லை. திருடனை எப்படிப் பிடிப்பது என்றும் தெரியவில்லை.

தீயணைக்கும் படையினருக்குத் தகவல் தந்தனர், காவல் துறையினர். அங்கிருந்து விரைந்து வந்தது பெரிய சுழல் ஏணியுள்ள தீயணைக்கும் ஊர்தி.

கட்டட அருகில் ஊர்தியை நிறுத்தினர். இயந்திரத்தை இயக்கியதும் ஊர்தி மீதிருந்த ஏணி, வானை நோக்கி உயர்ந்தது. நாலாவது மாடியைத் தொடும்படி ஏணியை அமைத்துவிட்டு, அதன் மீது தீயணைக்கும் படை வீரர்கள் ஏறினர்; பாய்ந்து சென்றனர். நீர்த் தேக்கத்திற்குள் பதுங்கியிருந்த திருடனைப் பிடித்தனர்.

ஆம். இது ''தீ''யணைக்கும் படை மாத்திரமல்ல! ''தீயவை'' அணைக்கும் படையுமாகும்.

சைனா பஜாரை அடுத்த கிடங்குத் தெருவில் ஒரு விபத்து நேர்ந்தது. சந்துகளுக்கு உள்ளே இருந்த மூன்று மாடி வீட்டில் ஒரு கிழவர் இருந்தார். அவரால் வெளியே வர முடியவில்லை. அவர் உயிர் தப்புவது அரிது என்ற நிலையில் 101-க்குத் தொலைபேசியில் செய்தி வந்தது. தீயணைக்கும் படையினர் விரைந்து சென்றனர். சுழல் ஏணியை இயக்கினர். அதன் நுனியில் சாக்குப் பை போன்ற துணியினாலான தொட்டிலில் வயதான அந்த மனிதரைத் தூக்கிவைத்து மெள்ளக் கீழே இறக்கினர். அவர் உயிர் தப்பினார்.




பகல் இரண்டு மணி. சென்னையை அடுத்த வியாசர்பாடியில் குடிசைகள் தீப்பற்றி எரிந்தன. ஒரு குடிசையில் 80 வயதுக் கிழவியின் அழுகுரல் கேட்டது. குடிசையைச் சுற்றியோ தீ! கொழுந்து விட்டெரியும் தீ! என்ன செய்வது என்று புலப்படவில்லை! குடிசையைப் பிரித்தெறிந்து உள்ளே புகுந்து அந்த மூதாட்டியைக் காப்பாற்றினர் தீயணைக்கும் படையினர்.

மனித உயிர் மட்டும் தானா இவர்களுக்கு முக்கியம். அல்ல! பிராணிகளிடமும் பாசமும் நேசமும் உண்டு!

சமீபத்தில் ஒரு நிகழ்ச்சி.

நுங்கம்பாக்கத்தில் பிராணி அன்பரின்வீடு. பூனைக்குட்டியைப் பிரியமாக வளர்த்து வந்தார். அவரது அருமை மிகு பூனை ஒரு நாள் கிணற்றில் விழுந்து தத்தளித்தது. அன்பரின் உள்ளமும் அதுபோல. வாளியைக் கட்டி இறக்கிப் பார்த்தார். பயனில்லை. 101-க்கு தொலைபேசியில் தகவல் தந்தார். ஆபத்துக்கு உதவும் தீயணைக்கும் படை வீரர்கள் ஆவலோடு வந்தனர். அந்தச் சின்னஞ்சிறு பிராணியைக் காப்பாற்றி உரியவரிடம் ஒப்படைத்தனர். அவருக்கு எல்லையில்லா மகிழ்ச்சி. பூனையும் ''மியாவ்'' ''மியாவ்'' என்று தனது இன்னிசையை முழங்கிற்று. பணி முடிந்தது. நெருப்பணைக்கும் படையினரின் பயணம் தொடர்ந்தது.

இதுபோல் பாதாளச் சாக்கடையில் விழுந்த தொழிலாளிகள், நீரில் மூழ்கியோர், பள்ளங்களில் தவறி விழுந்த பசுக்கள்—இப்படி அவர்கள் காப்பாற்றியுள்ள உயிர்களின் எண்ணிக்கை எண்ணில் அடங்காது.



விபத்தில் சிக்கியவரை சாக்குப் பை போன்ற தொட்டிலில் வைத்து இறக்குகிறார்கள்.

பலர் நாளிதழ்களில் படித்திருப்பர். சின்னாட்களுக்கு முன் அம்பத்தூர், ஆவடி பகுதியில் நச்சு வாயுள்ள கிணற்றில் விழுந்து உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தவரை தீயணைக்கும் படையினர் காப்பாற்றிய செய்தி அவைகளில் இடம் பெற்றிருந்தன. முகமூடியணிந்து, மூச்சுவிடப் பிராண வாயுக் குழாய்களை இணைத்துக் கிணற்றில் இறங்கி அவரைக்காப்பாற்றினர், இந்தக் குழுவினர்.

அயராது உழைக்கும் இந்த ஊழியர்களை நாடிவரும் மற்றொரு அவசர உதவி, நோயாளிகள், கர்ப்பிணிகள் ஆகியோரை அவசரமாக மருத்துவ மனையில் கொண்டு சேர்க்கும் அரும்பணி. இரவு 12 மணியாக இருக்கும். கர்ப்பிணிக்கு பிரசவ வேதனை ஏற்படும். உடனடியாக ரிக்ஷாவோ, டாக்சியோ கிடைக்காது. அந்த இரவில் என்ன செய்வார் கணவர்? விரைந்து சென்று தொலைபேசியில் 101 எண்ணைச் சுழற்றினால் தீயணைக்கும் அலுவலகத்தில் மணி எதிரொலிக்கிறது. அவருடைய கோரிக்கைக்கு இணங்கி இல்லம் நோக்கிநோயாளி வண்டி (Ambulance) விரைந்து வருகிறது.

இதேபோல் கவலைக்கிடமான நிலையில் நோய்வாய்ப்பட்டிருப்போரை அவசரமாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல இரவு பகல் எந்நேரமும் இந்த வண்டி தயாராக இருக்கிறது. இந்த ஆண்டில் இதுவரை இம்மாதிரி உதவி நாடி வந்தோரின் எண்ணிக்கை 2,756. விபத்துக்களுக்காக வந்த கோரிக்கை 443. ஆண்டு முழுவதற்கும் சுமார் 4,000 கோரிக்கைகள் இவ்வகைகளில் வருவதுண்டு, சென்னையில் மட்டும்!

விபத்துக்களில் சிக்குண்டு காயமடைந்தோரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல இவர்கள் கட்டணம் வசூலிப்பதில்லை. பிற நோயாளிகளிடம் குறைந்த அளவு கட்டணம் வசூலிக்கிறார்கள்.

ஆண்டு ஒன்றுக்கு இவர்கள் காப்பாற்றும் மனிதர்களின் எண்ணிக்கை சுமார் 300 இருக்கும். விலங்குகள் 50 இருக்கும். விபத்து பற்றிக் காலதாமதமாகித் தகவல் தருவதால் இவர்கள் செல்லு முன் தீப்பற்றி உயிர் நீப்போர் பலருண்டு. உடனடித் தகவல் தரப்பட்டால் காப்பாற்றுவது சற்று எளிது.

இவ்வாறு இரவும் பகலும் இருபத்து நான்கு மணி நேரமும் கடிகாரத்தில் சுற்றிக்கொண்டே இருக்கும் விநாடி முள்போலத், தமிழ் நாட்டில் தீயணைப்புப் படையைச் சேர்ந்த நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தத் துறையின் முதுகெலும்பு போன்றவர் தான் ''தீயணைப்போர்'' ('Fire man')

தீயணைப்போரின் முதன்மையான கடமை, தீவிபத்திலிருந்து உயிர்களை மீட்டுக் காப்பாற்றுதல், பிறகு உடைமைகளைக் காப்பாற்றுதல், கடைசியாக மனிதாபிமானத்துடன் பொதுமக்களின் பீதியைப் போக்கும் அளவுக்குத் தங்களாலான உதவி

சுழல் ஏணி இயந்திரம் புறப்படத் தயாராகிறது.



புரிதல், இவைகள்தாம். இத்தகைய கடமைகளைச் சரிவரச் செயலாற்றத் தீயணைப்போருக்குக் கடும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் தமது பணியின் போது மிகுந்த கட்டுப்பாட்டுடன்இருக்கவும், தீவிபத்து நேரும் இடங்களில் மனம் கலங்காது திறமையுடன் பணியாற்றவும் இந்தப் பயிற்சி உதவுகிறது. கட்டுப்பாட்டுடன் பணியாற்ற முடியாத இளம் வாலிபர்கள் தீயணைப்புத் துறைக்குத் தகுதியற்றவர்களாவர்! கட்டுப்பாட்டுடன் பெறும்பயிற்சியானது தீயணைப்போர் பலமணி நேரங்கள் தொடர்ந்து தீவிபத்து நேர்ந்த இடங்களில் பணியாற்றப் போதிய உடல் வலிவும் தைரியமும் தருகிறது.

பகைவர்களிடமிருந்து நம் நாட்டைக் காத்திட அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் போர் வீரரைப் போன்றவரான இந்தத் தீயணைப்போர் ''தீ'' யெனும் பகைவனிடமிருந்து பொதுமக்களின் உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு எந்த நேரத்திலும் தன்னைத் தயாராக்கிக் கொண்டிருக்கிறார். பகைவரின் படையெடுப்பு எந்த நிமிடத்திலும் ஏற்படலாமென்று ஒவ்வொரு நிமிடமும் மிகுந்த கண்காணிப்புடன் எல்லையைக் காத்து வரும் போர் வீரரைப்போல் தீவிபத்து எந்த நேரத்திலும், ஏற்படலாமென எதிர் பார்க்கும் தீயணைப்போர், அதைச் சமாளிக்கத் தம்மைத் தயாராக்கிக் கொண்டிருக்கும்போது அவரது மனநிலை எப்படியிருக்குமென வார்த்தைகளால் விவரிக்க முடியாது. ஆகவே, தீயணைப்புக்காகத் தம்மையும் தாம் கையாளும் தீயணைப்புச் சாதனங்களையும் தயார் நிலையில் வைத்துக்கொள்ளத் தீயணைப்போர் எவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது, என்பதைத் தீயணைப்பு நிலையத்துக்கு நேரில் சென்று பார்த்தால் தான் நன்கு விளங்கும்.

எத்திறப்பட்ட விபத்தானாலும் காலதாமதமின்றித் துரிதமாகத் தீயணைப்பு நிலையத்துக்குத்தொலைபேசி மூலம் தகவல் கொடுப்பது முதன்மையான ஒத்துழைப்பாகும். விபத்து நேர்ந்த இடத்துக்குத் தீயணைப்புத் துறை வண்டிகள் இடையூறு ஏதுமின்றி விரைவாக வரும் அளவுக்குச் சாலையில் உள்ள தடங்கல்களை அகற்றுவதும் பெரிய ஒத்துழைப்பாகும். கடைசியாக இத்துறையினர் தங்கள் பணியில் துரிதமாகச் செயல்படப் பொது மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

ஓய்வு நேரத்தைக் கூட வீணாக்காமல், இவர்கள் தங்கள் மனத்தை அலைய விடாமல், பாய் முடைதல், தேனீ வளர்த்தல், காய்கறித் தோட்டம் அமைத்தல், சோளம் கரும்பு போன்றவைகளைப் பயிரிடுதல், கோழிப்பண்ணை அமைத்தல் போன்ற குடிசைத் தொழில்களை விருத்தி செய்து நாட்டுக்கு மகத்தான சேவை செய்கிறார்கள்.



இந்தக் குழாய்கள் மூலம் ஒரு மைல் தொலைவிற்குத் தண்ணீர் கொண்டு வரலாம்.

தமிழ் நாட்டில் இன்றைய நிலையில் மொத்தம் 58 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. சென்னை நகரில் மட்டும் 12 தீயணைப்பு நிலையங்களும், இத்துறையில் பணியாற்றுபவர் பயிற்சி பெற ஒரு தீயணைப்புப் பயிற்சிக் கூடமும், தீயணைப்பு வண்டிகளில் பழுதுகள் ஏற்பட்டால் அவைகளைத் துரிதமாகச் செப்பனிட ஒரு தீயணைப்புத் தொழிற் கூடமும் இருக்கின்றன. தமிழ் நாட்டில் இன்னும் பல இடங்களில் தீயணைப்பு நிலையங்களை நிறுவிட நகராண்மை, பஞ்சாயத்துக் கழகங்களிலிருந்து எண்ணற்ற விண்ணப்பங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. அரசினர் இலாகாவினரோடு கலந்தாலோசித்து, தமிழ் நாட்டில் எந்தெந்த இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அவசியம் நிறுவ வேண்டும், அவைகளில் எந்தெந்த நிலையங்கள் முன்னதாக நிறுவப்பட வேண்டுமென்று, நகரங்களில் ஏற்படவிருக்கும் தீ விபத்து ஆபத்துக்களின்படி வரிசைப்படுத்தி ஒரு பட்டியல் தயாரித்திருக்கிறார்கள். அந்த வரிசைக்கிரமப்படி வருடத்துக்கு இரண்டு மூன்று இடங்களில் தீயணைப்பு நிலையங்களை நிறுவிக்கொண்டு வருகிறார்கள். தமிழக அரசின் நிதிநிலைமையைப் பொறுத்து ஆண்டு தோறும் இரண்டு அல்லது மூன்று தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இன்னும் 10 ஆண்டுகளுக்குள்ளாகத் தமிழ் நாட்டில் அனேக தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுத் தமிழ் நாட்டுக் கிராமப்புறங்களுக்குப் போதிய தீப்பாதுகாப்பு ஏற்படுமென எதிர்நோக்குவோமாக!

# குடிசைக்குக் கலசமா?

## அ. மறைமலையான்

முதல் மணி அடித்து விட்டது.

இன்னும் சில விநாடிகளில் வண்டி வந்துவிடும். இதில் எப்படியும் ஏறியாக வேண்டும்.

கண்ணப்பரின் நெஞ்சுக்கூடு தடதடவென்று ஆடிற்று; அதிர்ந்தது.

இந்த வண்டியையும் தவறவிட்டு விட்டால், பிறகு மறுநாள் காலை ஏழு மணிக்குத்தான் வண்டி. அதுவரை, கார் விபத்தில் சிக்கி, மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, சாவுப் பந்தலின் திட்டாணி மேடையில் ஏறி நிற்கும் அவருடைய இதயத் தாமரை—இன்னுயிர் மனைவி—இமைகளை மூடாமல் பிழைத்திருப்பாள் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது ?

கண்ணப்பரின் கண்கள் குளமாயின; உள்ளம் குலுங்கி நொறுங்கியது ; நினைவுகள் அலைகளாகச் சீறிப் பாய்ந்து, சுழல்களாக வளைத்து மடித்து எங்கோ இழுத்தன; அழுத்தின.

ஐம்பது வயதைத் தாண்டி விட்டோம் என்கிற அநுபவ முதிர்ச்சி—அறிவுச் செறிவு—எல்லாமே, கட்டு அவிழ்ந்த வண்டிச் சக்கரமாக அவரை ஆக்கிவிட்டுக் கழன்று விழுந்தன. ஐந்து வயதுச் சிறுவனைப் போல அவர் தேம்பித் தேம்பி அழுதார்.

அவர் இப்போது அழுவது மனைவியைப் பறிகொடுக்கப் போகிறோமே என்பதற்காக மட்டுமா? அல்ல! அமைதி வழியும் அவளது மலர் முகத்தைக் காணும்பொருட்டு இந்த வண்டியில் ஏறப் பயணச் சீட்டு வாங்க எட்டணாவுக்குக் கூட வழியில்லாமல் போனோமே என்கிற தம் இழி நிலைக்கும் சேர்த்துத் தான் அவர் அழுகிறார்.

இவ்வளவுக்கும் வயிறு ஒட்டி, கன்னம் வற்றி, காது அடைத்து, கண் பஞ்சடைந்து, பசி நெருப்பிலே எரிந்து கருகும் பரம ஏழை அல்லர்; பாட்டாளி இனத்தவர் அல்லர்; பல பாட்டாளிகளுடைய பசியை ஆற்றுகின்ற பணக்காரர்தாம் அவர். அவரது மேனியிலே எப்போதும் பட்டுத் துணிகளே பளபளக்கும்; கழுத்திலே தங்கச் சங்கிலியும், கை விரலில் பச்சைக்கல் வைர மோதிரமும் மின்னித் தெறிக்கும். பணக்காரச் செழுமையின் மொத்த வடிவமாக—பகட்டுக் கவர்ச்சியின் திரட்டுப் பாலாகத் தான் அவர் வெளியே வருவார்.

ஆனால் இன்றைக்கோ ?

மனைவி மங்களம் கார் விபத்தில் சிக்கி ஒரு சிறு நகரத்தின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறாள் என்று தந்தி வந்தது தான் தாமதம். போதை மருந்து தரப்படாமல் அறுவைச் சிகிச்சைக்கு ஆளானவனைப்போல அவரது கால்கள் தரையில் பாவவில்லை; மூளையும் நிதானமாக வேலை செய்யவில்லை. வயற்காட்டிற்குப்போய் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த தம் பண்ணை ஆளை அழைத்து வந்து, செய்தி சொல்லிவிட்டுக் கிளம்புவோம் என்கிற பொறுமை கூட அவருக்கு இல்லை. வேலைக்காரியிடம் மட்டும் 'வீட்டைப் பார்த்துக் கொள்' என்று கூறிவிட்டுப் பரபரப்புடன் கிளம்பிவிட்டார் கையில் ஒரு தோல் பையுடன்.

அந்தச் சமயம் பார்த்துச், சாலையில் ஒரு சைக்கிள் வந்தது; அதன் பின்னிருக்கையில் தொற்றிக் கொண்டார் அவர். தம்முடைய சிற்றூரிலிருந்து இரண்டு மைல் தொலைவுக்கு இப்பால் உள்ள இந்தப் புகை வண்டி நிலையத்திற்கு வந்து பார்த்தால்.. அதில் பணம் இல்லை. 'செக்' புத்தகம் மட்டும் அவரைப் பார்த்துச் சிரிக்கிறது.

அதை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்?

பகல் நேரமாக இருந்தாலும் அந்த ஊரிலேயே தமக்குப் பழக்கமான சிலரிடம் போய்ப் பணத்திற்கு வழி செய்து விடலாம்.

இப்போதோ இரவு பத்து மணிக்குமேல் ஆகிவிட்டதே!

அதோ, வண்டியும் வரப் போகிறதே!

இதை விட்டால், பிறகு தம் மனைவியை உயிரோடு அவரால் பார்க்க முடியுமா? ஒரே ஒரு வார்த்தையாவது அவளிடமிருந்து கேட்க முடியுமா?

புகைவண்டி நிலையத்தில் வந்து நிற்கும் அவர் யாரைப் போய்க் கடன் கேட்க முடியும்? யாரும் அறிமுகம் ஆனவர்களாகவும் அவர் கண்களில் தென்படவில்லையே !

அவருக்குள்ள ஒரே வழி, பயணச் சீட்டு வாங்காமலே வண்டியில் ஏறுவதுதான். அப்படி ஏறிய பின்னர் டிக்கட் பரிசோதகரிடம் எப்படித் தப்புவது ? அவர் எங்காவது இடையிலேயே இறக்கி விட்டு விட்டால் ?

மேலும், தம் வாழ்நாளிலேயே அவர் சீட்டு வாங்காமல் பயணம் செய்ததே இல்லை. அவர் பணக்காரர்தாம் என்றாலும் பாதை மாறி நடந்தவர் அல்லர்; அரசாங்கத்தை ஏமாற்றிச் சட்டத்தின் கழுத்தை நெரித்துச் சவமாக்கி அதன் கல்லறைமீது 'சிபாரிசுகள்'

என்னும் செங்கற்களை அடுக்கித் தம் செல்வாக்கு மாளிகையை எழுப்பிக்கொண்டவரும் அல்லர். 'வானம் பொழிகிறது; பூமி விளைகிறது; வயலில் உழுகிறவனின் வயிற்றிலும் அடிக்க மாட்டேன்'—என்கிற நேரான வழியில் சீராக வளர்ந்தவரே அவர்.

தமக்கு இப்படி ஒரு தவிப்பு—தத்தளிப்பு—சோதனை—ஏற்படும் என்று அவர் நினைக்கவே இல்லை.

அவருக்குச் சற்று தூரத்தில், அவரைப் போலவே அந்த வண்டியில் ஏறுவதற்காகச் சிலர் நின்றுகொண்டிருந்தார்கள்.

அவர்களிடம் போய்,

"ஒரு எட்டணு இருந்தால் கொடுங்கள்"—என்று எப்படிக் கேட்பது?

அவருடைய வளமான உடம்பையும் உடையையும் பார்த்துவிட்டு அவர்கள் இளக்காரமாகச் சிரித்துவிட்டால்......?

"போ. போ."—என்று கேவலமான முறையில் கையை அசைத்து விட்டால்......?

"என்னய்யா, பார்த்தால் பெரிய பணக்காரர் மாதிரி இருக்கிறீர்; நீரே கையை நீட்டிப் பிச்சை கேட்கிறீரே! உமக்கு வெட்கமாக இல்லை?"

—என்று முகத்தில் அறைந்தாற்போல் கேட்டுவிட்டால்...?

அதைவிட வேறு என்ன அவமானம் இருக்கிறது? உயிரையே அவர் விட்டுவிடலாமே!

ஆனல் உயிருக்கு மன்ருடி, வாழ்வின் விளிம்பிலே நூல் இழையில் தொற்றிக்கொண்டு, 'இறப்பு'—என்னும் படுபாதாளத்தில் விழப்போவது இந்தக் கணமோ அடுத்த கணமோ என்கிற நிலையில், தன் கணவரின் முகத்தைக் கடைசியாக ஒரு முறையாவது காணமாட்டோமா என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருப்பாளே அவருடைய அந்த அருமையான மனைவி.

"அய்யோ! மங்களம்! நான் பாவியாப் போயிட்டேண்டி!"—என்று வாய்விட்டே கதறிவிட்டார் அவர்.

முகத்தைத் துண்டினுல் மூடிக்கொண்டு அந்த சிமெண்ட் பெஞ்சின் ஓரத்தில் முடங்கியவராகக் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

* * *

இரண்டாவது மணியும் அடித்துவிட்டது.

"இரவுப் பகலவன்" என்று சொல்லும் அளவுக்குப் பெரிய வெளிச்சத்துடன் வெகு தூரத்திற்கு அப்பால் வரும் வண்டியின் முன் விளக்கும் தெரியலாயிற்று.

கண நேரத்தில்..........

சரக்....சரக்.... என்னும் புடவை ஒலி;

மல்லிகை மணம்; 'சில்' லென்னும் வீச்சு.

"அய்யா, பெரியவரே! வண்டி வந்து விட்டது; எழுந்திருங்கள்"

—வளையல் குலுங்கும் இளங் கரம் தம் தோளைத் தொட்டுச் சற்றே உலுக்குவதை உணர்ந்தார் கண்ணப்பர்.

நம்பிக்கை அனைத்தும் நைந்து போன தளர்ச்சியுடன் முகத்தில் வழிந்த கண்ணீரைத் துண்டினுல் துடைத்தவாறே, திரும்பி, நேராக அமர்ந்து அந்த அழகுப் பதுமையை ஏற இறங்கப் பார்த்தார்.

"வண்டி வந்து என்னம்மா ஆகப் போகுது? ஆயிரக் கணக்கிலே சொத்து இருந்தும் ஒரு அரை ரூபாக் காசுக்கு வக்கு இல்லாமே இங்கே குந்திக் கிடக்கிறேனே! சாகப் போகிற என் தங்கத்தைக் கடைசியாப் பார்க்கிற புண்ணியம் கூடச் செய்யாத பாவி ஆயிட்டேம்மா, பாவி ஆயிட்டேன்!"

'அடப் பாவமே! அதனுலே தான், இத்தனை நாழியா இங்கே அழுதுக்கிட்டே இருந்தீங்களா? நான் பக்கத்திலேதான் நிற்கிறேன். என்கிட்டே ஒரு வார்த்தை கேட்கக் கூடாதா?"

"முன் பின் தெரியாத உன் கிட்டே எந்தத் தைரியத் தோடம்மா நான் கேட்பேன்? என்னையும் ஒரு பிச்சைக்காரனு நீ நினைச்சுட்டா......?"

"சரி சரி. நீங்க எந்த ஊருக்குப் போகணும்?"

ஊரின் பெயரைச் சொன்னர் கண்ணப்பர்.

சிட்டாய்ப் பறந்தாள் அந்தப் பாவை.

அவள் பயணச் சீட்டை வாங்கி வருவதற்கும் ரயில்வண்டி நிலையத்தில் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

இருவரும் ஏறிக்கொண்டார்கள்.

அது இரவு வண்டியானதால் கூட்டமே இல்லை. காலியாகக் கிடந்த இருக்கைகளில் எதிர் எதிராக அமர்ந்து கொண்டனர்.

வண்டி சீறிக்கொண்டு கிளம்பிற்று.

"உன் பேர் என்னம்மா?"

—என்று கேட்டார் கண்ணப்பர்.

"மலர்விழி"—என்ருள் அவள்.

"நல்ல தமிழ்ப்பேரா இருக்கே! உன் அப்பாவுக்கு நல்ல தமிழ்ப்பற்றுப் போல இருக்கு!"

"வெறும் சாதாரணப் பற்று இல்லே; வெறியே உண்டு. ஆங்கில மொழியாதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய அயர்லாந்துக்காரர்களின் உணர்ச்சி, நம் நாட்டு மக்களுக்கு இன்னும் முழுசா வரலையே என்று அடிக்கடி புலம்புவார். ஆனு.........."

"என்னம்மா 'ஆனு'....?"

"இப்ப உள்ள மறுமலர்ச்சி நிலைமைகளெல்லாம் அவர் காணக் கொடுத்து வைக்கலே! 1948-ல் நடந்த மொழிப் போராட்டத்திலே அவர் மண்டையில் சரியான அடி. அதனுலேயே பிறகு இறந்து விட்டார்."

—மலர்விழியின் கண்கள் பனித்தன.

அவளுக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று தெரியாமல் கண்ணப்பரும் திக்கித் திணறினர்.

வண்டியோ பந்தயக் குதிரையாகப் பறந்தவண்ணம் இருந்தது.

வெளியே ஒரே கும்மிருட்டு, ஏழையின் வாழ்வைப் போல.

* * *

சில மணித்துளிகள் ஆவியாயின.

ஏதோ ஒரு நினைவின் மின்னல் வெட்டு!

கண்ணப்பர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தார்.



"அம்மா, மலர்விழி! நீ மட்டும் வரலேன்னு என் கதி என்ன ஆகியிருக்கும் தெரியுமா? கடைசி நேரத்திலே நான் கட்டினவளைப் பார்க்க முடியாமல் போச்சேங்கிற ஏக்கத்திலே நான் மாரடைப்பு வந்து செத்தாலும் செத்துப் போயிருப்பேன். நீ செய்திருக்கிற இந்த உதவியை நான் மறக்கவே முடியாது. அதுக்குக் கைம்மாறு நானும் உனக்கு ஏதாவது செய்ய வேணுமா?"

—என்று சொல்லியவாறே தம் விரலில் மின்னிக்கொண்டிருந்த பச்சைக்கல் மோதிரத்தைக் கழற்றினார்.

"ஒண்ணும் வித்தியாசமா நினைக்காதே! தட்டாமல் இதை நீ ஏற்றுக் கொள்ளணும்."

—என்றவர், சட்டென்று மலர்விழியின் கரத்தைப் பற்றி உள்ளங்கையில் மோதிரத்தை வைத்துத் திணித்தார்.

மலர்விழிக்குத் திகைப்பின் அதிர்ச்சி. என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தாள்.

கண நேரந்தான்.........

"மோதிரம் சாதாரணமானது என்று யாருக்கும் பரிசாகக் கொடுத்திடாதே! அசல் வைரம்; இன்னைக்கு நிலவரத்திலே இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறையாது."

—கண்ணப்பரின் இந்த வார்த்தைகள் அவளது காது மடல்களில் அலை மோதியதும்..

மலர்விழியின் சிவந்த இதழ்களில் ஒரு வரண்ட முறுவல் இழையோடியது.

"நான் இன்று செலவழித்த எட்டணாவுக்கு இரண்டாயிரம் மதிப்புள்ள இந்த மோதிரம் ஈடாகுமா?"

—சிரித்தவாறே கேட்டாள் அவள்.

கண்ணப்பருக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை.

''பார்க்கப் போனால், என்னுடைய எட்டணாவுக்காக உங்களிடம் இந்த மோதிரத்தை வாங்கிக் கொள்வதும் ஒரு வகையில் 'பிச்சை' தானே?''

'' அய்யய்யோ ! அப்படியெல்லாம் நினைக்காதேம்மா. தெய்வம் போல வந்து எனக்கு நீ உதவி செய்தே. உனக்கு நான் வேறே எப்படிக் கைம்மாறு செய்ய முடியும்? ''

'' உங்களைப் பொறுத்தவரை இது சாதாரணக் கைம்மாறு இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை இது தகாத பேராசையின் சின்னம். மேலும் இந்த விலை உயர்ந்த மோதிரத்தை என் விரலிலே மாட்டிக்கொண்டு நான் வீட்டுக்குப் போனால், இது நேரான வழியில்தான் வந்தது என்று யாராவது நம்புவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா ? ஐம்பது வயதைத் தாண்டிய பெரியவர்தான் எனக்கு, நன்றிக் கடனாகத் தந்தார் என்று நான் சத்தியம் செய்தாலும், என் தாயே கூட என்னைச் சந்தேகப் படமாட்டாளா ? கோபுரத்திற்குக் கலசம் வைக்கலாம் ; ஆனால் குடிசைக்குக் கலசம் வைக்கலாமா ? அதனால் கலசத்துக்குள்ள மதிப்பே போய் விடாதா ? நானோ வெறுங் குடிசை ; இப்படி வைர மோதிரத்தைப் போட்டுக் கொள்வதற்கெல்லாம் ஆசைப்படலாமா ? . . . . . . . . . . இதோ நான் இறங்க வேண்டிய ஊரும் வந்து விட்டது. நான் வரட்டுமா ?''

ஒரு குலுங்குக் குலுங்கி வண்டி நின்றது.

தன் கையிலிருந்த பச்சைக்கல் மோதிரத்தைக் கண்ணப்பரின் கையில் திணித்துவிட்டு மலர்விழி இறங்கி விட்டாள்.

இருளில் அவள் நடந்து சென்றது கறுத்த அட்டைப் புழுக்களுக்கு நடுவே, ஒரு பட்டுப்புழு ஊர்வதுபோலத் தோன்றியது.

கண்ணப்பர், அவள் சென்ற திக்கையே பார்த்த வண்ணம் இருந்தார்.

அவர் விழிகளிலிருந்து நீர் வழிந்தது.

' மற்றவர்களின் இரத்தத்தை உறிஞ்சுவதில் இன்பங் காணும் அட்டைகள் நிறைந்த இந்த உலகத்தில், கைம்மாறு விரும்பாத இப்படி ஒரு மனிதப் பிறவியா.......?''

கண்ணப்பரின் நினைவோட்டம் போலவே, அந்தப் புகைவண்டியும், மிக விரைவாக ஓடத் தொடங்கியது.

உயர்திரு 'தமிழரசு' நிர்வாக அதிகாரி அவர்களுக்கும் அதைச் சேர்ந்த அனைவருக்கும் K. N. கணேசன் வணக்கமாக எழுதிய கடிதம். நலம் ; நலமறிய அவா. தாங்கள் 16—10—70 'தமிழரசு இதழில்' என்னைப்பற்றியும், என் குடும்பத்தைப்பற்றியும் பாராட்டியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் செய்த விவசாயத்தையும், முன்னுக்குவந்த காரணத்தையும் காட்டிப் பாராட்டி இருக்கிறீர்கள். என் விவசாயத்திற்கு வழிகாட்டிய முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்களையும், அதிகாரிகளையும் கொண்டுதான் இந்த விவசாயத்தில் வெற்றி பெற்றதை நான் மறக்க முடியாது. தவிர இந்நாட்டிற்கு விவசாயமே முக்கியம் என்று அண்ணா அவர்களே எடுத்துக் காட்டினார்கள் என்பதை மறக்க முடியாது. அதே போல் இன்று முதல் அமைச்சர் பொறுப்பில் இருக்கும் அண்ணன் கருணாநிதி அவர்களுக்கு இதை ஒரு வேண்டுகோளாகக் கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்திற்கு முதல் இடம் கொடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
அன்பன்
K. N. கணேசன்,
20—10—70.

களம்பூர்,
போளூர் வட்டம் (வ.ஆ.)




பிச்சைக்காரர்களுக்குத் தொழில் கற்றுக் கொடுக்கும் மறு வாழ்வு இல்லங்கள் அமைக்கும் திட்டத்தினை முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இதற்காக ஆறு ஆதரவு இல்லங்கள் தமிழகத்தில் அமைக்கப்படும். (1) செங்கல்பட்டுக்கும் காஞ்சிக்கும் இடையே, (2) சென்னை நகருக்கும் வேலூருக்கும் இடையே, (3) கள்ளக்குறிச்சிக்கும் திருக்கோவிலூருக்கும் இடையே, (4) தர்மபுரிக்கும் கிருஷ்ணகிரிக்கும் இடையே, (5) தஞ்சைக்கும் புதுக்கோட்டைக்கும் இடையே, (6) மதுரைக்கும் சிவகாசிக்கும் இடையே ஆக ஆறு இடங்களில் இந்த இல்லங்கள் அமைக்கப்படும்.

முதல் கட்டமாகத் தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் இந்த இல்லங்களில் அனுமதிக்கப்படுவர். தமிழகம் முழுவதும் சுமார் 5,000 தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் இருப்பரெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவர்களுக்குச் சிகிச்சையளிப்பது, பேணிப் பாதுகாப்பது, தொழில் புரியச் செய்வது ஆகிய பணிகளை இந்த ஆதரவு இல்லங்கள் மேற்கொள்ளும். இதற்காக 1970-71-ஆம் ஆண்டில் 40 லட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

படிப்படியாக, வேலை செய்ய இயலாத அங்கவீனப் பிச்சைக்காரர்கள், ஊனமின்றிப் பிச்சை எடுப்பவர்கள் ஆகியோரும் இந்த இல்லங்களில் சேர்க்கப்படுவர்.

இதற்காகப் ''பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு நிதி'' ஒன்று ஏற்படுத்தப்படும். இந்து, கிறித்தவர், முஸ்லிம்களின் கோவில்கள், திரைப்பட அரங்குகள், உள்ளாட்சி நிறுவனங்கள், அறநிலையங்கள், சமூக சேவை நிலையங்களிடமிருந்து நிதி வசூலிக்கப்படும். இதன் மூலம் 30 லட்ச ரூபாய் வசூலிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் தமிழகத்தை நோய் போல் வாட்டிடும் பிச்சைக்காரர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்.

கர்ப்பம் தரிப்பதைத் தடுப்பதற்காகக் கருப்பையில் '' லூப் '' போன்ற ஒரு பொருளை அமைப்பது புதிதானதல்ல.

அரபு நாடுகளில் நெடுந்தூரப் பயணத்தின்போது, ஒட்டகம் கர்ப்பம் தரித்துவிடாமலிருப்பதற்காக அதன் கர்ப்பப் பையில் கூழாங்கல்லை வைக்கும் பழக்கம் பல நூற்றாண்டுகளாகப் பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. எனவே, இவ்வகைக் கருத் தடைகளுக்கு இது தான் முன்னோடி எனலாம்.

1880-ல் ஐரோப்பிய டாக்டர்கள் காளான் வடிவில் செய்யப்பட்ட ஒரு வகை உலோகத்தைக் கருப்பையில் வைத்துக் கருத்தடைக்குப் பயன்படுத்தலாமென்று கண்டுபிடித்தார்கள். ஆனால், அவை பயன்படுத்தப்படவில்லை.

நாற்பது ஆண்டுகளுக்குப் பின் 1920-ல் இராஃபென்பெர்க் என்ற ஜெர்மன் டாக்டர், பட்டு நூல் சுற்றப்பட்ட ஒரு வகை வளையத்தினைக் கருத்தடைக்குப் பயன் படுத்தலாமெனக் கண்டுபிடித்தார். ஆயினும் இது பிரபலமாகவில்லை.

1959-ல் அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் லீப்ஸ் என்பவரும் டாக்டர் மார்க்குலீஸ் என்பவரும் பிளாஸ்டிக்கைப் பயன்படுத்தி தற்போதைய '' லூப் ''பைக் கண்டு பிடித்தார்கள். இன்றைய '' லூப் ''பிற்கு இவர்களே முன்னோடிகள்.

'' லூப் '' என்று வழக்காற்றில் சொன்னாலும் இவற்றிற்குப் பொதுவான பெயர் I. U. C. D. (கருப்பையில் பொருத்தப்படும் கருத்தடைக் கருவி என்பது பொருள்). லிப்ஸ் கண்டுபிடித்ததுதான் லூப். ஆனால், மற்றவையும் வழக்காற்றில் இதே பெயர் பெற்றன. இதில் வட்ட வடிவம், ஆங்கில எழுத்தான ''எஸ்'' போன்றது, புழுவைப் போல் நெளிந்தது இப்படிப் பத்து வகையுள்ளன.








**கை**புனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பினை உடைய இயற்கை, பண்டைத் தமிழிலக்கியங்களில் பேரிடம் பெற்றுச் சிறந்தது. இயற்கையைச் சிறப்பித்துப் பாடியதோடமையாது, புலவர்கள், அதை வாழ்க்கையில் நடைபெற்ற இன்ப துன்ப நிகழ்ச்சிகளோடு ஒருங்கிணைத்தும் காட்டியுள்ளனர். புலவர் ஒருவர், காட்டு வழியே நடந்து சென்றார். நாட்டில் மாவீரன் ஒருவன் மாண்ட செய்தி அவருக்கு எட்டியது. மாண்டவன் வீரஞ்செறிந்தவன் என்பதோடு இரவலர்க்கு வரையாது வழங்கிய வண்மையாளன். அவன் மறைவால் ஏற்பட்ட வருத்தச் சுமையோடு வழிநடந்த புலவர், எதிரே முல்லைக் கொடியொன்று பூத்துக் குலுங்கியதைக் கண்டார். மலரால் நிறைந்திருந்த கொடி மகிழ்ச்சியோடு இருப்பதாக எண்ணிய அவர், ''நாடே கையறு நிலையில் கலங்கிக்கொண்டு இருக்கும்போது நீ பூக்கலாமா?'' என்று மனம் குமைந்து கேட்டார். ''கொள்ளை மணங்கூட்டி வெள்ளை நிறங்காட்டி நிற்கும் முல்லையே! குவலயமே கண்ணீர் வடிக்கிறது! இளையோர் உன்னைச் சூடார்; வளை யணிந்தோர் வந்து சூழ்ந்து நின்னைக்கொய்யார். தன்னுடைய யாழ்க் கோட்டால் மெல்ல வளைத்துப் பாணன் பறிக்கமாட்டான்; பாடினியும் அணியமாட்டாள். பெருவீரன்—கொடையாளன்—சாத்தனுடைய மறைவால் ஞாலமே வருத்தத்திலாழ்ந்திருக்கும்போது, நீ மட்டும் பூத்துச் சிரிக்கலாமா? இது நியாயமா'' என்று அவர் பாடியதைப் படிக்கும்போது இயற்கையோடு புலவர்கள் இரண்டறக் கலந்த தன்மை நமக்கு நன்கு புலனாகிறது. மனத்தை உருக்கும் அந்தப் புறநானூற்றுப் பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

**இளையோர் சூடார் வளையோர் கொய்யார்**
**நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்**
**பாணன் சூடான் பாடினி யணியாள்**
**ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த**
**வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை**
**முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே**

**(புறம் 242)**

(ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனைக் குடவாயிற் கீரத்தனார் பாடியது). அளியோடும், கிளியோடும், மானோடும், மலரோடும் தம் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் மக்களை நம் மாத்தமிழ் இலக்கியங்களில் காண்கிறோம்.

இவ்வாறான இயற்கை கலந்த இலக்கியம் தமிழின் தனிச் சொத்து என்று அறிஞர் கூறுவர். பி. டி. சீனிவாசன் என்பார் கூறினார்:

''கிறித்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலிருந்து எளிய ஊர்ப்புறம் சார்ந்த வாழ்க்கை பழுதுறாது தொடர்ந்தது. சமஸ்கிருதப் பண்பாட்டுடனான தொடர்பைத் தடுக்க இயலா நிலை யேற்பட்ட காலத்தும் தமிழ்க் கவிதையுலகு சுற்றுப்புறத்திலிருந்த பகட்டற்ற காட்சிகளிலிருந்தே பாடுவதற்கான உள் தூண்டுதலைப் பெற்று வந்தது. செயற்கை சார்ந்த சமஸ்கிருதக் கவிதைகள் பண்டைத் தமிழரின் எழிலார்ந்த கவிதைகளைச் சிதைத்தமையால் இத்தனித் தன்மை சில நூற்றாண்டுகட்குப் பின்னர் மறைந்தது.''





"The simple rural life of the pre-christian centuries continued intact and not withstanding its contact with Sanskrit culture the Tamil muse still sought inspiration from the humble scenes around, which it deserted a few centuries later when the artificial poetry of Sanskrit destroyed the beautiful poetry of the early Tamils"

தம்மைச் சூழ்ந்திருந்த எளிய காட்சிகளையும், பொருள்களையும் கொண்டு அரிய கருத்துக்களைக் கூறுவது தமிழ்ப்புலவர் அனைவர்க்கும் இயல்பே யாயினும், அவர்களுள் திருவள்ளுவர் தலைசிறந்து நின்றார். அவர் ஒரு கண்ணாடித் தரை போன்ற கண்கவர் குளத்தருகே சென்று நின்றார், நீர்ப் பரப்பில் ஒட்டி உறவு கொண்ட வண்ணம், கொட்டியும், ஆம்பலும், நெய்தலும் பூத்துக் கிடந்தன. நீர் மட்டம் உயர்ந்தபோது கூடவே கொடிகளும் நீண்டு சென்றன. இக்காட்சியைக் கொண்டு அவர் சிறந்ததொரு கருத்தை விளக்கினார். நீர்ப் பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவின வாகும். அதுபோல் மக்கள் வாழ்க்கையின் உயர்வு அவர்களுடைய ஊக்கத்தின் அளவினதாகும்.

**''வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு,''**

குளத்திலிருந்த நீரைப் பலரும் வந்து மொண்டு சென்றனர். அள்ளிப் பருகி மகிழ்ந்தனர். மக்கள் மட்டுமல்ல, விலங்குகளும் அக்குளத்தில் நீரருந்தி மகிழ்ந்தன. தேங்கியிருந்த நீர், கால்களிற் பாய்ந்து சென்று நிலத்தை வளப்படுத்தியது. இவற்றைக் கண்ட வள்ளுவர், பேரறிவாளன் கையில் சேர்ந்த பணம், குளத்தில் சேர்ந்த நீருக்கு ஒப்பு என்றார். தன்னை நாடிவருபவர்க்குக் குளிர்ந்த இயல்போடு மலர் முகங்காட்டித் தாகம் தீர்த்தும், தானே சென்று 'தாயினும் பரிந்து' பாய்ந்து, வயலுக்கு வளம் ஊட்டியும் உதவும் குளத்து நீர் போல, அறிவாளரிடம் சேர்ந்த பொருள் அவரை நாடி வருவோர்க்கும் இனிதாகப் பயன்படும்; அவரிடமிருந்து பிரிந்து பல தொழில்களாகப் பெருகிப் பல்லாயிரவர்க்குப் பயனுமளிக்கும்.

**"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு''**

என்பது உயிர்மொழியல்லவா? அக்குளத்தில் மங்கை ஒருத்தி மண்குடத்தில் நீர்மொண்டு தலையிற் சுமந்து சென்றதை வள்ளுவர் கண்டார். அந்நாட்களில் பெண்கள் தலையிற் குடம் சுமந்து நீர் கொண்டுவருதல் உண்டு. இன்றும் கூட ஊர்ப் புறங்களில் இதைக் காண முடியும். அப்பெண் சுமந்த குடம் நன்கு சுடப்

படாதது. நீருடன் சிறிது தொலைவு நடந்ததும் கலம் விரிசல் கண்டு, உள்ளிருந்த நீரெல்லாம் கண நேரத்தில் வழிந்தோடியது; அவள் முகத்தையும், உடையையும் நனைத்தது. பச்சை மண் கலம், பெய்த அப்போது நீரைக் கொள்ளுமே யாயினும், விரைவில் கரைந்து, நீரை வெளியாக்கும்; கலமும் அழியும். பசுமண் கலத்திலுள்ள நீரானது மொள்ளும்போது தெளிவாக இருப்பினும், சிறிது போதில் கலங்கலாகும். முறையற்ற முறையில் சேர்த்தாருடைய பொருளை பசுமண் கலத்திலுள்ள நீருக்கு ஒப்பாக்கினார் திருவள்ளுவர். அக்கலத்தில் உள்ள நீர் கலங்கலாவதோடு கலத்தையும் உடைக்கும். அதே போன்று ஈவிரக்கமின்றித் தவறான வழியில் சேர்த்தபொருள் தானும் பயன்படாது தன்னைச் சேர்ந்தவனையும் அழிக்கும்.

"சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள் நீர்பெய்திரீஇ யற்று."

''வஞ்சனை வழியில் பொருளைச் சேர்த்துக் காப்பாற்றுதல் பச்சை மண் கலத்துள் நீரைவிட்டு அதைக் காப்பாற்றி வைத்தாற்போன்றது''—வள்ளுவரின் இவ்வாய்மொழியை உணர்ந்த பின்பும் வஞ்சனையால் பொருள்தேட எவர்க்கும் எண்ணம் தோன்றுமோ?

குளத்தில் ஒருவன் குளித்தான். தன் மேலுள்ள அழுக்கைப் பன்முறையும் தேய்த்து நீக்கினான். புறத்தூய்மை இன்றியமையாது வேண்டிய ஒன்று தான். ஆனால் அவன் அகம் தூய்மையாக இருக்கிறதா? புற உடம்பை நீரைக்கொண்டு தூய்மையாக்கிக்கொள்ளலாம். மனம் தூய்மையாக இருக்க என்ன வழி? வாய்மை மேற்கொண்டால் அகம் தூய்மையாகிவிடும்.

"புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும்."

உடலைத் தூய்மை செய்த நீரோ தன் பணியை முடித்துக்கொண்டு நகர்ந்து விடுகின்றது. உள்ளத்தைத் தூய்மை செய்யும் நீரோ அதனை விட்டு அகலாமல் என்றும் நிலைத்துக் காணப்படுகிறது. அதனால்தான் '' வாய்மையாற் காணப் படும் '' என்று எடுத்தியம்புகிறார் புலவர்.

அகத்தே கறுத்துப், புறத்தே வெளுத்திருந்த உலகரனைவரையும் மனக்கண் முன் நிறுத்தி வள்ளுவர் எண்ணிப் பார்த்தார். காவிரியில், வையையில், இன்னும் உள்ள புண்ணிய நீர் நதிகளில் ஆடி, மூழ்கித் தம் உடலை மட்டும் தூய்மை செய்து, உள்ளத்தே அத்தூய்மை இல்லாதிருப்பின் யாது பயன்?

"மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்."

மனமாசு கூடாது; அகற்றப்படவேண்டியது. மனத்தே மாசற்றிருத்தலே அறமாகும்.

ஆழமும் அகலமும் கொண்ட அந்தக் குளத்தின் ஒரு பகுதிக்கு யாருமே செல்லத் துணியவில்லை. காரணம் அங்கேதான் பற்றியது விடாமைக்கு மூர்க்கனோடு ஒருங்குவைத்து எண்ணப்படும் முதலைகள் வாழ்ந்தன. உயிரினங்களைப் பற்றி அறிந்து கொள்வதிலே ஆர்வம் மிகக் கொண்ட வள்ளுவர் அப்பகுதி நோக்கிச் சென்றார். கரைமேலே நின்று கண்களைப் படர விட்டார். அப்போது வெயிலிலே இதமாகப் படுத்துக் கிடந்த சில முதலைகளை அவர் பார்த்தார். பெரிய முதலையின் திறந்த வாய்க்குள்ளே, ஒரு காக்கை, அதன் பற்களுக்கிடையே சிக்குண்டு கிடந்த துணுக்குச் சதைப் பகுதிகளைக் கொத்திக் கொத்தி எடுத்துக் கொண்டிருந்தது. இன்னும் இரண்டொரு முதலைகளும் வெயிலில் காய்ந்து கொண்டிருந்தன. காக்கைகள் அவற்றைக் கொத்தத் தொடங்கின. வலிய முதலைகள் மறுபடியும் தண்ணீருக்குள் மறைந்தன. தண்ணீருக்குள் தனியாதிக்கம் நடத்திய முதலைகள் தரைப் பகுதியை எட்டியவுடன் சிறு காக்கையாலுங்கூட எதிர்க்கப்பட்டன; இடருக்கு உள்ளாக்கப்பட்டன. காக்கை தண்ணீருக்குள் கால் வைக்குமா? வைத்தாலும் முதலைகள் முன் நிற்க முடியுமா? தண்ணீரில் வலிமைகொண்டு விளங்கும் முதலை—எல்லாவற்றையும்—பரியதும் கூர்ங் கோட்டதுமாகிய யானையையும்—வென்றுவிடுகின்றது. தரையிலோ எளிய பிற உயிர்களாலும் அது வெல்லப்படுகின்றது. அரசியல் அலுவலில் பழுத்த பட்டறிவு வாய்ந்த வள்ளுவர் இக்காட்சியைக் கொண்டே ஓர் அரிய கருத்தை ஆக்கித்தந்தார். 'இட மறிந்து' வேந்தன் செயற்படவேண்டும். வேந்தன் என்ன-எவருக்கும் இடமறிதல் இன்றியமையாதது. தத்தமக்கு வாய்ப்பான இடத்தில்தான் ஒன்றை நிறைவேற்றிக்கொள்ளும் வலிமையைப் பெற முடியும்: வாகை சூடவும் முடியும்.

"நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற."

குளத்தில் ஓரிடத்தில் கொக்கு ஒன்று ஒற்றைக் காலில் தவம் புரிவதுபோல நின்றது. ஓடு மீன் ஓட உறுமீன் வரும் அளவும் வாடியிருந்தது; 'ஒடுங்கி இருந்தே உன்னியது முடிக்கும்' அக்கொக்கு, மீன் தென்பட்டதும் கவ்விப் பிடித்தது. கொக்கின் அந்த நிலையைக் கண்ட செந்நாப் போதார் உலக மக்கள் கொள்ள வேண்டிய உயர்ந்த நீதியொன்றைக் கூறினார். '' பொறுத்திருக்கும் காலத்தில் கொக்குபோல் அமைதியாக இருக்கவேண்டும்; காலம் வாய்த்தபோது அதன் குத்துப் போல் தவறாது செய்து முடிக்க வேண்டும். ''

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து."

குளத்தின் மற்றொரு முனையில் ஒருவன் மீன் பிடித்துக்கொண்டிருந்தான். தூண்டிலில் புழு ஒன்றினைக் குத்தி உள்ளே முழுகவிட்டிருந்தான். தூண்டில் முள்ளை, அதில் குத்தியுள்ள இரை மறைத்தது. புழுவினைப் பார்த்த மீன் அதை இரை என்று எண்ணியதே தவிர, உள்ளே இருக்கும் இரும்பு முள்ளைத் தன்னையே அழிக்க இருக்கும் கருவியை அறியவில்லை. இரை கிடைத்தது என்ற மகிழ்ச்சியோடு எவ்விக் குதித்து விழுங்கியது; தூண்டிலில் மாட்டிக் கொண்டது. இக்காட்சியைக் காட்டிச் சூதாடுபவர்களுக்கு அறிவுரை கூற எண்ணினார் வள்ளுவர். '' தம்பி! சூதிலே உனக்கு வெற்றி

கிடைப்பதாகவே இருந்தாலும் அதை விரும்பாதே! அவ்வாறு கொள்ளும் வெற்றியால் மகிழ்ந்து மேலும் இப்பழிச் செயலைச் செய்ய விழைவது தூண்டிலில் உள்ள புழுவை இரையெனக் கொண்டு மீன் விழுங்குவதற்கு ஒப்பாகும். சூதை நீ மேற்கொண்டால் தூண்டிலிற் சிக்கிய மீனாவாய்! அதை வெறுத்தொதுக்கு'' என்றார்.

**"வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்**
**தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று."**

அகன்று பரந்திருந்த நீர்நிலையை அவர் கூர்ந்து நோக்கினார். குளத்திற்குக் கரையில்லாதிருந்தால் என்ன நிலை ஏற்படும் என்று எண்ணிப்பார்த்தார். கரை இருப்பதால்தானே நீர் தேங்கி நின்று பலருக்கும் பயன்படுகிறது. கரையில்லாதிருந்தால் ஓடி வரும் நீர் ஒரு பயனுமின்றி வீணாகிவிடுமே. உருண்டு வரும் நீரைத் தேக்கிக் காக்கக் குளக்கரை உதவுவது போல, ஒருவனிடம் சேரும் செல்வத்தைப் பாதுகாக்க உதவுவது எது என்ற சிந்தனை தோன்றியது. சுற்றத்தாரோடு மனம் கலந்து பழகும் தன்மையே ஒருவன் செல்வத்தை நிலைத்திருக்கச் செய்யும் கரையாகும். கரை உயர உயர நீர் மிகுந்து தேங்குமாறு போல, சுற்றத்தாரோடு மனம் கலந்து பழகும் தன்மை மிகமிக ஒருவனிடம் சேரும் செல்வமும் மேலும் மேலும் பயன்தரும்.

**"அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்**
**கோடின்றி நீர்நிறைந் தற்று."**

சுற்றத்தோடு நெஞ்சு கலத்தல் இல்லாதவன் வாழ்க்கை, குளப்பரப்பு கரையின்றி நீர் நிறைந்தாற் போலும்!

வள்ளுவரின் சிந்தனை மேலும் படர்ந்தது. குளத்திற்குத் தண்ணீர் வரும் வழிகளைப் பார்த்தார். உள்ளே வந்து சேர்ந்த தண்ணீரின் அளவைக் கண்டார். மதகுகள் வழியே வெளியோடும் நீரையும் கவனித்தார். வந்து சேரும் நீரைவிட வெளிச் செல்லும் நீரின் அளவு குறைவாக இருந்தால்தானே நீர் மட்டம் உயரும். உட்புகும் நீரைவிட வெளியே செல்லும் நீர் அதிகமானால் குளத்தில் நீர் தேங்கிநிற்க முடியாதல்லவா? செல்வம் சேர்ப்போர் இதை நன்கு கவனிக்க வேண்டும். வருவாய் குறைவாக இருந்தாலும், செலவு அதைவிடக் குறைந்திருப்பின் கவலையில்லை! செலவு, வரவைவிட அதிகமானால் அழிவுதான் மிஞ்சும்! இந்த அரிய கருத்தை அவர் கூறினார்.

**"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை."**

பத்துப் பத்துக் குறள் வீதம் அதிகாரம் வகுத்த வள்ளுவரின் சிந்தனையில், குளத்தைக் கண்டபோது எழுந்த பத்துக் குறட்பாக்களைக் கண்டோம். அப்பத்தும் கூடி நமக்குப் பயன் விளைவிக்குமாக!

---

## அடுத்த இதழில் தொடங்குகிறது!

**அனைத்து இந்தியாவுக்கும் வழிகாட்டியாக விளங்கும் நம் அரசு ஆற்றிவரும்**

**நன்மைகள் ஆயிரம் ஆயிரம் என்பதை விளக்கும்**

**ஆதாரபூர்வமான கட்டுரைத் தொடர்**




**சாதனைச் சரிதத்துக்குச் சான்றுதரும் பட்டயம் இது!**

# ஊசி வாங்கலையோ ஊசி!

“ஊசிவாங்கலையோ ஊசி ஊசி”, ‘‘பாசிமணி அம்மோ பாசிமணி’’ என்ற பல்லவியைப் பாடிக் கொண்டு நகரத் தெருக்களில் கூட்டம் கூட்டமாகச் செல்லும் கும்பல் நம் கண்களைக் கவராமல் போவதில்லை. ஆணும் பெண்ணும் அரை நிர்வாணம்; ஆண்கள் பெரும்பாலும் கோவணத் தாண்டிகள்; தலையிலும் கழுத்திலும் அணிந்துள்ள பாசி மணிகளிலும், கொண்டை முடிச்சிலும் ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானமான வாழ்வு; இடுப்பிலே தொங்கவிட்ட குழந்தை; இதில் தம்பதிகளிடையே வேறுபாடு கிடையாது; குடும்ப பாரத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும் சமரச உள்ளம்; தகர டப்பாக்கள்; அதிலே எச்சிற் சோறு; எலும்புத்துண்டுகள்; யாதும் ஊர்; இடமெல்லாம் அவரிடம்; சேத்துப்பட்டு புகை வண்டி நிலையம், கோட்டைக் கடற் கரையின் பின்புறப் பக்கம் போன்ற இடங்களிலே கிழிந்த கோணிக்குடிசைகளிலே வாழும் இவர்கள் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே தமிழகத்தே வாழ்ந்து வரும் மரபினர்; நீலகிரி தோடர் போன்றோர் பேசும் மொழி; குறிஞ்சி நில மக்கள் என அகப்பொருள் இலக்கண நூலில் குறிப்பிடப்படும் ‘‘குறவர் குறத்தியர்’’ மரபு; ஏன்? ‘‘குறவர் குடிசை நுழைந்தாண்டி அந்தக் கோமாட்டி எச்சில் விழைந்தாண்டி’’ என வடலூர் வள்ளலார் கும்மியிலும் நுழைந்தவர்கள். தமிழ், தெலுங்கு போன்ற மொழிக் கலப்புடைய இப் பழங்குடி மக்கள் இன்று தெருத் தெருவாய், ஊர் ஊராய்த் திரிகின்றனர். கண்ட கண்ட எச்சிற் சாதத்தைச் சேர்த்து வைத்து உண்கின்றனர்; விழாக்காலங்களில் வெளியே எறியப்படும் எச்சிற் சோற்றிலேயே காலம் தள்ளுவோரும் பலர். கூடை முடைதல், பாசி மணி கோத்தல், ஊசி விற்றல் போன்ற பரம்பரைத் தொழிலுடையவர்கள்; பலர் திருட்டுத் தொழிலும் உடையவர்கள்.



அணிலை, அதுபோன்ற குரல் எழுப்பிப் பிடித்துத் தலையை உடனேயே அமுக்கிக் கொன்று பச்சையாகவே இவர்கள் தின்பது பரிதாபமாக இருக்கும்; அண்மையிலே பூனைகளை இவர்கள் பிடித்துத் தின்பதை அறிந்த காவல் அதிகாரிகள் கவனமாக இருக்க வேண்டுமெனப் பொதுமக்களுக்கு பத்திரிகை வாயிலாக எச்சரிக்கை விடுத்ததை அறிவோம்; இன்னும் இவர் தம் குலப் பெருமை ‘குற்றாலக் குறவஞ்சி’ போன்ற இலக்கியங்களிலே காணலாம்; ‘கழுதை தேய்ந்து தேய்ந்து கட்டெறும்பானது’ போலத் தமிழிலக்கியங்களால் பாராட்டப் பெற்ற இம்மரபினர் குலம் இன்று தாழ்ந்துஇழிநிலைக்கு வந்துள்ளது. நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவே நின்று ஆள்வது இன்றையத் தமிழரசு. கல்லாரையும் பொருள் இல்லாரையும் கற்றோராய்ப் பொருளுற்றோராய்ச் செய்வது இன்றையத் தமிழரசு. எனவே நரிக் குறவர்களுக்குப் புது வாழ்வு வழங்கத் தமிழக அரசு முன்வந்துள்ளதில் வியப்பில்லை.

சோழவரம் பகுதியிலுள்ள ஒரக்காடு கிராமத்து நரிக்குறவர்கள் தூதுக்குழு ஒன்று மாவட்ட

ஆணையாளரைச் சந்தித்துத் தம் குறைகளைக் கூறியது. தங்க இடம் தந்தால் பல்வேறிடங்கட்கு செல்லாது ஓரிடத்தில் தங்கி ஒழுங்காக வாழ்வதாகத் தூதுக் குழு கூறியது.

மத்தியத் திட்டத்தின்படி ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 ஏக்கர் நிலமும். ரூ. 5,000 மதிப்புள்ள வேளாண்மைக்குரிய கருவிகளையும் அளிக்கலாம். ஆரம்பத்தில் நரிக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த 8 குடும்பங்களுக்கு அது போன்ற வசதிகளை வழங்க ஆலோசனை கூறுவதாய் மாவட்டஆணையாளர் கூறியுள்ளார்; அன்றியும் அக் குடும்பங்களுக்குத் தேவையான நிலம் ஒரக்காடு கிராமம் அருகே உள்ளது என்றும் அவர் கூறினர்.

நரிக்குறவர் குடும்பக் குழந்தைகளுக்குக் கல்வி போன்ற ஏனைய வசதிகளையும் பொருளாதார உயர்வையும் வழங்குவதில் அரசுக்கு ஆர்வம் உண்டெனவும் கூறினர்.

தங்கள் நிலத்துக்குப் பட்டா வழங்க வேண்டும்; ஆடு வாங்கக் கடனுதவி தரவேண்டும்; குழந்தைகள் படிக்கப் பள்ளிக்கூட வசதிகள் தரவேண்டும் என அவர்கள் மாவட்ட ஆணையாளரிடம் வேண்டியிருப்பது அவர்களின் எதிர்கால வாழ்வு முன்னேற்றத்தின் அறிகுறியல்லவா?

'அரசு அன்று கேட்கும், தெய்வம் நின்று கேட்கும்' என்ற உண்மை உரை தமிழகத்தைப் பொறுத்தவரை பொய்த்துப் போகவில்லை. முதலமைச்சர் அவர்கள் மக்கள் முறையீட்டை குறைபாட்டை அவ்வப்பொழுதே ஆய்ந்து முடிவெடுக்க மனுநீதி முறை கொண்டு வந்துள்ளதை நாமறிவோம். காலம் கடத்தாது குறைகளைத் தீர்த்தல் ஆள்வோர் கடமையல்லவா? ஊர் ஊராக மர நிழலிலே மன்றங்கள் அமைத்து மக்கள் குறை தீர்க்கப்படுதல் கண்கூடு. எனவே, குறவர் இனத்தின் முறையீட்டையும் தீர்க்கத் தமிழக அரசு உடனேயே முன்வந்துள்ளமை கவனிக்கத்தக்கது. சென்னையருகே 16 கல் தொலைவிலுள்ள சோழவரத்தை அடுத்து உரக்காடு என்ற சிற்றூர் உள்ளது.




முதல் முயற்சியாக இங்கே குறவர்க[illegible] ஒரு குடியிருப்பு ஏ[illegible]டுள்ளது. இந்தக் குடியிருப்பில் இருபத்திரண்டு [illegible] தங்கியிருக்கின்றன. [illegible] இலக்கியங்களில் இவர்[illegible] தொழில் பேசப்படுகிறது. தேனும் தினையும் சேகரிப்பர். மண்ணுள் புதைந்த கிழங்குகளை அகழ்ந்தெடுப்பர்; மூங்கில் நெல் விளைப்பர், இவ்வாறு இயற்கையாகவே வேளாண்மையில் தாளாண்மையுடைய இக் குறவர் இனத்தார் இன்று உரக்காடு குடியிருப்பில் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது. நெல் பயிரிடுகின்றனர். அதோடு நில்லாது வகை வகையான காய்கறிகளையும் விளைவிக்கின்றனர். இன்று நல்ல வருவாய் தரும் தொழில்களாகக் கோழி வளர்ப்பும், ஆடு வளர்ப்பும் உள்ளன. அமெரிக்கா முதலான அயல் நாடுகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பெருந்தொழிலாக ஆடு மாடு, கோழி வளர்த்தல் நடைபெறுகின்றன. விஞ்ஞான ரீதியில் செய்யப்படும் இத்தொழிலால் அந்நாட்டு உணவு நெருக்கடி அகல்வதோடன்றிச் செல்வச் செழிப்பும் ஏற்படுகின்றது. எனவே, பயன் மிகத் தரும் கோழி ஆடு வளர்ப்பிலும் இக் குறவர் குலத்தினர் ஈடுபட்டிருக்கிறார்கள். நாட்டுக்கு இழுக்குத் தேடித் தரும் வகையில் நாடோடியாய்த் திரிந்து வந்த இவர்கள் எதிர் காலத்தே தமிழகத்துக்குப் பெருமையும் வருவாயும் தேடித் தரும் இனத்தவராய் மாறுவர் என்பதில் ஐயமில்லை. கடுகு சிறுத்தாலும் காரம் போகாதல்லவா? பழந்தமிழினத்தவரான இக்குறவர் இனத்தவர் வருங் காலத்தே தம் பழம் பெருமையைக் காத்து நாட்டிற்கு நல்லதோர் பெயரை நாட்டுவர் என உறுதியாக நம்பலாம்.





9எ

# வண்ணப் படங்களில்

## 39-ஆம் பக்கத்தில்

1. துறையூரில் அரசினர் மருத்துவ மனையைத் தொழிலமைச்சர் மாதவன் அவர்கள் திறந்து வைத்தார்கள். சட்டமன்றக் கொறடா அழகமுத்து அவர்களும், அன்பில் தருமலிங்கம் அவர்களும், மேலவைக் கொறடா பராங்குசம் அவர்களும் அவ்விழாவில் பங்கேற்றனர்.

2. சீரணித் தொண்டர்களால் நல் லூர்ப்பேட்டையில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தை 1-11-'70 அன்று தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத் தார்கள்.

3. அக்டோபர் 29-ஆம் நாள் தீபா வளி விழாவையொட்டி சென்னை நகரிலுள்ள பல்வேறு அனாதை இல்லங்களைச் சேர்ந்த 550 குழந்தை களுக்கு, தமிழ்நாடு ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள், தமது மாளி கையில் தேநீரும், பிஸ்கோத்தும் வழங்கினார்கள்.

4. சென்னை ராஜாஜி மன்றத்தில் 24-10-1970 அன்று நடைபெற்ற தமிழ்நாடு நகர் மன்றத் தலைவர் களின் மாநாட்டைத் துவக்கி வைத்து உரையாற்றுகிறார் தமிழக முதல்வர்.

5. பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து திரும்பிய கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைத் தமிழக முதல்வர் அவர்களும் ஏனைய அமைச் சர் அவர்களும் விமான நிலையத்தில் வரவேற்கும் காட்சி.

6. 16-9-1969 முதல் 15-9-1970 வரை, கடமையாற்றும் வேளைகளில் கொல்லப்பட்ட காவலர்களின் நினைவு நாள் 21-10-1970 தமிழக மாநில காவல் துறை அதிகாரியின் அலுவ லகத்தில் கொண்டாடப்பட்டது. கடமையாற்றி மறைந்த காவ லர்க்கு மரியாதை செலுத்தும் காவலர்களின் அணி வகுப்பு; மாநில அதிகாரி நினைவுச் சின்னத் தில் மலர் வளையம் வைத்து மரியா யாதை செய்கிறார்.

## மையப் பக்கங்களில்

உவகை தகும் உதகையின் பல்வேறு காட்சிகள்.

## 42-ஆம் பக்கத்தில்

1. அனைத்துலக நிதியின் நிர்வாக இயக்குநர் திரு சுவிட்சருக்கு, தமிழ் நாடு ஆளுநர் அளித்த விருந்தின் போது சுவிட்சர், தமிழக முதல்வர், தொழிலமைச்சர் ஆகிய மூவரும் உரையாடும் காட்சி.

2. சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்ட திரு சி. ஆர். கோலப்பா, மேலவை உறுப்பினராகப் பதவி யேற்றார். மேலவைத் தலைவர் திரு சி. பி. சிற்றரசு அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற பதவி ஏற்பு நிகழ்ச்சியில் தமிழக முதல்வரும் கல்வி அமைச்ச ரும் கலந்து கொண்ட காட்சி.

3. பீகார் மாநில அமைச்சர் திரு என். பி. சின்கா, தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர் நாவலர் அவர்களை 31-10-1970 அன்று சந்தித்தார்.

4. பிலிப்பைன்ஸ் நாட்டுக் குடி யரசுத் தலைவரின் செயலாளர் திரு அலெக்ஜான்ட்ரோ மெல்குர் அவர் கள் 22-10-1970 அன்று சென்னைக்கு வருகை தந்தபோது, அன்னாரை விமான நிலையத்தில் வரவேற்றார், தமிழ்நாடு அறநிலைய அமைச்சர் திரு கே. வி. சுப்பையா அவர்கள்.

5. எழும்பூர் சேவா நிலையம் ஆதரவில் அக்டோபர் 30-ஆம் நாளன்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி யில் தமிழக முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி தயாளு அம்மை யார் அவர்கள் குடிசைவாழ் குழந்தை களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

6. ஒரிசா அமைச்சர் திரு மஜ்ஹாய். தமிழ்நாடு அரசு உணவமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்களைச் சந்தித்தார்.

7. ரோம்நாட்டு உள்துறை அமைச் சர் திரு கார்னில் ஒனேசு 16-10-1970 அன்று சென்னைக்கு வந்தபோது, அன்னாரை விமான நிலையத்தில் வரவேற்றார் தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள்.

8. நவம்பர் திங்கள் முதல் நாளன்று தென்னார்க்காடு மாவட்டம் நெல்லிக்குப்பத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தைச் செயல் படுத்தும் பணியை, தமிழ் நாடு அரசு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்கள் தலைமையில், தொழிலாளர் நல அமைச்சர், திரு என். வி. நடராசன் அவர்கள் துவக்கி வைத்தார்.

9. பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளை வேளாண்மைத் துறை அமைச்சர் திருமதி சத்திய வாணிமுத்து அவர்கள் சந்தித்தார் கள்.

10. அமெரிக்க நாட்டின் ஏற்றுமதி இறக்குமதித் துறை இயக்குநர் திரு ஜான் சி. களார்க், தமிழ்நாடு அர சின் தொழிலமைச்சர் திரு மாத வன் அவர்களைச் சந்தித்தார்.

இந்தியாவில் வாழும் கோடிக்கணக்கான குடியான வர்களையும் தொழிலாளர்களையும் நம்மில் பலர் "பாமர ஜனங்கள்" என்கிற பெயரில் அடக்கிவிடுகிறோமல்லவா? கஷ்டப்படுவதற்கென்றே பிறந்த விகாரமான ஒரு மிருக மாக அவர்களை நாம் மதிக்கிறோம். அவர்கள் நெடுங்கால மாகவே பூமிக்குப் பாரமான மிருகங்களாக வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் அப்படித்தான் இருக்கிறார்கள். நாம் அவர்களிடம், "அனுதாபம்" காட்டுகிறோம். அவர் களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று ஓர் உபகாரியின் தோரணையில் பேசுகிறோம். ஆனால், அப்பாமர மக்களும் நம்மைப்போல் தனித்தனி மனிதர்கள் என்பதை நாம் உணர்வதில்லை.

"கிராமங்களிலுள்ள மண் குடிசைகளிலும், பட்டணங்களி லுள்ள சேரிகளிலும் வாழும் கோடிக்கணக்கான மக்க ளுக்கு அரசியல் என்றால் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் அன்றி வேறு யாதாக இருக்க முடியும்?

—நேரு


1


2


3


தமிழ்நாடு மாநில நகர் மன்றத் தலைவர்கள்,
நகராட்சி ஆணையாளர்கள் கூட்டு மாநாடு.
4


5


6


உவகை தரும் உதகைக் காட்சிகள்
TOURIST OFFICE
SCENIC SPLENDOUR OF OOTY


1
2
3
4
5
6
7
8
9
10

# சுற்றுலா வளர்ச்சிக்குச் சிறப்புக் கூட்டம்

சுற்றுலா இன்று உலகில் மிகப் பெரிய தொழிலாக வளர்ந்துள்ளது. பல மேலை நாடுகளில், முக்கிய வருவாய் தேடித் தருவதாகச் சுற்றுலா உள்ளது. ஆனால் பிற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தியா மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ளது.

சுற்றுலாவினை வளர்ச்சியடையச் செய்ய இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முயன்று வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாநிலத்தில் இதன் கூட்டம் நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு, இந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 14-வது கூட்டம், மதுரை மாநகரில் கடந்த 18—10—1970 அன்று நடைபெற்றது. மைய அரசின் சுற்றுலா, விமானப் போக்குவரத்து அமைச்சர் டாக்டர் கரன்சிங் அவர்கள் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்க, தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் இந்தக் கூட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள். தமிழகத்தின் வேளாண்மை-சுற்றுலா அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

மதுரை, பாண்டியன் உணவு விடுதியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தின் முதல் நாள் நிகழ்ச்சிகளில் எல்லா மாநிலங்களிலுமிருந்து வந்த சுமார் 100 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தொடர்ந்து 4 நாட்கள் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கான வழி முறைகள் எடுத்துக் கூறப்பட்டன.

தமிழக ஆளுநர் அவர்கள் தமது துவக்க உரையில் ''தமிழகத்தின் சிற்பக்கலைச் சிறப்புகள் நிறைந்த கோயில்கள், கடற்கரையோரப் பட்டினங்கள், சரித்திரப் புகழ்பெற்ற நினைவுச் சின்னங்கள், எழிலான மலைப் பகுதிகள், வன விலங்குகள் உள்ளன. இவ்வளவு சுற்றுலா அம்சங்கள் உள்ள தமிழகத்தைச் சொர்க்கம் ஆக்க முடியும். அதற்கு மத்திய அரசு உதவியளிக்க முன்வர வேண்டும். இதில் துணிந்து முதலீடு செய்யும் பணம் வீண் போகாது.

அயல் நாட்டினர் வருவதற்கான விசா நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டும். விமானம் மூலம் செல்ல வசதியில்லாச் சுற்றுலாப் பகுதிகளுக்கு ஹெலி காப்டர் விமானங்கள் விட முயல வேண்டும். விமானக் கட்டணம், உணவு விடுதிகளுக்கான கட்டணங்களைக் குறைக்கவேண்டும்.

முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளிடமிருந்து நாம் எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஜப்பானுக்கு ஆண்டு தோறும் 7 லட்சம் சுற்றுப் பயணிகள் வருகின்றனர். அதன் மூலம் 135 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்நியச் செலாவணி வருமானமாகக் கிடைக்கிறது.

நம் நாட்டில் வெளிநாட்டுப் பயணிகளைக் கவருவதோடு உள்நாட்டுக்குள்ளேயே சுற்றுலாப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். இதற்கான இளைஞர்கள் விடுதி, ஓய்வு இல்லங்களை அமைக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

மத்திய அமைச்சர் டாக்டர் கரன்சிங் பேசும்போது ''சென்ற ஆண்டு சுற்றுப் பயணிகள் வருகை 30 சதவீதம் அதிகரித்துள்ளது. 1973 இறுதிக்குள் ஆண்டுக்கு 4 லட்சம் பயணிகள் என்ற இலக்கினையும், 1980-க்குள் 10 லட்சம் பயணிகள் என்ற இலக்கினையும் அடைந்து விடலாம். ஆனால் 1973-ல் வரக் கூடிய பயணிகளுக்கு 10,000 தங்கும் அறைகள் தேவைப்படும். இப்போது நமது நாட்டில் உணவு விடுதிகளில் இதற்காக உள்ள அறைகள் 6,000 தான். எனவே மேலும் பல உணவு-தங்கும் விடுதிகள் அமைக்கப்பட வேண்டும்.

தரமுள்ள கைவண்ணப் பொருட்கள் விற்கப்பட வேண்டும். வெளி நாட்டவரைக் கவரக் கூடிய கலை நிகழ்ச்சிகள் ஆங்காங்கே நடைபெற வேண்டும். இதைத் தனியார்தான் செய்ய முடியும்.

கடந்த ஆண்டு சுற்றுலா மூலம் 34 கோடி ரூபாய் வருவாய் வந்துள்ளது. அடுத்த சில ஆண்டுகளுக்குள் 100 கோடி ரூபாய் வருமானத்தை எய்த முடியும். ஆனால் உலக வருவாயான 11,000 கோடி ரூபாயுடன் ஒப்பிட்டால் இது ஒரு சதவீதம் தான் வரும்.

சுற்றுப் பயணிகளுக்கு வட நாடு பழக்கப்பட்டவொன்றாக இருப்பினும், தென்னகம் முக்கியத்துவத்திலோ, அழகிலோ எந்த விதத்திலும் குறைந்ததல்ல'' என்று குறிப்பிட்டார்.

தமிழக அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் சிறப்புரையாற்றும் போது, தமிழகம் புறக்கணிக்கப்படுவதை எடுத்துரைத்தார். அமைச்சர் பேசியதாவது: ''நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சரணாலயங்கள் முதலியவைகளில் சுற்றுலா வசதிகள் செய்ய 50 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், ஒன்றே முக்கால் லட்சம் வரை ஒதுக்கப்படலாம் என்று முன்பு கூறப்பட்டிருந்தும் தமிழகத்திலுள்ள முதுமலை சரணாலய வளர்ச்சித் திட்டத்திற்கு இதில் எதுவும் ஒதுக்கப் படவில்லை.

சென்னையில் மிகப் பெரிய உணவு விடுதி கட்டும் திட்டத்தையும் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கைவிட்டு விட்டது என்பதை அறிகிறேன். அதே சமயத்தில் இதற்குப் பின் உருவான சில உணவு விடுதித் திட்டங்கள் பிற மாநிலங்களில்

உருப்பெறுகின்றன. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இதனை மேற்கொண்டிருக்கிறது. எனவே, சென்னையில் "4 நட்சத்திர உணவு விடுதி" கட்டும் திட்டத்தை உடனே மேற்கொள்ளும்படிச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாமல்லபுரத்தில் சுற்றுலா வசதிகள் செய்ய 1964-65ல் அளிக்கப்பட்ட திட்டத்திற்கு இன்னும் மத்திய அரசு ஒப்புதல் தராமல் இருக்கிறது. தேசிய சுற்றுலாத் திட்டங்கள், தேசிய விமானப் போக்குவரத்துத் திட்டங்களை மேற்கொள்ளும் குழுக்கள் அமைக்கும்போது மாநிலங்களிலிருந்து அரசின் பிரதிநிதிகள், பொதுமக்கள், தனி வணிகர்கள் அதில் சேர்க்கப்பட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டம் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்து, திட்டம் தயாரிக்க மூன்று குழுக்களை நியமித்தது. போக்குவரத்து, உணவு, தங்குமிட வசதிகள் மற்றும் சுற்றுலாப் பணிகள் பற்றி ஆய்வு செய்து தம் அறிக்கையை இந்தக் குழுக்கள் தயாரித்துத் தலைவருக்குச் சமர்ப்பிக்கும்.

### மதுரையில் 22 லட்சம் செலவில் ஒளி-ஒலி அமைப்பு

மதுரை மீனாட்சி கோவிலில் ஒலி-ஒளிக் காட்சிகளை அமைக்க மத்திய அரசு 4-வது திட்டத்தில் 22 லட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளது. இத் தகவலை மதுரை நகராட்சி அளித்த வரவேற்பின்போது மத்திய அரசு சுற்றுலா அமைச்சர் டாக்டர் கரன்சிங் தெரிவித்தார்.

இந்த ஒலி-ஒளி அமைப்பு என்பது வண்ண விளக்கு ஒளியில் அங்குள்ள சின்னங்களைக் காட்டும்போது அதன் வரலாற்றைப் பற்றிய வர்ணனையும் இசையும் பின்னணியில் ஒலி பரப்பப்படும். மேனாடுகளில் மிகப் பிரபலமான இக் காட்சி அமைப்பு தற்போது டெல்லி செங்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ளது. இது மதுரைக் கோவிலில் அமைக்கப் பட்டால், வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளைப் பெரிதும் கவர்வதாக அமையும்.



கோயமுத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த பேரூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பாப்பநாயக்கன் புதூரில் சீரணிப்படையினரால் ரூ. 10,500 மதிப்பீட்டில் கட்டப்படவிருக்கும் பள்ளிக் கட்டிடத்திற்கு விவசாய அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் 21—9—1970-ல் அடிக்கல் நாட்டினார்கள். வட்டாரச் சீரணித் தலைவர் திரு. தங்கமாணிக்கம் சீரணியின் நோக்கம் குறித்து விளக்கவுரை யாற்றினார். சுத்தமாக வைக்கப் பட்டுள்ள கோகுலம் அரிசனக் குடியிருப்பிற்கு வானொலிப்பெட்டி ஒன்றை மேற்படி விழாவில் அமைச்சர் பரிசளித்தார். பரிசைத் தெலுங்கபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு மருதாசலம் ஏற்றுக்கொண்டார்.

## வெண்பாப் போட்டி-4

ஈற்றடி : எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

முடிவு நாள் : 2—12—1970

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் அச்சகம்,
சென்னை–1.

குறிப்பு: நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா!




திருநாள்' என்றால் புதிய சிற்றுண்டிகள் செய்ய வேண்டும் என்ற ஆசை ஏற்படுவது இயற்கை.

நாம் முன்பு அறிந்திருந்த பழைய சிற்றுண்டி முறைகளையே எத்தனை நாளைக்குச் செய்து கொண்டிருப்பது என்ற எண்ணம் ஏற்படுவதே தவறு என்று எவரும் சொல்வதில்லை.

'புதியன புகுவது' உலக இயல்புதானே! இதோ சில 'நவீன களிகள்'— அதாவது ஆங்கிலத்தில் 'புட்டிங்'குகள் என்று அழைக்கப்படும் சிற்றுண்டிகள் தயாரிக்கும் முறை விவரிக்கப்படுகிறது.

எங்கும் கிடைக்கக் கூடிய முட்டை· பால், சர்க்கரை போன்ற பொருள்கள் கொண்டும்தயாரிக்கப்பட்டும் சிற்றுண்டிகளே இவை.

இச் சிற்றுண்டிகளுக்காகப் பயன் படுத்தப்படும் வெனிலா எசென்ஸ், செர்ரி பழங்கள் ஆகியவை கடைகளில் கிடைக்கும்.

நாம் பாயசம் சாப்பிடுவது போல் மேலை நாட்டினர் உணவு அருந்திய பின் சுவையான சிற்றுண்டியாக 'இந்தப் 'புட்டிங்'கை சாப்பிடுகிறார்கள்.

சென்னை அடையாறிலுள்ள சமையற் கலை இயல் தொழில் நுட்பக் கூடத்தில் 'புட்டிங்'தயாரிக்கப் பயிற்றுவிக்கும் முறையினை பயிற்சியாளர் திருமதி உமா. நடராஜன் இங்கு விவரிக்கிறார்.

செய்ம்முறை :

ஒரு வாயகன்ற பாத்திரத்தில் வெண்ணெயையும், தூள் செய்த சர்க்கரையையும் நன்றாக அடித்துக்கொள்ளவேண்டும்.

முட்டைகளை உடைத்து, அடித்து வைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகச் சர்க்கரைக் கலவையுடன் நன்றாகக் கலக்க வேண்டும்.

மாவையும், சோடாமாவையும் நன்றாகச் சலித்து வைத்துக் கொண்டு, செய்து வைத்த கலவையுடன் மெதுவாகக்கலக்க வேண்டும். வெனிலா எசென்சையும் கலக்கவும்.

ஒரு ஜெல்லி அலுமினியப் பாத்திரத்தில் நன்றாக வெண்ணெய்யைத் தடவி அதில் துண்டங்களாக வெட்டப் பட்ட செர்ரிப் பழங்களை அலங்காரமாக அடுக்கவும்.

கலவை, மரக்கரண்டியிலிருந்து தானாகவே கீழே விழும் பக்குவத்தில்இல்லாவிடில் அந்தப் பக்குவத்திற்குக் கொண்டு வருவதற்குப் பாலை சேர்த்துக் கலக்கவும்.

பின் அந்த அலங்காரமாக வைக்கப்பட்ட ஜெல்லிப் பாத்திரத்தில் இந்தக் கலவையைக் கொட்டி, மேலே எண்ணெய்த் தாளினால் (grease proof paper) வாயை இறுக்கமாகக் கட்டிவிடவும்.

பின்னர் ஓர் இட்லிப்பாத்திரத்திலோ, வாணலியிலோ ஒன்றரை மணி நேரம் ஆவியில் வேகவைக்கவேண்டும். பாத்திரத்தை அழுத்தமாக மூட வேண்டும்.

பின்னர், எடுத்துக் கவிழ்த்தால் பார்க்கவும் மிக அழகாக இருக்கும். அதைச் சூடாகவே சிறிது ஜாம் சாசுடன் பரிமாறவும். இது உண்ண மிகவும் சுவையானது.

## ஆல்பர்ட் புட்டிங்

**தேவையான பொருள் :**

மைதா மாவு—175 கிராம்.
முட்டை—2

சர்க்கரை—115 கிராம்.

வெண்ணெய்—115 கிராம்.

ஆப்ப சோடா—½ தேக் கரண்டி.

வெனிலா எசென்ஸ்—2, 3 சொட்டுகள்.

காய்ந்த செர்ரிப் பழங்கள்—20 கிராம்.

பால்—தேவையான அளவு கலப்பதற்கு.



## காபினெட் புட்டிங்.

**தேவையான சாமான்கள் :**

ரொட்டி—225 கிராம்.

முட்டை—2

வெண்ணெய்—30 கிராம்.

பால்—300 மில்லிலிட்டர்.

சர்க்கரை—115 கிராம்.

காய்ந்த திராட்சைப் பழம்—50 கிராம்.

முந்திரிப் பருப்பு—30 கிராம்.

வெனிலா எசென்ஸ்— 2, 3 சொட்டுகள்.

**செய்முறை :**

ஒரு ஜெல்லிப் பாத்திரத்தில் வெண்ணெய் தடவி அதனடியிலும் பக்கவாட்டத்திலும் திராட்சையையும், முந்திரிப் பருப்பையும் வைத்து அலங்கரிக்கவும்.

ரொட்டித் துண்டுகளில் வெண்ணெய் தடவி ஓரங்களை லேசாக வெட்டி எடுத்துவிட்டுப் பின் சிறிய துண்டங்களாக வெட்டிக்கொள்ளவும்.

வெட்டியதுண்டங்களை அந்தப் பாத்திரத்தில் அடுக்கிச் சிறிது சர்க்கரையையும், திராட்சைப் பழங்களையும் நடுவில் தூவவும்.

ஒரு பாத்திரத்தில் முட்டைகளை அடித்துக் கொண்டு, மீதியுள்ள சர்க்கரையையும், சூடான பாலையும் சேர்த்து நன்றாகக் கலக்கவும். வெனிலா எசென்சையும் ஊற்றவும்.

பின்னர் இந்த முட்டைக் கலவையை ரொட்டித் துண்டங்களின் மேல் ஊற்றி அரை மணி நேரம் ஊறவைக்கவும்.

மோல்டின் மேல் ஓர் எண்ணெய்த் தாளினால் (Grease proof paper) நன்றாக மூடி ஆவியில் 1 மணி நேரம் நன்கு வேக வைக்கவும்.

வெந்தவுடன் எடுத்து ஆறிய பின் ஒரு தட்டில் கவிழ்க்கவும். இது அழகாகவும் உண்ண மிகவும் சுவையாகவும் இருக்கும்.

## காஃபி மௌசி.

தேவையான பொருள்கள் :

பால்— அரை லிட்டர்.

முட்டை—2

ஜெலட்டின் (Geletine)— 15 கிராம். (2 தேக்கரண்டி)

கிரீம்—15 கிராம்.

காய்ந்த செர்ரிப் பழங்கள்— 10 கிராம்.

சர்க்கரை—100 கிராம்.

காபி — டிக்காக்ஷன் — வாசனைக்கு ஏற்ற அளவு.



"எங்க வீட்டுக்காரர் சாயங் காலம் ஆறு மணிக்குத் தான் பெட் காப்பியே சாப்பிடுவார் !"

"என்னடியம்மா அதிசயமா இருக்கு"

"அதிசயம் ஒண்ணுமில்லே ! அவருக்குத் தொழிற்சாலையில் நைட் ட்யூட்டி. காலையிலே வந்து படுத்தாருன்னா சாயங் காலம் ஆறு மணிக்குத் தான் எழுந்திருப்பாரு !"

**செய்முறை :**

சூடான தண்ணீரில் ஜெலட்டினை நன்றாகக் கரைத்து வைத்துக் கொள்ளவும்.

முட்டையின் வெள்ளைக் கருவைத் தனியாகவும், மஞ்சளைத் தனியாகவும் பிரித்து எடுத்துக் கொள்ளவும்.

மஞ்சள் கருவையும், சர்க்கரையையும் நன்றாக ஒரு பாத்திரத்தில் மரக் கரண்டியினால் கலந்து கொள்ளவும். அதில் மீதமான சூடான பாலை ஊற்றிக் கலக்கவும்.

இந்தக் கலவையை மிதமான சூட்டில் கரண்டியின் பின்புறம் ஒட்டும் வரை கெட்டியாக்கிக் கொள்ளவும். அடுப்பிலிருந்து இறக்கியபின் ஊறவைத்த ஜெலட்டினையும் காப்பி டிக்காக்ஷனையும் கலந்து நன்றாகப் பனிக்கட்டியின் (ஐஸ்) மேல் ஆறவைக்கவும்.

ஆறிய பின்னர் வெள்ளைக் கருவை நன்றாக அடித்து மெதுவாகக் கலக்கவும். அதை ஜெல்லி அலுமினியப்பாத்திரத்தில்ஊற்றி ஐஸ் பெட்டியின் குளிர் அறையில் ( Freezer ) ஒரு மணி நேரம் வைக்கவும்.

பின்னர் கெட்டியான பின் எடுத்துத் திருப்பி, கிரீமை ஊற்றி மேலே செர்ரிகளை அலங்காரமாக வைக்கவும். கமகம என்ற காஃபி மணத்துடன் உண்ண இனிதாகவிருக்கும் பண்டமிது.


**யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ் பிரைவேட் லிமிடெட்**

**1/4 சூரியநாராயண செட்டி தெரு, சென்னை—81.**

உயர்ந்த தரமுள்ள

" கோபுரம் " மார்க் மைதா, சூஜி

மற்றும்

" கப்பல் " மார்க் ஆட்டா

கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

**தொலைபேசி எண் : 52670—52671—52672—52673**

**தந்தி : MONARCH**


சிறு சேமிப்பு
ஓர்
ஒளிவிளக்கு
குல விளக்காம் உங்கள் மகன் கல்வி பெற....
திரு விளக்காய் உங்கள் மகள் மணவாழ்வு பெற....
பெருவிளக்காய் உங்கள் வருங்காலம் சீர் பெறவே....
ஒளிவிளக்காய் வழிகாட்டும் சிறுசேமிப்பு...
இன்றே உங்கள் அருகிலுள்ள
அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்
இயக்குநர்
சிறு சேமிப்பு நிறுவனம்
சென்னை-9

அந்தப் பெரியவர் தனது கண்ணாடியைச் சரிசெய்து கொண்டு மீண்டும் பார்த்தார். அவருக்குப் பிடிபடவில்லை, எப்படித் திடீரென்று அந்தப் புதிய கட்டடம் தோன்றியது என்று!

அவருக்குச் சொந்த ஊர் திருச்சி. செங்கல்பட்டிலுள்ள தனது மகள் வீட்டிற்கு வந்திருந்தார். மாலை வேளை. காலார நடக்கலாமென்று கல்லூரியில் படிக்கும் தனது பேரன் கனகசபையுடன் புறப்பட்டார். காஞ்சிப்பாதையில் நடந்த அவர்கள் இரண்டு மைல் தொலைவிலுள்ள திம்மாவரம் வந்து விட்டனர். அவ்வூரில் உள்ள புதிய கட்டடம் தான் பெரியவரைச் சிந்தனை செய்ய வைத்தது.

''இது என்னடா! புதுசா பெரிய கட்டடம்? போன தடவை நான் வரும்போது இல்லையே?''—தனது பேரனிடம் கேட்டார் பெரியவர்.

''இப்போக் கட்டினதுதான் தாத்தா, அது! நவீன அரிசி ஆலைன்னு பத்திரிகையிலே படிச்சிருப்பீங்களே!''

''ஓ! அதுவா.... கூட்டுறவு அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனார் திறந்து வைச்சாருன்னு, படிச்சேன்.........அதுவா இது?''

''ஆமாம் தாத்தா! தமிழ்நாட்டிலே 16 நவீன அரிசி ஆலைகள் இருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் இதுதான் முதல் ஆலை. தமிழ்நாடு கூட்டுறவு கொள்முதல் விற்பனை (மார்க்கெட்டிங்) சங்கத்தார் இதனை நடத்துகிறார்கள்''

''அந்தக் காலத்திலே ஆலையும் கிடையாது, ஒண்ணும் கிடையாது! உங்க பாட்டி நெல்லை அவுச்சு உரலிலே போட்டுக் குத்துவா! அந்தச் சம்பாச் சோத்தை உருட்டி உள்ளே போட்டா தனி மணமாயிருக்கும். உடலுக்கும் வலு! இப்போ மில்லு கில்லுன்னு வந்து சத்தை எல்லாம் எடுத்துப்பிட்டு அரைச்சுத் தள்ளுறாங்க! அந்தச் சக்கையைச் சாப்பிட்டு உன்னாட்டம் நோஞ்சான்களா பிள்ளைங்க இருக்காங்க! வேறு என்ன பலன் இந்த மில் அரிசியிலே!''

''நீங்க சொல்றது சாதாரணமா நம்ப ஊரிலே உள்ள அரிசி ஆலை, அதுதான் ரைஸ் மில்! அதிலே நெல் குத்தினா தவிட்டுச் சத்தெல்லாம் போயிடும்! இந்த நவீன ஆலையிலே அரைக்கிற அரிசி அப்படி இல்லே! கைக்குத்தல் அரிசியில் இருக்கிற எல்லாச் சத்துக்களும் இந்த அரிசியில் இருக்கின்றன. விவரமாச் சொன்னா, நெல்லிலே 22 முதல் 24 சதவீதம் உமியும், மீதி, அதாவது தவிடு சேர்ந்து 76 முதல் 78 சதவீதம் அரிசியும் இருக்குது. சாதாரண ரைஸ் மில்லில் அரைக்கும்போது உமி, தவிடு எல்லாம் போக 66 சதவீதத்திலிருந்து 69 சதவீதம் அரிசிதான் தேறும். ஆனால் நவீன அரிசி ஆலையில் அரைத்தால் 72 சதவீதம் அரிசி தேறும்.''




''டேய்! பரவாயில்லேடா நீ! உன்னைப் பட்டணத்திலே கல்லூரியிலே சேர்க்கிறேன்னு உங்கப்பா சொன்னதும் நீயும் காலைப்பிடிக்கிற கால் சட்டையும் பொம்பிளையாட்டம் பூப்போட்ட சட்டையும் போட்டுக்கிட்டுத்தான் திரிவே, எதுக்கு வெட்டிச் செலவுன்னு நினைச்சேன்! நீ விஷயத்தோடதான் படிக்கிறேங்கிறது இப்போதான் தெரியுது!''

''உடையை வைச்சு உள்ளத்தை எடை போடக் கூடாது தாத்தா! காலமாற்றம் அப்படித்தானிருக்கும்! நாங்க எவ்வளவு கற்றுக்கணும்—முன்னேறணுமுன்னு துடிக்கிறோம் தெரியுமா? சமீபத்திலே சென்னை கிண்டி பொறியியல் கல்லூரியிலே மாணவர்களே ஒரு பொருட்காட்சியை அமைச்சிருந்தாங்க! அவங்க செய்து வைத்திருந்த இயந்திரங்களைப் பார்த்தவங்க அப்படியே அசந்து போயிட்டாங்க......''

''டேய்.....டேய்...... நான் ஒரு பேச்சுக்குச் சொன்னேன்; நீ அதுக்குள்ளே படபடக்கிறியே! நீ என் பேரண்டா! புத்திசாலியாத்தான் இருப்பேன்னு எனக்குத் தெரியும்..........ம்......... பேச்சு எங்கேயோ துவங்கி வேறே எங்கேயோ போய் விட்டதே! ஆமாம்........ எதனாலே பழைய அரிசி ஆலைக்கும் புதிய அரிசி ஆலைக்கும் இவ்வளவு வித்தியாசம், அது தெரியுமா?''

''தாத்தா! பழைய மாதிரி அரிசி ஆலைகள் இரண்டு வகை உண்டு. ஒன்று ''ஹல்லர்'' எனப்படுவது. இது, இரண்டு கனமான உருளைகளாலானது. ஒன்றுக்குள் ஒன்று இருக்கும். வெளியே இருக்கிற உருளை சுழலும்; உள்ளே இருக்கிறது அப்படியே இருக்கும். உள்ளே உள்ள உருளையில் கத்தி மாதிரி அமைச்சிருப்பாங்க. இந்த ரெண்டு உருளைக்கும் இடையே இடைவெளியை அதிகப்படுத்தினால் அரையும் குறையுமா அறைபடும். ரொம்ப நெருக்கினால் அரிசி அதிகம் அரைக்கப்பட்டு குறுணைகளாய் நொய்யாய் ஆகி அதிகச் சேதாரம் ஆகிவிடும்.

''ஷெல்லர்'' என்பது மற்றொரு வகை. இது உமி நீக்கி; இரு சாணைத் தட்டுகளைக் கொண்டது. இதிலும் இதன் இடைவெளியைப் பொறுத்தே அரைவையின் திறமையிருக்கும்.

''ஆனால் நவீன அரிசி ஆலையில் உள்ள அரைவை இயந்திரம் மெல்லிய மிருதுத்தன்மை வாய்ந்த அமுங்கி விரியும் சுழல் ரப்பர் உருளைகளைக் கொண்டது. அதோடு சிறந்த நெல் பிரிப்பான்கள், நுண்ணிய முறையில் சத்தும் சாரமும் கெடாமல் மெருகேற்றும் இயந்திரங்கள் உள்ளன.

முதலில், நெல் குதிரிலிருந்து, சுத்தம் செய்யும் பொறிக்கு

...அனுப்பப்படுகிறது. அங்கு சுழல் சல்லடை, அதிரும் சல்லடை, தூசி உறிஞ்சி ஆகியவை உள்ளன. நெல்லில் கலந்திருக்கும் பதர், கல், மண், வைக்கோல் போன்றவைகளைத் தட்டியும் சலித்தும் புடைத்தும், தேவையற்றவைகளைக் களைந்தும் நெல்மணிகளை மட்டும் அரைவைக்கு அனுப்புகிறது.

அவை உமி நீக்கும் பொறிக்கு வருகின்றன. அது அரிசி உடையாமல் உமியை நீக்குகிறது. உமியை உறிஞ்சும் பொறி உமியை உறிஞ்சி அப்பால் உமிழ்கிறது.

அடுத்து அரிசி மாத்திரம் மெருகேற்றும் பிரிவுக்கு வருகிறது. அங்கு நமக்கு வேண்டிய அளவு தவிடு நீக்கி சுத்தமான வெண்மையான அரிசியை நாம் பெறலாம். இதில் உயிர்ச் சத்தான வைட்டமின் பி. 1 நீக்கப்படாமல் தங்குகிறது. அடுத்து இது தரம் பிரிக்கும் பகுதிக்கு வருகிறது. அங்கு குறுணைகள் பிரிக்கப்படுகின்றன . நவீன ஆலையில் குறுணைகள் 5 சதவீதத்திற்கு மேற்படுவதில்லை. அரிசி 72 சதவீதத்திற்கு மேல் தேறும்.

முழு அரிசி தரும் சக்தியை ஒப்பிட்டால், நவீன அரிசி ஆலைகள் பழைய அரிசி ஆலைகளில் 'ஹல்லர்' வகையைவிட சுமார் 6.3 சதவீதம் அதிகப் பச்சரிசியையும் 13.3 சதவீதம் அதிக புழுங்கல் அரிசியையும் கொடுக்கின்றன. 'ஷெல்லர்' வகையைவிட 1.5 சதவீதம் அதிகப் புழுங்கலையும் 4.4 சதவீதம் அதிகப் பச்சரிசியையும் கொடுக்கின்றன.'

''ஓகோ அப்படியா? இதிலே சத்தும் கெடுறதில்லே. லாபமும் அதிகம். ஆமா, சில அரிசி நாற்றமடிக்குதே அது ஏன் ?''

''அது பழைய அரிசி ஆலைகளில் அரைப்பதில் ஏற்படுவது?''

''அது தான் ஏன்னு கேட்கிறேன் ?''

''அதுவா தாத்தா ! நெல்லை இரண்டு அல்லது மூன்று நாட்கள் சிமெண்ட் தொட்டியில் ஊற வைப்பாங்க. அப்புறம் அவிக்கிறதுக்காக இரும்புத் தொட்டிகளில் கொட்டி நீராவி மூலம் வேக வைப்பாங்க! அதனால் நெல்லு அதிகமாப் புளித்து, அரைத்து வரும் அரிசியிலும் துர்நாற்றம் வீசுது''.

''ஏன் மூணு நாள் ஊற வைச்சு அவிக்கணும்?''

''ஊற வைக்கும் நேரத்தைக் குறைத்தால் நெல்லானது புழுங்காமல் பலம் குறைந்து அரைவையின்போது இடிந்து குறுணைகளாகிவிடும்.''




**ஒருவருக்கு ஒரு நாளைக்கு அரை கிலோ அரிசி தேவை எனக் கொண்டால் ஓர் ஆண்டுக்குத் தேவை 180 கிலோ அரிசியாகும்.**

**இந்தியாவில் நெல் விளையும் நிலம் 3 கோடியே 40 லட்சம் ஹெக்டர். தமிழகத்தில் நெல் விளையும் நிலம் 27.7 லட்சம் ஹெக்டர்.**

**தமிழகத்தில் ஓர் ஆண்டு உற்பத்தியாகும் அரிசி 45 லட்சம் டன்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் தற்போது 50,000 அரிசி ஆலைகள் உள்ளன. இவை தவிர நவீன அரிசி ஆலைகள் 26 உள்ளன.**

**தமிழகத்தில் 9,574 பழைய வகை அரிசி ஆலைகளும் 16 நவீன ஆலைகளும் உள்ளன.**

''ஓகோ...... உங்க புது ஆலைகளில்என்ன பண்ணுறுங்க?''

''அப்படிக் கேளுங்க சொல்றேன். இந்த ஆலைகளில் நெல்லை 70 முதல் 75 செண்டிகிரேட் வெப்பநிலையிலுள்ள நீரில் 3 அல்லது $3\frac{1}{2}$ மணி நேரம் இங்குள்ள இரும்புத் தொட்டிகளில் ஊறவைத்து வேக வைக்கிறுங்க. தண்ணீரை வடிகட்டியபின் 3 முதல் 5 நிமிட நேரத்திற்கு நீராவி செலுத்தப்படுகிறது.

''இந்த முறையில் அரிசி பலம் பெற்று, உடையாமல் முழு அரிசியாகக் கிடைக்கிறது. துர்நாற்றம் அடிப்பதில்லை. புழுங்கல் அரிசி தயாரிக்கும் நேரம் 72 மணியிலிருந்து 7 மணியாகக் குறைகிறது.''

''இந்தப் புது ஆலை உருவாக்க எவ்வளவு செலவாயிற்று தெரியுமாடா, கனகு ?''

''ஓ! தெரியுமே. பன்னிரண்டு இலட்ச ரூபாய். ஒரு மணிக்கு 2 டன் வீதம் ஒரு நாளைக்கு 40 டன் அரைக்கும் திறனுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள 16 நவீன அரிசி ஆலைகளில் 9 தஞ்சாவூர்மாவட்டத்திலுள்ளன. அவை தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவுக் கொள்முதல் விற்பனைச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ்ச் செயல்படுகின்றன. மீதி ஏழும் தமிழ்நாடு கூட்டுறவுக் கொள்முதல் விற்பனைச் சங்கத்தின் நிர்வாகத்திலுள்ளன.''

''ஆமா! இதிலே வீட்டு உபயோகத்திற்குக் கொஞ்சமா அரைக்க முடியாதே !''

''அந்த மாதிரி மிளகாய்ப் பொடி, மஞ்சள்தூள், சீயக்காய் அரைப்பதற்குப் புதுசா ஓர் ஆலையை இந்தச் சங்கம் விரைவிலே செங்கல்பட்டு மாவட்டத்திலே ஏற்படுத்தப் போகுது. ஆனு இந்த அரிசி ஆலைகளில் அரசாங்கம் கொள்முதல் செய்யும் நெல், கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கும் நெல் ஆகியவை அரைக்கப்படுகின்றன. மூன்று ''சிப்டு'' வேலை செய்கிறதுன்னு பார்த்துக்குங்களேன் !''

''அயராது உழைக்கும் உழவர் குடிப் பெருமக்களுக்கு இந்த அரிசி ஆலை அதிக அரிசியைக் கொடுக்கிறது. அரிசியை வாங்கி உண்ணுகிறவர்களுக்கும் அதிகச் சத்துள்ள அரிசியாகக் கொடுக்கிறது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் !''

''சரியாகச் சொன்னிங்க தாத்தா ! அதனுல்தான் இன்றையத் தமிழக அரசு இந்தப் பணியை மிகவும் உற்சாகப் படுத்துகின்றது. ஆகவே வாழ்க கூட்டுறவு ! வளர்க பசுமைப் புரட்சி !''

# இந்த விவசாயிகளிடையே பொதுவாகக் காண்பது என்ன?



## ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்ப் செட்டும், அதன்மூலம் கிடைத்த சுபிட்ச வாழ்வும்.

நாடெங்கும் உள்ள விவசாயிகளின் வாழ்வை வளம் கொழிக்க வகை செய்வது, பெஸ்ட் அண்ட் கம்பெனி தயாரிக்கும் நம்பகமான ஓர்த்திங்டன் - சிம்ப்ஸன் பம்பு செட்டுகள்.

ஈடு இணையற்றது என்ற புகழ் பெற்ற 'மானோபிளாக்' பம்பு செட்டுகள் உட்பட பலவகை சென்டிரிப்யூகல் பம்புகளையும் **பெஸ்ட்** அளிக்கிறது. ஓர்த்திங்டன் - சிம்ப்ஸன் பம்பு செட்டுகள் கண்டிப்பான தரக்கட்டுப் - பாட்டுடன் தயாரிக்கப்படுபவை, விற்பனைக்குப் பிறகும் சேவை செய்ய, நாடெங்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. மேலும், தக்க பம்புகளை தேர்ந்தெடுப் பதற்கு ஆலோசனைகளையும் அளிக்கிறது. **பெஸ்ட்!**




**பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிட்.**

(ஸ்தாபிதம்: 1879)
13/15, நார்த் பீச் ரோடு.
சென்னை - 1

தமிழ்நாட்டில் கிளைகள்:

6/434, திருச்சி ரோடு, கோயம்பத்தூர்
49 - D, மதுரை ரோடு, திருச்சி - 1.

FocusBC191Tam

"கத்தரிக்காய் கிலோ முப்பது பைசா.
நாட்டு வெங்காயம் நாற்பது பைசா.
உருளைக் கிழங்கு ஒரு ரூபா,
கடலை எண்ணெய் லிட்டர் நான்கு ரூபா,
நல்லெண்ணெய் லிட்டர் ஐந்து ரூபா,
தேங்காய் எண்ணெய் ஆறு ரூபா.''

"என்னப்பா இது! பாட்டைக் கேட்க ரேடியோவைத் திருப்பினால் காலை நேரத்திலே கத்தரிக்காயும் வெங்காயமும் வருகிறது?''

''ஓகோ, அதுவா ஜோதி! பொருள்களின் விலையைப் பொதுமக்கள் அறிய ஒலி பரப்புகிறார்கள். இதனால் விற்போர்க்கும் வாங்குவோர்க்கும் நன்மை.''

''ஆமாம், வானொலி நிலையத்திற்கு எப்படி அப்பா இந்த விலைகள் எல்லாம் தெரியும்?''

''புள்ளி விவரத் துறையினர் கொடுக்கிறார்கள்; அதை அவர்கள்............''

''புள்ளி விவரத் துறையா? அது என்னப்பா?''

''புள்ளி என்றாலே முக்கியமானது, சிறப்பு வாய்ந்தது என்ற பொருளில் நாம் வழங்குகிறோமல்லவா? நம்மூர்ச் சோமசுந்தரம் அவர்களைச் சாதாரணமாக, சோமுவா, அவர் இவ்வூரில் பெரிய புள்ளியாயிற்றே! என்று சொல்லுகிறோமல்லவா? அவர் விரலசைத்தால் வீடசையும், நாவசைத்தால் நாடசையும்; ஆகவே, அவர் முக்கியமானவர் என்பதைக் குறிக்க அவரை ஒரு பெரிய புள்ளி என்கிறோம். அதுபோலப் புள்ளி விவரத் துறையும் அரசாங்கத்திலே ஒரு முக்கியமான துறை. நாட்டின் செல்வம், தொழில், வளம், வாழ்வு, வாணிபம் போன்ற பலவற்றின் ஏற்ற இறக்கத்தை எடுத்துக்காட்டுவது; புல்லின் நுனியில் உள்ள சின்னஞ் சிறு பனித் துளியில் காலைக் கதிரொளியிலே நெடிய மரத்தையே காணலாம்; புள்ளி விவரத்தின் வாயிலாக ஒரு நாட்டையே காண முடியும்; அதன் ஏற்ற இறக்கம், வாழ்வு, தாழ்வு, அனைத்தையும் காட்டும் கண்ணாடி அது. ''ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு'' என்பார்கள்; குதிரைக்குக் கடிவாளம் போலக் கணக்கு, வாழ்வுக்குக் கடிவாளம்; அளவறியா வாழ்வு அழியும்; எனவே புள்ளி விவரத் துறை அன்றாட, மாதாந்தர, அண்டைய நாட்டின் நிலையை நன்கு காட்டும் கருவி.''

''சரி அப்பா; இது எப்படி மக்களுக்கும் அரசுக்கும் பயன்படுகிறது?''

''ஜோதி, இதோ பார்; வேளாண்மைத் துறையிலே புள்ளி விவரம் மிகவும் உதவுகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் எவ்வளவு நிலப் பரப்பில் என்னென்ன பயிரிடப்படுகின்றன; அப்பயிர்களில் விளைச்சலின் உயர்வு—தாழ்வு, விலை ஏற்றம்—இறக்கம் முதலியன விஞ்ஞான முறையில் கணிக்கப்படுகின்றன. உதாரணமாகக் கடந்த ஐந்தாண்டுகளில் நெல், கரும்பு, பருத்தி இவற்றைப் பற்றிச் சொல்லட்டுமா?

*1962-63-ல்* ஹெக்டர் ஒன்றுக்கு 1,510 கிலோ நெல் விளைந்தது; மொத்தம் 40,24,170 மெட்ரிக் டன் நெல் கிடைத்தது.

*1963-64-ல்* ஹெக்டர் ஒன்றுக்கு 1,480 கிலோ நெல் விளைந்தது; மொத்தம் 38,76,340 மெட்ரிக் டன் விளைந்தது.

*1964-65-ல் 1,537* கிலோ; 40,36,150 மெட்ரிக் டன்.

*1965-66-ல் 1,409* கிலோ; 35,24,220 மெட்ரிக் டன்.






Shilpi BOB 21/70 Tam

1966-67-ல் 1,410 கிலோ; 37,90,950 மெட்ரிக் டன்.

நெல்லைப் பற்றிச் சொல்லிவிட்டேன்; கரும்பைப் பற்றிச் சொல்லுகிறேன்.

1962-63—ஹெக்டர் ஒன்றுக்கு 8,404 கிலோ. மொத்தம் 4,04,530 மெட்ரிக் டன்.

1963-64—ஹெக்டர் ஒன்றுக்கு 8,543 கிலோ. மொத்தம் 6,26,300 மெட்ரிக் டன்.

1964-65—ஹெக்டர் ஒன்றுக்கு 8,464 கிலோ. மொத்தம் 8,29,110 மெட்ரிக் டன்.

1965-66—ஹெக்டர் ஒன்றுக்கு 9,456 கிலோ. மொத்தம் 9,54,960 மெட்ரிக் டன்.

1966-67—ஹெக்டர் ஒன்றுக்கு 9,755 கிலோ. மொத்தம் 8,31,490 மெட்ரிக் டன்.

இனி பருத்தியைப் பற்றிச் சொல்லுகிறேன்.

1962-63—ஹெக்டர் ஒன்றுக்கு 167 கிலோ. மொத்தம் 3,53,180 மெட்ரிக் டன்.

1963-64—ஹெக்டர் ஒன்றுக்கு 160 கிலோ. மொத்தம் 3,59,860 மெட்ரிக் டன்.

1964-65—ஹெக்டர் ஒன்றுக்கு 171 கிலோ. மொத்தம் 3,57,440 மெட்ரிக் டன்.

1965-66—ஹெக்டர் ஒன்றுக்கு 169 கிலோ. மொத்தம் 3,00,930 மெட்ரிக் டன்.

1966-67—ஹெக்டர் ஒன்றுக்கு 192 கிலோ. மொத்தம் 3,34,810 மெட்ரிக் டன்.

''ஆமாம் அப்பா, இது தெரிந்தால் என்ன பயன்?''

''என்ன ஜோதி! கல்லூரிக்குப் போகும் நீ சின்னப்பிள்ளை போல் கேட்கிறாயே? நம் நாட்டுக்கு எந்தெந்தப் பொருள் எவ்வளவு எவ்வளவு தேவை? அவற்றில் எவ்வளவு கிடைக்கிறது? குறைவா? கூடுதலா? தேவையானால், அவற்றை உற்பத்தி செய்ய வேண்டுமா? அல்லது இறக்குமதி செய்ய வேண்டுமா? என்றெல்லாம் அரசும் மக்களும் அறிய இப் புள்ளி விவரங்கள் உதவுமல்லவா!

''வியாபாரிகள் திடீரெனச் சாமான்கள் விலைகளை ஏற்றி விடுகின்றனர். மக்கள் கூக்குரலிடுகின்றனர். இவ்வாறு அங்காடிகளிலே விலை ஏற்றப்பட்டது முறையா என்பதை ஆய்ந்து அரசுக்குத் தெரிவிப்பது இப் புள்ளி விவரத் துறையின் பணிகளில் ஒன்று. இதற்காக அங்காடிப் புலனாய்வுத் திட்டம் என ஒன்று இருக்கிறது; ஆய்வாளர் அங்காடிகட்குச் சென்று விலைகளை ஆய்ந்தறிந்து அரசுக்கு அறிவிக்கின்றனர். பொருள்களின் விலை அன்றாடம் வானொலியிலும் ஒலி பரப்பப்படுகிறது; இன்று நீ கேட்ட கத்தரிக்காய் விலை அறிவிப்பு, அதுதான்!

''தானிய உற்பத்திச் செலவு என்னாகிறது என்பதை இத் துறையினர் ஆய்கின்றனர்; இதனால் நெல் முதலியவற்றின் கொள்முதல் விலையை அரசு நிர்ணயிக்க முடிகிறது.

''இன்னும் ஒரு விஷயம். தொழில் துறையிலும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. 50-க்கு மேற்பட்டவர்களைக் கொண்ட தொழில் நிறுவனங்களைப்பற்றிய புள்ளி விவரங்கள் ஆண்டுதோறும் திரட்டப்படுகின்றன. இதன் வாயிலாகத் தமிழகத்தில் ஏறக்குறைய 65 சத வீதத்திற்கும் மேற்பட்ட தொழிலாளிகளின் விவரங்கள் கிடைக்கின்றன. அன்றியும் தமிழகத்திலே ஆண்டுதோறும் தொழில்களில் ஈடுபட்டிருப்போர் எண்ணிக்கை, உற்பத்திக்கான மூலதனம், மொத்த உற்பத்தியின் மதிப்பு, அதன் மூலம் கிடைத்த லாபம் முதலியன கணிக்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக ஆலைத் தொழிலில் 1967-ம் ஆண்டில் 7,484 லட்ச ரூபாய் உற்பத்திக்கென முதலீடு செய்யப்பட்டது. அதன் விளைவாக ஏற்பட்ட உற்பத்தியின் மதிப்புமொத்தம் 17,296 லட்சம் ரூபாய். எனவே, 3,207 லட்ச ரூபாய் லாபமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு தொழிலுக்கும் புள்ளி விவரங்கள் எடுக்கப்படுகின்றன.

''நம் அன்றாட வாழ்க்கைத் தரத்தில், அதாவது விலைவாசிகளினால் நமது வாழ்க்கைச் செலவின் ஏற்ற இறக்கங்களை 'வாழ்க்கைத் தரக் குறியீட்டெண்' என்று கூறுகிறோம். இக் குறியீட்டெண்கள் தொழிற்சாலைத் தொழிலாளிகளின் ஊதிய நிர்ணயத்திற்குப் பெரிதும் உதவுகிறது.

''மேலும் அரசாங்கத்தின் பொருட்டுப் பல்வேறு திட்டங்களின் பலாபலன்களை ஆராய்ந்து நிர்ணயிக்கும் பணியையும் இத்துறை மேற்கொள்கிறது.

''இது தவிர, மக்கட் தொகை ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.''

''அப்படியென்றால் என்ன அப்பா?''

''மக்கள் எங்கெங்கே எவ்வளவு இருக்கிறார்கள்? அவ்வாறு ஓரிடத்தில் கூடுதலாகவும், மற்றோரிடத்தில் குறைவாகவும் இருக்கக் காரணம் என்ன? இவை அவ்வப்போது மாறக் காரணங்கள் என்ன? என்பவற்றை ஆராய்வது தா[illegible] தவிர 'மனித சக்தி' ஆய்வும் செய்யப்படுகிறது. இதனால் பிற்காலத்தே நமக்கு ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு மக்கள் ஈடுபடுவார்கள் என்பதை அறிய முடிகிறது. அவ்வாறு முன்னரே அறிந்துகொள்வதன் வாயிலாக இம்மக்கட்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் வகையில் திட்டங்கள் வகுக்க இவ்வாராய்ச்சி பெரிதும் உதவுமல்லவா?

1969-ஆம் ஆண்டு தமிழக அரசு வரவு-செலவுத் திட்ட அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட சிறந்த புள்ளி விவரத் தொகுப்பொன்றை இத்துறையினர் வெளியிட்டனர். இது புள்ளிகள், வரைபடங்கள் வாயிலாகத் தமிழகத்தின் பல்வேறு துறைகளின் முன்னேற்றத்தை எடுத்து விளக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

தமிழக வருமானம், வேளாண்மை, போக்குவரத்து, வாணிபம், முதலிய துறைகளில் சீரிய முன்னேற்றம் இவ் வெளியீட்டில் விளக்கப்பட்டிருக்கிறது.

இவையன்றியும், நாட்டின் பல்வேறு துறைகளிலுள்ள புள்ளி விவரங்கள் அனைத்தையும் இவ்விலாகாவிலிருந்து பெறலாம்! இப் புள்ளி விவரங்கள், வணிகப் பெருமக்கள், பொதுமக்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், தொழிலாளர் சங்கங்கள், உழவர் பெருமக்கள், ஆகியோருக்குப் பயன்படுவதற்கு மேலாக மாநில அரசு செம்மையாய் நடைபெறச் சிறந்த தோர் கலங்கரை விளக்கம் போல இப் புள்ளி விவரத் துறை பொலிகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் காட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் ~ வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப்
பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

## கதர் கிராமத் தொழில் துறை

உ, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

# கருணையின் கதை

‘காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையிலே, பிற நாடுகளுக்கு மரக்கலங்களின் மூலம் அனுப்புவதற்காகச் செந்நெல் மணிகள் மலை மலையாகக் குவித்துவைக்கப் பட்டிருந்தனவாம்! தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று புகழப்படும் தஞ்சை மாவட்டத்தில் கரிகால் சோழன் காலத்திலே வேலி ஆயிரம் கலம் நெல் விளைந்ததாம்!!

அன்று தமிழகம் பல நாட்டினரின் பசிப் பிணியைத் தீர்த்து வைத்து, உலகெங்கும் ஒளி பரப்பிக் கொண்டிருந்தது! தமிழகத்தின் உழவர் பெரு மக்கள் பசிப் பிணி மருத்துவர்களாக விளங்கி வந்தனர். அன்று உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்கள் இல்லை; இரசாயன உரங்கள் இல்லை; பூச்சிகளையும், நோய்களையும் தடுத்திடும் மருந்துகள் இல்லை. ஆயினும் இயற்கை எருவையும், காவிரி ஆற்றின் நீரையும் கொண்டே அன்று தஞ்சை மாவட்ட உழவர் பெரு மக்கள் ஒரு வேலி நிலத்தில் 1000 கலம் நெல் விளைவித்துள்ளார்கள்!

ஆனால் காலப் போக்கினிலே, இயற்கையின் மாறுபாடுகளினாலே ‘வான் பொய்ப்பினும் தான் பொய்யாக்’ காவிரியும் பொய்த்து விட்டது! தஞ்சை மாவட்டத்தின் மண்வளமும் குன்றிவிட்டது! இதன் காரணமாகத் தஞ்சை மாவட்டத்தின் நெல் உற்பத்தி மிகவும் குறைந்து விட்டது; களஞ்சியங்கள் நிரம்பவில்லை; பிற நாட்டினரின் பசிப் பிணியைப் போக்கியவர்கள், பிற நாட்டு அரிசியை எதிர்பார்க்கும் நிலை ஏற்பட்டு விட்டது. சுருக்கமாகச் சொல்லப் போனால் தஞ்சை மாவட்ட உழவர் பெரு மக்களைப் பற்றுக்குறை என்னும் இருள் கவ்விக்கொண்டது என்றே சொல்லலாம்.

அந்த இருளிலும் உணவு உற்பத்திப் பெருக்கம் என்ற பெரும் பயணத்தை, நெடுநாட்களாகவே தளரா முயற்சியுடன் தொடர்ந்து வருகின்றனர் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள். இருட்டிலே பெரும் பயணம் செய்து கொண்டிருந்தவர்களுக்கு ஆடுதுறை-27 என்ற விண்மீன் வழிகாட்டியது! ஆனால் பயணம் தொடரத் தொடர ஆடுதுறை-27 என்ற விண்மீனின் ஒளியும், சரிவரத் தெரியவில்லை. ஆனாலும் பயணத்தைத் தொடர்ந்து கொண்டே இருந்தனர். அந்நிலையிலே ஐ. ஆர். 8 என்னும் நிலவு தோன்றியது! அதுகண்ட பயணிகள் (உழவர் பெரு மக்கள்) பெரு மகிழ்ச்சி அடைந்தனர்.

உணவு உற்பத்திப் பெருக்கம் என்ற பயணத்தை ஐ.ஆர்.8 என்னும் நிலவின் ஒளியிலே சற்றுச் சுறுசுறுப்பாக மேற்கொண்டனர். ஆனால் நிலவு ஒளியிலே நீண்ட நேரம் நடந்து செல்வது சலிப்பை ஏற்படுத்தியது: சீக்கிரம் பகலவன் தோன்ற மாட்டானா? ஒளி கிடைக்காதா? நம் பயணம் வெற்றி பெறாதா? இத்தகைய எண்ணங்களுடனும், ஏக்கத்துடனும் அவர்கள் பயணம் செய்து கொண்டே இருந்தனர்.

அவர்களின் ஏக்கத்தைப் போக்கிட ‘விடிவெள்ளி’ தோன்றிவிட்டது! விடி வெள்ளி தோன்றி விட்டாலே விடியப் போகிறது என்பது உறுதியே! விரைவில் உதய சூரியன் தோன்றுவான்! ஒளி கிடைத்துவிடும்; அதன்பின் தஞ்சை மாவட்ட உழவர் பெரு மக்கள் ‘உணவு உற்பத்திப் பெருக்கம்’ என்ற பயணத்தில் வெற்றி பெற்று விடுவார்கள். அந்த விடி வெள்ளியாக நான் தோன்றியுள்ளேன்!’’

இந்தப் பேச்சைக் கேட்டு, அனைத்து நாட்டு நெல் ரகங்களின் கருத்தரங்கிற்கு வருகை தந்திருந்த எல்லா நெல் ரகங்களும் தங்கள் இருக்கையில்



நிமிர்ந்து உட்கார்ந்தனர். ஆளைப் பார்த்தால் மிகவும் குள்ளமாய் இருக்கிறான்; ஆனால் அவன் பேச்சைப் பார்த்தால் பெரும் செயல் வீரன் போலிருக்கிறதே! இவன் யாராயிருக்கும் என்று ஒவ்வொரு ரகமும் பக்கத்தில் இருந்த ரகங்களிடம் கேட்க ஆரம்பித்தன. இதனால் கருத்தரங்குக் கூடத்திலே சிறிது சத்தம் ஏற்பட்டது. சத்தம் எழுந்ததால் பேச்சாளரின் பேச்சிலே தடை ஏற்பட்டது. பேச்சாளர் சத்தம் ஏற்பட்ட காரணத்தை அறியக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கியவரை நோக்கினார். அதைப் புரிந்து கொண்ட தலைவர் ''தயவுசெய்து அனைவரும் சத்தம் போடாமல் இருக்கும்படிக் கேட்டுக் கொள்கின்றேன். அப்பொழுது தான் பேச்சாளரின் கருத்துக்களை நாம் அறிய இயலும்'' என்றார்.

அப்பொழுது ஜப்பான் நாட்டிலிருந்து வந்திருந்த ஒரு நெல் எழுந்து, ''தலைவர் அவர்களே, பேச்சாளர் யார் என்ற விவரம் அறியவே தற்பொழுது சற்றுக் கூச்சல் ஏற்பட்டுவிட்டது. அதற்காக வருந்துகின்றேன். பேச்சாளர் யார் என்ற விவரங்களைக் கூறி விட்டு மேலே தொடர்ந்து பேசும்படிக் கேட்டுக் கொள்கின்றேன்'' என்றார்.

உடனே தலைவர் எழுந்து, ''பிரதிநிதிகளே பேச்சாளரைப் பற்றி அறிமுகம் செய்து வைக்காமைக்கு வருந்துகின்றேன். பேச்சாளர் இது போன்ற கருத்தரங்கிற்குப் புதியவராதலின், அவருக்குத் தன்னைத் தானே அறிமுகப் படுத்திக் கொள்ளும் பழக்கம் தெரிந்திருக்க நியாயமில்லை. எனவே பேச்சாளரை, முதலில் அவரைப் பற்றிக் கூறுமாறு கேட்டுக் கொண்டு, பின் பேச்சைத் தொடருமாறு கேட்டுக் கொள்கின்றேன் '' என்றார்.

பேச்சாளர் பேச்சைத் தொடங்கத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு 'மைக்' கின் அருகில் நெருங்கி நின்று, ஒரு கையால் ' மைக் 'கைப் பிடித்துக்கொண்டு கம்பீரமாகப் பிரதிநிதிகளைப் பார்த்துவிட்டுப் பேச ஆரம்பித்தார்.

'' நண்பர்களே! என் பெயரை அறிய அனைவரும் ஆவலுடன் உள்ளீர்கள் என்பது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால் நான் இப்பொழுது என் பெயரைச் சொல்ல மாட்டேன். என் பெயரைக் கடைசியில் தான் வெளியிட விரும்புகின்றேன். அது வரை என் பெயர் 'சஸ்பென்ஸ்' ஆக இருக்கும். அன்புள்ளவர்களே ! நான் யார் என்று அறிய ஆர்வம் காட்டாதீர்கள் ! நான் என்ன சொல்கிறேன் என்பதைச் சிந்தியுங்கள் ! பேரறிஞர் சாக்ரட்டீஸ் சொன்னது போல் யார் சொன்னார், எவர் சொன்னார், என்று பார்க்காமல், என்ன சொன்னார் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதைத்தான் என் நாட்டின் பேரறிஞர் அண்ணாவும் வலியுறுத்தி வந்தார். எனவே என் கதையைக் கேளுங்கள். என்னைப் பற்றி அறிந்து கொண்டால், அது உங்களுக்கும், ஏன் நானிலத்திற்குமே நன்மை பயக்கும். நான் கூறுவது தற்புகழ்ச்சி போல் தோன்றலாம். ஆனால் உண்மையைக் கூறுவது தவறாகாது. எனவே, என் பெயரைக் கூறாமல், பேச்சைத் தொடர அனுமதி அளியுங்கள் என்று உங்களை அன்புடன் வேண்டுகின்றேன்'' என்றார் பேச்சாளர்.

''சரி! சரி! உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்'' என்றனர் தலைவர் உட்பட அனைவரும்.



நீதிபதி : நீ திருட்டுக் குற்றத்திற்காக வருவது இது 200-வது தடவை. உனக்கே கேவலமாக இல்லை ?

திருடன் : கேவலமாகத்தான் இருக்கு ! இந்தத் தடவை எப்படியாவது மாட்டிக்கக் கூடாதுன்னு ரொம்பத் தந்திரமாத் திருடுனேனுங்க எசமான். ஆனா இந்தப் போலீசுங்க எப்படியோ மடக்கிட்டாங்க.

'' என் கதையைக் கூறுவதற்கு முன்பு பீடிகையாகத் தஞ்சை மாவட்டத்தைப்பற்றியும், அதன் சாகுபடி பற்றியும் சற்று விளக்கமாகக் கூற வேண்டியுள்ளது. தயவுசெய்து கவனமாகக் கேளுங்கள்.

தஞ்சை மாவட்டத்தில் சாகுபடியாகும் நிலத்தின் மொத்தப் பரப்பு 19.15லட்சம் ஏக்கராகும். இதில் பெரும் பகுதி நெல் சாகுபடிக்கே பயன்படுத்தப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் பரம்பரை பரம்பரையாக 3 இலட்சம் ஏக்கரில் குறுவையும், 9 இலட்சம் ஏக்கரில் சம்பாவும், 2.70 இலட்சம் ஏக்கரில் தாளடியும் ஆக மொத்தம் 14.70 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. நான் முன்பே கூறிய படி நாளுக்கு நாள் தஞ்சை மாவட்டத்தின் நெல் உற்பத்தி குறைந்து வந்துள்ளது. சராசரியாக ஏக்கருக்கு ஒரு டன் கூட விளையவில்லை. அந்த நிலையிலே தான் தஞ்சை மாவட்டத்தின் நெல் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆடுதுறையிலே ஓர் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தைத் துவக்கினர். அதிக உற்பத்திக்கு விதையே மூலகாரணமாக உள்ளதால், ஆராய்ச்சியாளர்கள் ஆடுதுறை-3, ஆடுதுறை-20, ஆகிய குறுவை ரகங்களை வெளியிட்டனர். உழவர் பெருமக்களும் அவைகளின் மகசூல் திறன் கண்டு உளமுவந்து ஏற்றனர்.

அடுத்து, அறிவியல் வளர்ச்சியின் காரணமாகத் தோன்றிய இரசாயன உரங்கள் தஞ்சை மாவட்டத்தில் சிறுகச் சிறுகப் பரவின. அதன் காரணமாகத் தஞ்சை மாவட்ட நெல் உற்பத்தியும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்தது.

இந்நிலையிலே 1960-ஆம் ஆண்டில் 'போர்டு' நிறுவன உதவியுடன் தஞ்சை மாவட்டத்தில் '' தீவிர சாகுபடி மாவட்டத் திட்டம்'' (Intensive Agricultural District Programme) துவக்கப் பட்டது. இத் திட்டத்தின் கீழ் உழவர் பெருமக்களுக்கெல்லாம் சாகுபடிப் பருவத்திற்கு முன்பே எந்தெந்தப் பருவத்தில் என்னென்ன ரகங்களைப் பயிரிட வேண்டும், அந்த ரகங்களின் மகசூலைப் பெருக்க எப்படி எப்படி உரமிட்டு மருந்து தெளிக்கவேண்டும், சாகுபடிச் செலவுகளுக்குத்

தேவையான கடன் உதவியை எங்கு எப்படிப் பெற வேண்டும் என்றெல்லாம் தீர்மானித்துப் பண்ணைத் திட்டங்கள் (Farm Plan) தயாரிக்கப்பட்டன. இத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேளாண்மை, கூட்டுறவு, நீர்ப்பாசனம், நிலவருவாய், மின்சாரம் ஆகிய பல்வேறு துறையினரும் ஒன்றுபட்டு உழைத்தனர். இந்த ஒருங்கிணைந்த முயற்சிகளின் காரணமாகத் தஞ்சை மாவட்டத்தில் 1960-61-ம் ஆண்டு முதலே ஆண்டுதோறும் பொறுக்கு விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி பூஞ்சாள மருந்துகள் ஆகியவைகளின் உபயோகம் பெருகி, மகசூலும் பெருக ஆரம்பித்தது.

ஆயினும் ஆராய்ச்சியாளர்களும், உழவர் பெருமக்களும் இரசாயன உரங்களின் முழுப் பயனையும் பெற உரமேற்கும் திறனுடைய சிறந்த ரகம் தேவை என்று உணர்ந்தனர். ஆராய்ச்சியாளர்கள் 'நோரின்-8' என்ற ஜப்பானிய ரகத்தையும், தமிழ் நாட்டின் புகழ் பெற்ற ரகமான ஜி.இ.பி. 24-ஐம் கரு ஒட்டுச் சேர்த்தனர். அதன் பயனாகத் தஞ்சை மாவட்டத்தின் குறுவைக்கு ஏற்ற ஆடுதுறை-27 என்ற விண்மீன் தோன்றியது.

தஞ்சை மாவட்டத்தில் 1964-ம் ஆண்டில் 200 ஏக்கரில் முன்னோடித் திட்டமாக ஆடுதுறை-27 நெல் பயிரிடப்பட்டது ; அதில் கிடைத்த மகசூல் நம்பிக்கையூட்டியதன் காரணமாக 1965-66-ம் ஆண்டில் 5,000 ஏக்கரில் பயிரிடப்பட்டது ; அடுத்த ஆண்டில் (1966-67) இரண்டு இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டது ; ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டு வந்த நிலத்தை இரு போகமாக்கி முதற் போகத்தில் ஆடுதுறை-27 நெல்லைப் பயிரிட்டதால், நான்காவது ஆண்டிலேயே (1967-68) ஆடுதுறை-27 நெல் 4.25 இலட்சம் ஏக்கரில் பரவியது. ஆடுதுறை-27 நெல் உழவர் பெருமக்களின் வருமானத்தைப் பெருக்கி, வாழ்வை உயர்த்தியது.

இருட்டிலே நடப்பவர்களுக்கு விண்மீனின் ஒளிகூட வழி காட்டும் என்பது போல, ஆடுதுறை-27 என்னும் விண்மீனின் ஒளியில் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள் உணவு உற்பத்திப்பெருக்கம் என்ற பயணத்தைத்தொடர்ந்தனர். காலப் போக்கிலே விண்மீனின் ஒளி முழுவதும் பயணம் செய்பவர்களுக்குக் கிட்டவில்லை. அவ்வப்போது மேகக் கூட்டங்கள் திரண்டு, விண்மீனின் ஒளியை மறைத்து விடுகின்றன. ஆமாம். ஆடுதுறை-27 என்ற விண்மீனின் முழு ஒளியையும் (மகசூலையும்) பெற முடியாமல், மேகம் (மழை) தடுத்து விடுகிறது.



அது பெரிய குடும்பம். ஆண்டு தவறாமல் அம்மா ஆஸ்பத்திரிக்குப் போய் குழந்தை பெற்றுத் திரும்புவது வழக்கம்.

இந்தத் தடவை குளிர்சுரத்திற்காக அப்பா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

அவர்களது ஐந்து வயதுப் பையன் அம்மாவிடம் கேட்டான், "அப்பா எப்போம்மா பாப்பாவுடன் திரும்புவார் ?"

ஆடுதுறை-27 ரகம் வாளிப்பான கதிர்களைக் கொண்டு மகசூல் அதிகம் கொடுத்தாலும், தண்டு வலுவின்றி அறுவடைச் சமயத்திலே சாய்ந்து விடுகிறது. அறுவடை நேரத்திலே பெய்யும் ஐப்பசி மாதப் பெரு மழையினால் கதிர்கள் நீரிலே மூழ்கி மணிகள் முளைத்துச் சேதம் ஏற்படுகின்றன. எனவே அதிக உரமிட்டுப் பயனடைய இயலாத நிலை ஏற்பட்டது. இது தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களுக்கு ஒரு பெரும் கவலையைத் தோற்றுவித்தது. அதிக உரமிட்டாலும் பயிர் சாயாத ஒரு ரகம் கிடைக்காதா என்று ஏங்கினர். ஆனால் பயணத்தை நிறுத்தாமல் துணிவுடன் தொடர்ந்தனர்.

திடீரென ஒளி அதிகமாகத் தெரியவே, பயணம் செய்பவர்கள் ஆர்வமுடன் ஒளிவந்த திக்கினை நோக்கினர். அந்த ஒளி பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து தோன்றியது. அந்த ஒளிக்கு உரியவர் இக்கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கும் ஐ.ஆர்.8 என்னும் நிலவேயாகும்! இது வரை வேறெந்த ரகமும் அளிக்காத அளவுக்கு அதிக மகசூல் அளித்து 'அதிசய நெல்' என்று பெயர் பெற்ற நம் தலைவர் (ஐ.ஆர். 8) அதிகமாகச் சாப்பிட்டாலும் களைத்துப் படுத்துவிட மாட்டார்! அதாவது அதிக உரமிட்டாலும் சாய்ந்துவிடமாட்டார்! நீரிலே மூழ்க மாட்டார்! அப்படி மூழ்கினாலும் நம் தலைவர் அளிக்கும் மணிகள் முளைத்து விடாது! நம் தலைவர் தஞ்சையின் குறுவைக்கும் சம்பாவுக்கும் ஏற்றவராக இருந்தார்!'' என்று கூறிவிட்டுத் தலைவரைப் பேச்சாளர் நோக்கினர்.

பேச்சாளரின் பாராட்டுதலைக் கேட்டவுடன் தலைமை தாங்கிய ஐ.ஆர். 8 ரகம் சற்று கம்பீரமாக ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்தது; பேச்சாளர் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார்.

''ஐ.ஆர் 8 ரகம் பயிரிட்டு உணவு உற்பத்தியைப் பெருக்கலாம் என்று எண்ணினர் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள். பலர் ஐ.ஆர். 8 ரகம் பயிரிட்டுப் பெரும் பயனும் அடைந்தனர். ஆனால் எல்லோருக்கும் ஐ.ஆர். 8 நெல் பயனளிக்கவில்லை. அதற்குக் காரணம் பல உள. அவற்றில் முதன்மையானது ஐ.ஆர். 8 ரகத்தின் வயதேயாகும்'' என்றுகூறி விட்டுத்தலைமை தாங்கிய ஐ.ஆர். 8 ரகத்தைச்சற்று ஏளனமாகப் பார்த்தார் பேச்சாளர்.

தலைவரின் முகம் வாடியது! பேச்சாளர் தலைவரின் காலை வாருவதாகக் கருதிப் பிரதிநிதிகளின் முகத்திலே மகிழ்ச்சிதோன்றியது. மீண்டும் பேச்சாளர் தொடர்ந்தார்.

''ஐ.ஆர் 8 நெல்லின் வயது 135 நாட்களாகும். குறுவையிலே ஐ.ஆர். 8 நெல் பயிரிட்டால் தாளடி நடவு பின்னால் தள்ளிப் போகும். இதன் காரணமாகத் தாளடிக்குக் கடைசி காலத்தில் போதிய தண்ணீர் கிடைக்காது. ஜனவரி இறுதியில் மேட்டூர் அணையில் தண்ணீர் நிறுத்தப்பட்டு விடுவதே இதற்குக் காரணமாகும். எனவே தாளடியைக் காலத்தில் நடவேண்டியுள்ளது. தாளடியைக் காலத்தில் நட வேண்டுமானால், ஐ.ஆர். 8 நெல்லை வடி



முனைக் குழாய்க்கிணறு, கிணறு, குழாய்க் கிணறு ஆகிய பாசன வசதிகளைக் கொண்டு மேட்டூர் அணை திறப்பதற்கு முன்பே நாற்றுவிட்டு நடவு செய்து விட வேண்டும். இது எல்லா உழவர் பெரு மக்களுக்கும் சாத்தியமா? பிரதிநிதிகளே நீங்களே சிந்தித்துப் பார்த்து முடிவு செய்யுங்கள்!

பல்லாயிரக் கணக்கான உழவர் பெரு மக்கள் 100 முதல் 110 நாட்கள் வயதுடைய ரகங்களைக் குறுவைப் பட்டத்தில் பயிரிட்டால் தான், இரண்டாம் போக மான தாளடியைத் தண்ணீர் தட்டுப்பாடின்றிச் சாகுபடி செய்ய முடியும். எனவே ஐ.ஆர். 8 நெல் தஞ்சை மாவட்டத்தின் பெரும்பாலான உழவர் பெரு மக்களுக்கு ஏற்றதாக இல்லை.''

பிரதிநிதிகள் பலத்த குரலில் சிரித்தனர். தலைவர் முகம் மிகவும் வாடிவிட்டது. மீண்டும் பேச்சாளர் தொடர்ந்தார்.

'' அடுத்து நீர் தேங்கும் நிலங்களில் (வடிகால் வசதியற்ற), ஐ. ஆர். 8 நன்கு மகசூல் கொடுப்பதில்லை. தஞ்சை மாவட்டத்தின் பெரும்பாலான நிலங்களில், அதுவும் குறிப்பாகப் பழைய டெல்டாப் பகுதியில் நீர் தேங்கிநின்று விடுகிறது. இதனாலும் ஐ.ஆர். 8 ஏற்றதாக இல்லை. இது மட்டுமா? இன்னும் ஒரு குறையும் ஐ.ஆர். 8 ரகத்திற்கு உள்ளது. ஐ.ஆர். 8 ரகத்தைப் பயிரிட அதிக உரமும், அதிக மருந்தும் தேவைப்படுவதால் சாகுபடிச் செலவும் அதிகமாகிறது. அதிகம் செலவுசெய்ய இயலாத ஏழை உழவர்களும் ஐ. ஆர். 8 ரகத்தை விரும்பவில்லை.

அதிகம் செலவு செய்து ஐ.ஆர் 8 ரகம் பயிரிட இயலாத ஏழை உழவர்கள், ஆடுதுறை-27 போன்ற ஒரு நெல் கிடைக்காதா என்று ஏங்கினர்.

ஐ. ஆர். 8 என்னும் நிலவின் ஒளியிலே பயணத்தைத்தொடர்ந்தாலும், நீண்ட நேரத்திற்கு நிலவு ஒளியிலே நடக்க விரும்பவில்லை தஞ்சைமாவட்ட உழவர் பெருமக்கள். அதாவது நீண்ட நாள் வயதுடைய நம் தலைவரை (ஐ. ஆர். 8) அவர்கள் சாகுபடி செய்ய விரும்பவில்லை! வேண்டா வெறுப்புடன் பயணத்தைத் தொடர்ந்தனர்.

ஆனால் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களின் பயணத்திற்கு வழிகாட்டும் தீவிர சாகுபடி மாவட்ட திட்ட அலுவலர்களிடம் ஐ. ஆர். 8 நெல்லைப் போன்று குட்டையான, வலுவுள்ள தண்டுடன் கூடிய, அதிக உரமேற்று அதிகமகசூல்அளிக்கும் தன்மையுடைய, 110 நாட்களுக்குள் விளையக்கூடிய ஒருரகம் கிடைத்தால் தஞ்சையின் மகசூல் திறனைப் பெருக்கலாமே என்ற சிந்தனை தோன்றியது! இனிமேல் தான் என்கதை ஆரம்பமாகிறது கவனமாகக் கேளுங்கள்!

சிந்தனையைச் செயலாக்கினர் தஞ்சை தீவிர சாகுபடித் திட்டத்தைச் சார்ந்த வேளாண் மைத்துறை அலுவலர்கள்! 1969-ம் ஆண்டின் துவக்கத்தில் பல்வேறுவேளாண்மை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், அனைத்து இந்திய நெல் அபிவிருத்தித்திட்டத்திற்கும், ஆடுதுறை—27-ன் வயதுடைய ஆனால் ஐ. ஆர் 8-ன்



உருவம் உடைய புதிய நெல் ரகம் கிடைக்குமா என்று வினவப்பட்டது. பல இடங்களிலிருந்து பல்வேறு பரிந்துரைகள் வந்தன. கட்டாக்கிலுள்ள மத்திய நெல் ஆராய்ச்சி நிறுவனம் (C.R.R.I.), டி. 141 என்ற ரகத்தையும், குட்டையான 'தைச்சுங் நேடிவ்-1' என்ற ரகத்தையும் இணைத்து உருவாக்கிய 'பத்மா' என்ற ரகத்தை அனுப்பியது. அனைத்து இந்திய நெல் அபிவிருத்தி திட்டத்தினர் ஆடுதுறை—27 ரகத்தையும், 'தைச்சுங் நேடிவ்-1' என்ற ரகத்தையும், இணைத்து உருவாக்கிய சி. ஆர். 84—309 என்ற ரகத்தையும், திருர்குப்பம் 6 (TKM-6) என்ற ரகத்தையும் 'தைச்சுங்நேடிவ்-1' என்ற ரகத்தையும் இணைத்து உருவாக்கிய ஐ. இ. டி-355 என்ற ரகத்தையும் அனுப்பினர். கோவை நெல் ஆராய்ச்சி நிபுணர் ஆடுதுறை-27 ரகத்தையும் ஐ.ஆர். 8 ரகத்தையும் இணைத்து உருவாக்கிய கல்ச்சர் 11321 என்ற ரகத்தை அனுப்பினார்.

மேற்படி 4 ரகங்களில் எது சிறந்தது என்பது மட்டுமல்லாமல், தஞ்சையின் பல்வேறு மண்வாகுகளிலும், பல்வேறு பயிரிடும் பருவங்களிலும் எது சிறந்தது என்றும் தெரியவேண்டியிருந்தது. கோவையிலோ, கட்டாக்கிலோ, ஹைதராபாத்திலே சிறந்தது என்றால், தஞ்சையிலும் அப்படித்தான் இருக்கும் என்று கண்ணை மூடிப் பின்பற்றாமல், தஞ்சையின் பல்வேறு இடங்களிலும் மேற்படி 4 ரகங்களையும் பயிரிட்டுப் பார்க்க நினைத்தனர்.

தஞ்சை மாவட்டத்திற்கான ஆராய்ச்சியை ஆடுதுறையில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் தான் சாதாரணமாக நடத்துவார்கள். நிறுவன ஆராய்ச்சியையும் கவனித்துக்கொண்டு, தஞ்சையின்பல் வேறு இடங்களிலும் ஆராய்ச்சி செய்ய ஆடுதுறையில் வசதி போதவில்லை.




எனவே மேற்படி ரகங்களைப் பரிசோதிக்கத் தீவிர சாகுபடித் திட்டத்தின்வேளாண்மைத்துறை அலுவலர்களே முன்வந்தனர். முன்னோடி உழவர்களின் வயலில் 4 ரகங்களையும் பயிரிட்டுப்பார்க்க வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தனர். 1969-ம் ஆண்டு குறுவைப் பட்டத்தில் தஞ்சையின் எல்லா வட்டாரங்களிலுமாகச் சேர்த்து 120 இடங்களில் ஆடுதுறை-27 நெல்லுடன் ஒப்பிட்டு மேற்படி 4 ரகங்களையும் பயிரிட்டுப் பார்க்கப்பட்டது. ஒரு பகுதியில் ஆடுதுறை- 27 நெல்லுக்குப் பரிந்துரைக்கப்படும் உர அளவிலும், மற்றொரு பகுதியில் ஐ. ஆர்-8 நெல்லுக்குப் பரிந்துரைக்கப்படும் உர அளவிலும் இரசாயன உரமிட்டு, அவைகளின் உரமேற்கும் திறனை ஆராய்ந்தனர்.

கல்ச்சர் 11321 என்ற ரகமே எல்லாவகையிலும் சிறந்தது என்பது புலனாகியது. அதன் பின்பு ஒவ்வொருவேளாண்மைக் கோட்டத்திலும், 4 ரகங்களையும் சோதனையாகப் பயிரிட்டுப் பார்த்த உழவர் பெருமக்களும், வேளாண்மை விரிவாக்க அலுவலர்களும்கொண்ட கருத்தரங்குகள் நடைபெற்றன. அக்கருத்தரங்குகளிலெல்லாம் கல்ச்சர் 11321 என்ற ரகமே சிறந்தது என்று தீர்ப்பு வழங்கினர். ஏனெனில் கல்ச்சர் 11321 என்றரகம், மற்ற ரகங்களைக்காட்டிலும் அதிக மகசூல் அளித்ததோடு, ஆடுதுறை-27-க்குப் பரிந்துரைக்கப்படும் உர அளவில் 12·6 சதமும், ஐ. ஆர். 8-க்குப் பரிந்துரைக்கப்படும் உர அளவில் 25·5 சதமும் ஆடுதுறை 27ரகத்தைவிட அதிக மகசூல் கொடுத்தது.

எனவே தமிழ்நாடு வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவினர் கல்ச்சர் 11321 என்ற ரகத்தை கோ-33 என்று அங்கீகரித்தனர். ஆனால் உழவர் பெருமக்களோ, உழவுக்கு முதலிடம் அளித்து உழவர் பெருமக்களின் வாழ்வை உயர்த்த முயன்றுவரும் தமிழ்நாடு முதலமைச்சரின் பெயரையொட்டிகல்ச்சர் 11321 க்கு 'கருணை' என்று செல்லப் பெயரிட்டனர்.

''அந்தக் 'கருணை' ரகம் தான் நான்!'' என்று பேச்சாளர் கூறியதும் பலத்த கையொலி எழுந்தது. சற்று நேரத்திற்குப் பின்னர் 'கருணை' மீண்டும் பேச்சைத் தொடங்கியது.

''அன்பு நண்பர்களே! இறுதியாக ஒரு சிறிது கூறி என் சிற்றுரையை முடிக்க விரும்புகின்றேன். நான் குட்டையானவன். நம் தலைவரைப் போன்றுசெங்குத்தாகவே நிற்பேன். எந்த மழையிலும் சாய மாட்டேன். கதிரில் ஆடுதுறை-27 போன்று தொங்குவேன்.

என்கதிரில் உள்ள 1000 மணிகளை நிறுத்துப்பார்த்தால் 17·4 கிராம் இருக்கும். 72·6சதம் அரிசி கொடுப்பேன். என் அரிசி வெண்மையாகவும், சாப்பாட்

டிற்கு ஏற்றதாகவும் இருக்கும். நம் தலைவரிடம் 9·4 சதம் புரதச் சத்து தான் உள்ளது. ஆடுதுறை-27 ரகத்திடம் 9·62 சதம் புரதச் சத்து உள்ளது. ஆனால் என்னிடம் 10·58 சதம்புரதச்சத்து உள்ளது!

ஏழை உழவர்கள் ஆடுதுறை-27 நெல்லுக்கு உரமிடும் அளவு இட்டாலும், பணக்காரர்கள் ஐ.ஆர். 8-க்கு உரமிடுவதுபோல் இட்டாலும் ஏற்றுக்கொண்டு, உழைப்புக்குத் தகுந்த கூலி கொடுப்பது போல், அவரவர்கள் உரமிட்டதற்குஏற்ப மகசூல் கொடுப்பேன்! இந்தஆண்டில் ஏறத்தாழ 20 000 ஏக்கர்களில் என்னைப் பயிரிட்டார்கள். நான் ஆடுதுறை-27 நெல்லை விட ஏக்கருக்கு 4½ மூட்டை அதாவது ரூ.128·00 அதிக வருமானம் தான் கொடுப்பேன் என்று என் தகுதியைக் குறைத்தே சொன்னார்கள். ஆனால் நான் விடுவேனா? 19—10—1970 தேதி வரை கிடைத்த பயிர் அறுவடைச் சோதனைகளின்படி, ஏக்கருக்கு சராசரியாக 1·94 டன் மகசூல் கொடுத்துள்ளேன் என்று தீவிர சாகுபடித் திட்ட இணை வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் குறிப்பிடுகிறார்கள். ஆனால் அவர்கள் கூறுவதை நான்ஒப்புக் கொள்ள மாட்டேன், ஏனெனில் அவர்கள் என் திறமையைக் குறைத்தே மதிப்பிடுகிறார்கள். அவர்கள் கூறுவதைவிட அதிகமாக நான் மகசூல் கொடுத்துள்ளேன் என்பதை விளக்கிடத் தகுந்த ஆதாரமாக அதிக மகசூல் பெற்றுள்ள சில உழவர் பெருமக்களையும் இக்கரத்தரங்கிற்குக் கூட்டிவந்துள்ளேன். இடைவேளைக்குப் பின் அவர்களை விசாரித்து என் திறமையை நீங்கள் அறிந்து கொள்ளலாம். தீவிர சாகுபடித் திட்ட இணை வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் கூறுவதையே நீங்கள் ஒப்புக் கொண்டால் கூட ஆடுதுறை-27 ரகத்தைவிட நான் ஏக்கருக்கு 600 கிலோவுக்குமேல் அதிக மகசூல் கொடுக்கின்றேன். ஆடுதுறை 27-ன் சராசரி ஏக்கர் மகசூல் 1·3 டன்தான். எனவே ஏக்கருக்கு அதிக மகசூல் 600 கிலோ என்று எடுத்துக் கொண்டு, தஞ்சைமாவட்டத்தில் ஆடுதுறை 27 பரப்பு (5·10 லட்சம் ஏக்கர்) முழுவதிலும் என்னைப் பயிரிட்டால், உபரியாக ஏறத்தாழ 3 இலட்சம் டன் அதிக நெல் கிடைக்கும்! எனவே உணவு உற்பத்திப் பெருக்கம் என்ற பயணத்தை மேற்கொண்டுள்ள தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள் என்னை ''விடிவெள்ளி'' யாகவே கருதுகின்றனர். அனுசரணை ஆராய்ச்சி மூலம் என்னை உருவாக்கியவர்கள் அடுத்து சம்பாவிற்கும் ஏற்றரகத்தை உருவாக்க விருக்கிறார்கள். சம்பாவுக்கு ஏற்ற ரகம் வெளிவந்தவுடன் தஞ்சை மாவட்டத்தில் பகலவன் தோன்றி விடுவான். தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களின் நெடும் பயணம் வெற்றி பெற்றுவிடும்! இத்துடன் என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.''

(பலத்தகையொலி)

---

## கடலைப் பருப்பு உற்பத்தி பெருகிட

தமிழ் நாட்டில் சுமார் 2,000 ஹெக்டர் நிலப் பரப்பில் கடலை (கொண்டைக் கடலை) சாகுபடி செய்யப்படுகிறது. தற்பொழுது தமிழ் நாட்டில் கோயம்புத்தூர், சேலம் ஆகிய இரு மாவட்டங்களில் மட்டுமே பெரும்பரப்பில் கடலை பயிரிடப்படுகிறது. ஏறத்தாழ, 1,000 டன் கடலைப்பருப்பு ஆண்டு தோறும் தமிழ் நாட்டில் உற்பத்தியாகிறது. இந்த உற்பத்தி தமிழ் நாட்டின் தேவையை எப்படி ஈடு செய்ய முடியும்? எனவே தான் வட மாநிலங்களிலிருந்து பெருமளவில் கடலைப் பருப்புகளை இறக்குமதி செய்ய வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம். இதனால் தான் கடலைப்பருப்பு விலை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது!

தமிழ் நாட்டிற்குத் தேவையான கடலைப்பருப்பு முழுவதையும் நாமே உற்பத்தி செய்ய முடியாதா? முடியும்! எப்படி?

ஒவ்வொரு உழவர் பெருமகனும் தன் குடும்பத்திற்கு வேண்டிய கடலைப் பருப்புகளைத் தன் நிலத்திலேயே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். கடலைச் சாகுபடி செய்ய இயலாத மாவட்டங்களின் தேவையை ஈடு செய்ய கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி



மாவட்ட உழவர் பெருமக்கள் மேலும் பெரும்பரப்பில் கடலைச் சாகுபடி செய்ய முன்வரவேண்டும். கடலைப் பருப்பின் உற்பத்தியைப் பெருக்கக் கீழ்க் கண்ட சாகுபடி முறைகளை மேற்கொண்டு கடலைச் சாகுபடி செய்தால், கடலைப்பருப்பு இறக்குமதியை வெகு விரைவில் நிறுத்திட இயலும்!

மானாவாரியாகக் கடலை விதைக்க நவம்பர் மாதம் மிகவும் ஏற்றது. இம்மாதத்தில் 'கோ-1' என்னும் பொறுக் விதையைச் சாகுபடி செய்தால் கடலைப் பருப்பின் உற்பத்தியைக் கணிசமாக உயர்த்திடலாம்.

'கோ-1' கடலையின் வயது 100 நாட்கள். ஹெக்டருக்கு 35 கிலோ விதை விதைக்க வேண்டும். ஹெக்டருக்கு 10 வண்டி (5 டன்) தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு, 22 கிலோ மணிச்சத்து கொடுக்க 138 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். விதைகளை 45 சென்டி மீட்டர் × 20 சென்டி மீட்டர் இடைவெளியில் விதைப்பது நல்லது.

கடலையின் முக்கியப் பூச்சி காய்த்துளைப்பான். இதைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு 25 கிலோ டி.டி.டீ. 5 சதத் தூளைத் தூவ வேண்டும். அல்லது 0·1 சத டி.டி.டீ. மருந்தை (1 கிலோ நனையும் டி.டி.டீ. 50 மருந்தை 500லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கலாம். அல்லது கார்போபினோத்தியான் 2 சதத் தூளை ஹெக்டருக்கு 25 கிலோ விதம் தூவலாம்.

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு கடலைச் சாகுபடி செய்து கடலைப் பருப்பின் உற்பத்தியைப் பெருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.





மறைந்த
மாமேதை
நேருவின்
தோற்றங்கள்





குற்றாலத்துப் பழப்பண்ணையில் மங்குஸ்தான் பழம் அபூர்வமாகக் கிடைக்கும் விந்தையையும், மூல வியாதிக்கு மிக முக்கியமென்பதையும், பயன் மிகு பருத்தி விளைவிக்க ஏற்பாடு செய்ய முன் ஆலோசனைகளையும் எடுத்துக் காட்டிய விடத்து, வலியிழந்தவன் வேகம் பெறுவான் என்பது உறுதி.

—பெ. சு. தியாகராசன், அருப்புக்கோட்டை.

# பார்த்தோம்



# படித்தோம்



### கவிஞர்களுக்கோர் ஏடு!

'நல்லரசைப் பெற்றேமே நாம்' ஈற்றடி வெண்பாக்கள் அனைத்தும் கடைந்தெடுத்த நன்முத்துக்கள். இம் முத்துக்களுள்ளும் தலையாய ஆணி முத்தைத் தெரிந்தெடுப்பதில் தாங்கள்—நீதியை நிலைநாட்ட—எத்துணை ஈடுபாடு செலுத்தியிருக்க வேண்டும் என்பதை நினைக்க நெஞ்சு சிலிர்க்கிறது.

இப்பகுதியின் மூலம் குடத்துள்ளிட்ட விளக்காயிருக்கும் கவிஞர் பெருமக்களை வெளிக்கொணரும் 'தமிழரசு', 'இலக்கியத்தின் விடிவெள்ளி' யாகுமென்று சொன்னால் நூற்றுக்கு நூறு விழுக்காடு உண்மையேயாகும். 'தமிழரசு', தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் ஒவ்வொருவரும் படித்துப் பெருமைப் படக்கூடிய 'தமிழ்' ஏடாகும்,

—ச. ஆ. கேசவன், கு. கழுகாசலபுரம்.

### கூகம் என்று பெயர் சொல்லுவோம்'

இலக்கியம் கண்டது கூகமடா
இடையில் வந்தது கூவமடா
அலட்சியம் இன்றிப் பெயர்சூட்ட
அரசும் துணிந்திட வேண்டுமடா
கண்டோம் இதுவரை கூவமதை
கேட்டோம் பழமைக் கூகமதை
தந்தால் நல்லது தமிழரசே
தாரணி போற்றும் எமதரசே.

—திருச்சி இரட்டையர்.

### மருந்துபோல் உதவும் 'தமிழரசு'

'பற்களைப் பாதுகாப்பது எப்படி' என்னும் கட்டுரை கண்ணுற்றேன்! பற்களைப் பாதுகாக்காவிடில் அதனல் ஏற்படும் தீமைகளையும், நிவர்த்தி செய்யும் முறைகளையும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கும் விதம் கண்டு வியப்புற்றேன். மக்களின் உடல்நலம் பேணலில் நடமாடும் மருத்துவமனையாக விளங்கிவரும் தமிழரசு இதழில் மக்களுக்கு நன்மை தரும் உடற்கூறு மருத்துவக் கட்டுரைகளை அடிக்கடி வெளியிடுவது போற்றுதலுக்குரியது. மருந்துபோல் உதவும் தமிழரசு வாழ்க.

—த. சிவசுப்பிரமணியன், மண்ணச்சநல்லூர்.

### கதைப் போட்டி துவக்கினல் என்ன?

அரசின் சாதனைகளையும், தொடர்ந்து அது ஆற்றிவரும் பணிகளையும் சிறப்பாகத் தொகுத்து வெளியிடப்படும் 'தமிழரசு' தமிழகத்தின் எல்லா நூலகங்களிலும் இடம் பெற வேண்டும்.

குடும்பக் கட்டுப்பாட்டை வளர்க்கும் கருத்தை மையமிட்டுப் பல சிறு கதைகள், தேசீய சேமிப்பிற்குப் போட்டிக் கதைகள் ஆரம்பிக்கலாமே!

—என். பி. எஸ். மணியன், திருத்தணி.

### கடல் கடந்தார்க்கும் களிப்பு தரும் ஏடு

'தமிழரசு' இதழ் மிகவும் பிரமாதமான பகுதிகளை ஏந்தி வருவதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தென்னகத்தின் ஆட்சி முறைகளையும், கல்வி முன்னேற்றத்தையும், தொழில் மேம்பாட்டையும், சுற்றுப் பயணிகளைக் கவரும் இடங்களையும் விளக்கிடும் கருத்து மிக்க கட்டுரைகளும், முதல்வரின் இனியவை இருபதும், என்போன்ற மலேசிய நாட்டில் வாழும் பல இலட்சக் கணக்கான தமிழர்களை மகிழ்ச்சி அடையச் செய்கின்றன.

—மு. செல்லத்துரை, மலேசியா.

### பயன் தந்த வேண்டுகோள

நம் தமிழக அமைச்சர்கள் பழனிப் பகுதியில் சுற்றுப் பயணம் செய்யவந்தபோது, 'பாலாறு — புரந்தரலாறு' திட்டத்தை நிறைவேற்றிட வேண்டினேம். தமிழ்ப்பாட்டால் வாழ்த்தினேம். 'தமிழரசில்' அத்திட்டம் செயல்பட வருவது குறித்துப் பாராட்டாத மக்கள் இல்லை.

வாழ்க தமிழ (க)ரசு.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

### அரவணைக்கும் அரசு.

இரத்தலின் இழிவையும், மானத்தொடு வாழ்தலின் சிறப்பையும் எடுத்துக் கூறி அவர்களது வாழ்வு மலர்ச்சியடைய, மானத்துடன் சமூகத்தில் வாழப் பல தொழில்களில் பயிற்சியும் அளித்துப் பிச்சைக்காரர்களை நல்வழிக்குத் திருப்பும் நமது அரசை என்னவென்று சொல்ல?

—தே. எஸ். கலியபெருமாள், கட்டமுத்துப்பாளையம்.

### 'போட்டிகள்' பெருகுக!

'தமிழரசு' குடும்ப நல இதழாக அமைந்து விட்டதாலும், அதையே நாட்டு நல் இதழாக மக்கள் பாவிப்பதாலும், சிறுவர், சிறுமியர், இளைஞர்கள் ஆகியோரது பொது அறிவைத் தட்டியெழுப்ப, கதை, கவிதை, கட்டுரை ஆகியவற்றுக்கான போட்டிகள் நடத்தப்பட வேண்டும் எனப் பொதுமக்கள் சார்பில் அன்புடன் வேண்டுகிறேம்.

மு. ஞானசேகரன், மறையூர்.




கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எங்கு பார்த்தாலும் பசுமையான தோற்றம்! பசுமையான தோற்றத்திற்கு இடையிலே செந்நிறத்தாலும், பொன் நிறத்தாலும் ஆன சில பகுதிகள் திட்டுத் திட்டாகத் தோன்றின! இவ்வியற்கைக் காட்சி கண்ணிற்குக் குளிர்ச்சியையும், மனத்திற்கு மகிழ்ச்சியையும் அளித்துக் கற்பனையையும் தூண்டிவிட்டது!

பச்சைப் பசேலென்ற பட்டாடை உடுத்தி நிலமகள் என் எதிரே நின்றிருந்தாள்! அவள் உடுத்தியிருந்த பச்சைப் பட்டாடையிலே, செந்நிறத்தால் ஆன சரிகையால் பூவேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது! அந்தச் செந்நிறப் பூக்களின் நடுவில் பொன் மணிகள் தைக்கப்பட்டிருந்தன! நிலமகளின் அழகை என்னவென்று வர்ணிப்பது? இப்படி எண்ணிக் கொண்டிருந்த நேரத்திலே, நாகைப் பட்டிணத்திலிருந்து சிக்கல் நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்த எங்கள் 'வேன்' திடீரென்று நின்றது. அதனால் ஏற்பட்ட அசைவினால் என் நினைவு அலைகள் துண்டிக்கப்பட்டன. வேனை விட்டு இறங்கியதும், எங்களை வயல் வரப்புகளில் அழைத்துச் சென்றார் தீவிர சாகுபடித்திட்ட வேளாண்மைச் செய்தி அலுவலர் திரு மணி அவர்கள்.

பசுமையான தோற்றத்தில் வளர்ந்து வரும் சம்பா நெற்பயிர்கள் தான் நிலமகளின் பச்சைப்பட்டாடை போலவும், விளைந்து தலைசாய்ந்து கிடக்கும் ஆடுதுறை-27 நெல்லின் காட்சி அப்பச்சைப் பட்டாடையிலே செந்நிற சரிகையால் செய்யப்பட்ட பூவேலைப்பாடு போலவும், ஆடுதுறை-27 நெல் வயல்களுக்கு நடுவில் சில வயல்களில் பயிரிடப்பட்டு விளைந்து அறுவடைக்குத் தயாராக நிற்கும் ஐ.ஆர். 8 நெல்லின் காட்சி செந்நிறச் சேலையின் நடுவில் பொன்மணிகளைத் தைத்திருந்தது போலவும் காட்சி அளித்தன!

என்னுடன் வந்தவர்கள் ஐ.ஆர். 8-ன் அழகிலே சொக்கி அதை நோக்கி நடந்தனர் ஆனால் என்னைக் கவர்ந்தது, ஆடுதுறை 27 நெல் வயலுக்கும் ஐ.ஆர். 8 நெல் வயலுக்கும் இடையிலே செந்நிற மணிகளைக் கொண்டு செங்குத்தாக நின்ற நெற்பயிர்கள் தான்! அப்பயிர்கள் மிகவும் கட்டையாகத் தான் இருந்தன; ஆனால் வாளிப்பான கதிர்களையும், செழுமையான மணிகளையும் கொண்டிருந்தன. காலைக் கதிரவனின் செந்நிற ஒளியிலே, மணிகள் மின்னிக்கொண்டிருந்தன! காலை இளந்தென்றலிலே கதிர்கள் தலையசைத்து வரவேற்புக் கூறுவது போல் இருந்தது! கால் சட்டையை சுருட்டி விட்டுக் கொண்டு வயலிலே இறங்கிச் சில கதிர்களை எடுத்துப் பார்த்தேன். அத்தனையும் செந்நிற நன் மணிகள்; ஒரு பதர் கூடக் காணப்படவில்லை. அடுத்து தூர்களில் ஏதாவது பயன் கொடுக்காது உள்ளதா (Unproductive tillers) என்று பல இடங்களிலே பார்த்துக்கொண்டிருந்தேன்.

அப்பொழுது என்னுடன் வந்தவர்கள் "என்ன சார், குட்டையான நெல்லைப் போய் பார்க்கிறீர்களே, இங்கே வந்து இந்த நெல்லைப் பாருங்கள்" என்றனர்.

"நாம் இங்கு வந்துள்ளதே இந்தக் குட்டையான நெல்லைப் படம் பிடிக்கத்தான்" என்றேன். "இதையா சார் படம் பிடிக்கப் போகிறோம்" என்றார் கேமராமேன் ஜெகதீசன்.

"ஆமாம்" என்றேன்.

கேமராமேனின் முகம் வாடி விட்டது. இருப்பினும் கேமராவை வரப்பிலே நிறுத்தி வைத்து எந்தக் கோணத்தில் எடுக்கலாம் என்று பார்த்துக் கொண்டிருந்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் வேளாண்மைச் செய்தி அலுவலர் என்னருகில் வந்து "இவர்தான் இந்த வயலின் சொந்தக்காரர். பழனிவேல் முதலியார் என்று பெயர்" என்று ஒரு உழவர் பெருமகனை அறிமுகப்படுத்தினார். நான் வணக்கம் செலுத்தினேன்; அவரும் வணக்கம் செலுத்தினார்.

"நாங்கள் உங்கள் வயலில் விளைந்துள்ள 'கருணா' நெல்லைப் படம் பிடிக்கவும், 'தமிழரசு' பத்திரிகைக்காக உங்களைப் பேட்டி காணவும் சென்னையிலிருந்து வந்துள்ளோம். உங்களுக்குத் தடையேதும் இல்லையே" என்று கேட்டேன்.

"தடைசொல்ல என்னங்க இருக்கு? நல்ல ரகத்தை எங்களுக்கு அளித்த அரசாங்கத்தின் முயற்சிக்கு நாங்கள் என்றும் துணையாக இருப்போம்" என்றார்.

கேமராமேன் எந்தக்கோணத்தில் படம் பிடிக்கலாம் என்று முடிவு செய்து விட்டார். ஆனால் மேகக் கூட்டம் வெளிச்சத்தை மறைத்துவிட்டது. "சூரிய வெளிச்சம் தெரிய இன்னும் குறைந்தது 10 நிமிடம் ஆகலாம்" என்றார் கேமராமேன். அதற்குள் திரு பழனிவேல் அவர்களைபேட்டி கண்டுவிடலாம் என்று நினைத்து அவரை அழைத்தேன்.

"நீங்கள் எத்தனை ஏக்கரில் கருணா பயிரிட்டீங்க?"

''நான் 15 ஏக்கரில் கருணை பயிரிட்டேனுங்க.''

''சென்ற ஆண்டு குறுவையில் என்ன பயிரிட்டீங்க ?''

''ஆடுதுறை-27 பயிரிட்டே னுங்க.''

''அதை ஏன் இந்த ஆண்டு நீங்கள் பயிரிடவில்லை?''

''சார்! ஆடுதுறை-27 பயி ரிட்டால், அறுவடையின் பொழுது எங்கள் வயலில் மழையினால் தண்ணீர் தேங்கி விடுகிறது. அதனால் கதிர்கள் தண்ணீரில் மூழ்கி, மணிகள் முளைத்து விடுகின்றன. மிகவும் சேதம் ஏற்பட்டுவிட்டதுங்க. அதனால்தான் ஆடுதுறை-27 நெல்லை இந்த ஆண்டு பயிரிட வில்லை.''

''கருணையில் இப்படிப்பட்ட சேதம் இருக்காது என்று உங்க ளுக்கு எப்படித் தெரியும்?''

''சென்ற ஆண்டு என் வயலில் சோதனையாக 15 சென்ட் நிலத் தில் கருணையைப் பயிரிட்டுப் பார்க்கும்படி எங்கள் வேளாண்மை வளர்ச்சி அலுவ லர் கூறினார். அவர் பேச்சைக் கேட்டுச் சென்ற ஆண்டு பயிரிட் டுப் பார்த்ததில், கருணை நெல் அதிக மகசூல் கொடுக்கும் என்ப தும், ஐ. ஆர். 8 நெல்லைப் போல் தலை சாயாது நிற்பதால், ஆடு துறை நெல்லில் ஏற்படும் சேதம் கருணையில் ஏற்படாது என்பதும் புலனாகியது. அதனால்தான் இந்த ஆண்டு 15 ஏக்கரில் பயிரிட் டேன்.''

''கருணை நெல் பயிரிட செலவு அதிகம் ஆகுதுங்களா ?''

''அதெல்லாம் இல்லிங்க, ஆடு துறை 27 நெல்லுக்கு ஆகும் செலவுதான் இதற்கும் ஆகியுள் ளது. ஆடுதுறை 27 நெல்லுக் குப் போடும் அளவு உரத்தைத் தான், கருணையுக்கும் போட் டேன்.''

''பூச்சி, நோய்த் தாக்குதல் எப்படி இருந்ததுங்க ?''

''ஆடுதுறை-27 நெல்லில் ஏற்படும் பூச்சி நோய்கள் தான் இதிலும் வருகின்றன என்று சொல்லுகிறார்கள். ஆனால் நான் முன்கூட்டியே தடுப்பு முறையாக வேளாண்மை வளர்ச்சி அலுவல லர் கூறியபடி மருந்து தெளித்து விட்டதால், என் வயலில் பூச்சி நோய்கள், அதிகம் தோன்ற வில்லை.''

''உங்களுக்கு கருணை நெல்லில் என்ன மகசூல் கண்டதுங்க?''

''எனக்கு மா வுக்கு சராசரி யாக 25 கலம் கிடைச்சுதுங்க.''

''அப்படியா னால் ஏக்கருக்கு 75 கலம் கிடைச் சுதுங்களா ?''

''ஆமாங்க. இதில் ஆட் கூலி யும் சேரவில்லைங்க. அத்துடன் மாடு கட்டிப் போர டித்த நெல்லும் சேரவில்லைங்க.''

''அதையும் சேர்த்தால் ஏக்க ருக்கு என்ன மக சூல் தேறுமுங்க?''

''தஞ்சை மா வட்டத்தில் ஒரு கலம் நெல் நிலச் சொந்தக்காரருக்கு கிடைத்தால், 1½ மரக்கால் நெல்லை அறுத்து அடித்துத் தூற்றும் கூலியாகக் கொடுத்துவிடவேண்டுங்க. அதன் படிநான் ஏக்கருக்கு 4½ கலத்திற்கு மேல் கூலியாகக் கொடுத்துள் ளேன். மாடு கட்டிப் பிணையடித் தால் ஏக்கருக்கு குறைந்தது 6 கலம் கிடைக்கலாம். இவை களையும் சேர்த்தால் ஏக்கருக்கு 85 கலம் கிடைக்குமுங்க.''

''ஆடுதுறை-27 பயிரிட்டிருந் தால் என்ன மகசூல் கிடை திருக்கும் ?''

''ஆடுதுறை-27 பயிரிட்ட போது எல்லாம் சேர்த்து ஏக்க ருக்கு 45 முதல் 60 கலம்தான் கிடைக்குங்க.''

''அப்போ 'கருணை' நெல் ஏக்கருக்குக் குறைந்தது 25 கலம் அதிகமாகக் கொடுக்கும் என்று நம்புகிறீர்களா ?'

''நம்புறது என்னங்க ? நடை முறையிலேயே ஏக்கருக்கு அதிக மாக 25 கலம் நெல்லை 'கருணை' கொடுத்திருக்கிறதே !''

''கருணை நெல் சாப்பாட்டி டிற்கு எப்படி உள்ளது ?''

''ஆடுதுறை-27 நெல்லைப் போலவே உள்ளது.''



கதிர்வளம் கண்டு களிப்புறுகிறார் திரு பழனிவேல்.

''மார்க்கெட்டில் நல்ல விலை போகிறதா ?''

''ஆடுதுறை-27 நெல்லின் விலைக்கே எடுத்துக்கொள்கிறார் கள்.''

''கருணை நெல் பற்றி வேறு ஏதேனும் கூறுகின்றீர்களா ?''

''அதிக உரமிட்டாலும், தலை சாய்ந்து சேத முறாமல், அதிக மகசூல் அளிக்கும் ரகம் கிடைக் காதா என்று ஏங்கிய எங்களுக்கு 'கருணை' நெல் கிடைத்தது ஒரு வரப்பிரசாதமே ! அடுத்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தின் குறுவைப் பகுதியிலெங்கும் 'கருணை' பரவினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை! ஆனால் விதை நெல்தான் அனைவருக்கும் கிடைக் குமா என்று தெரியவில்லை.''

சூரிய வெளிச்சம் தெரியவே திரு சண்முகம், கேமராமேனைத் துரிதப்படுத்தினார். பல்வேறு கோணங்களில் படமெடுக்கப் பட்டது. படம் எடுத்து முடிந்த வுடனேயே மற்றும் இரு உழவர் பெருமக்களைப் பேட்டி கண் டேன். அவர்களும் சிக்கல் என்ற ஊரைச் சார்ந்தவர்களே. திரு. சோமசுந்தரம் என்பவர் ''எனக் குக் கூலி, போரடி நெல் சேரா மல் மாவுக்கு 25 கலம் கிடைத்

து '' என்றும், சிக்கல் கிராம முனிசீப் திரு. சண்முகசுந்தரம் அவர்கள் எனக்கு மாவுக்கு 22 கலம் கிடைத்துள்ளது'' என்றும் தெரிவித்தனர். அவர்களும் ' கருணை ' நெல்லை மிகவும் புகழ்ந்தனர்.

அடுத்து சிக்கலில் உள்ள மாநில விதைப் பண்ணைக்குப் போனோம். அங்கே பண்ணை மேலாளர் யார் என்று கேட்டேன். வேளாண்மைச் செய்தி அலுவலர், ஒரு துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு மூட்டையைத் தூக்கிக்கொண்டிருந்த ஒருவரைக் காட்டி ''அவர்தான் பண்ணை மேலாளர்'' என்று கூறவே, "பரவாயில்லையே நமது நமது பண்ணை மேலாளர்'' என்று வியந்தேன். அங்குபடமெடுக்க வேண்டிய காட்சிகளை எடுக்க நேரமாகும் என்று தெரிந்து கொண்டவுடன் பொருள் வைத்தச் சேரி (பொரவச்சேரி) என்ற ஊரைச் சேர்ந்த திரு. பிச்சைக் கண்ணு அவர்கள் வயலுக்குச் சென்றோம். அவர் அங்கு இல்லாவிட்டாலும், அவருடைய தம்பி திரு. ஜெயபால் என்பவரிடம் கேட்டுகொண்டு கருணை நெல் அறுவடையைப் படம் பிடித்தோம். படம் பிடித்துக்கொண்டிருக்கும்போதே திரு. ஜெயபாலிடம் உரையாடிக்கொண்டிருந்தேன். அவர் சொன்ன விவரம் என்னை வியப்பில் ஆழ்த்தியது!

அவர்கள் இந்த ஆண்டுதான் முதன் முதலாகக் குறுவை பயிரிடுவதாகவும், அதற்கு முன்பெல்லாம் கோ-25, பி. சி. பி.1 ஆகிய நெல் ரகங்களையே பயிரிட்டதாகவும், அந்த ரகங்கள் மாவுக்கு10-15 கலம்தான்மகசூல் கொடுத்தது என்றும் கூறினர். இந்த ஆண்டு 30 ஏக்கரில் கருணை பயிரிட்டதாகவும், அதில் சராசரி மாவுக்கு 20 கலம் (கூலி, போரடி நெல் சேராமல்), கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். கருணை அறுவடை முடிந்தவுடன் ஐ. ஆர். 5 பயிரிடப் போவதாகவும் குறிப்பிட்டார். ஒரு போகம் பயிரிட்டு மாவுக்கு 10-15 கலம் எடுத்த நாங்கள், இந்த ஆண்டு குறுவையிலேயே மாவுக்கு 20 கலம் எடுத்துள்ளதால், மாவுக்கு 5-10 கலம் கூடுதலாகவும் கிடைத்துள்ளதுடன், தாளடி மகசூல் மேலும் வருமானத்தைப் பெருக்கும் என்றார். மேலும், அரசாங்கம் இரு போகச் சாகுபடித் திட்டம் கொண்டு வந்ததை வாயார வாழ்த்தினர்.

திரு. ஜெயபால் சொன்னது போதாமல், அவர்களுடைய வேலையாள் ஒருவரையும் விசாரித்தேன். அந்த வேலையாளும் ஜெயபால் சொன்னது போலவே சொன்னார். பரவாயில்லை ; இரு



போகச் சாகுபடித் திட்டத்தைப் புரிந்துகொண்டு உழவர் பெரு மக்கள் முயற்சி செய்கிறார்களே என்று திருப்தியடைந்துகொண்டு படத்தைப் பிடித்துக்கொண்டு மீண்டும் சிக்கல் மாநில விதைப் பண்ணைக்குத் திரும்பினோம். அங்கு ஆடுதுறை-27-ன் மகசூலுடன், ' கருணை ' நெல்லின் மகசூலை ஒப்பிட்டுக் காட்டும் வகையில், உதாரணமாக ஒரு உழவரும் அவர் மனைவியும் நெல் மூட்டைகளின் முன்னால் நின்று கொண்டிருந்ததைப் படமாக்கிக் கொண்டு சிக்கலை விட்டுப் புறப்பட்டோம்.

வழி நெடுகப் படப் பிடிப்பு. வழியில் கண்டவரிடமெல்லாம் கருணை பற்றிய விசாரணை. மாலை 3 மணிக்கு வாண்டையார் இருப்பு வந்தோம். அங்குள்ள இந்திய உணவுக் கார்ப்பரேஷனைச் சார்ந்த கிடங்கில் கருணை நெல்லை விற்றுவிட்டுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் மாட்டு வண்டியில் திரும்பிக் கொண்டிருந்த உழவர்களைக் கண்டு அங்கும் படமெடுத்தோம். இறுதியாகத் தஞ்சைக்குத் திரும்பி வந்து இணை வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் சில உட்புறக் காட்சிகளையும் படமெடுத்தோம்.

அங்கு படம் எடுத்துக்கொண்டிருந்த நேரத்திலே, சில உழவர் பெரு மக்கள் தீவிர சாகுபடித் திட்ட அலுவலர்களையும், கருணை நெல்லையும் பாராட்டி எழுதியிருந்த கடிதங்களைக் காணும் வாய்ப்பு ஏற்பட்டது. அக்கடிதங்கள் ஒவ்வொன்றும்தீவிர சாகுபடித் திட்டத்தின் கடந்த ஆண்டுச் சாதனைகளைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன என்றால் தவறல்ல!

அடுத்துத் தஞ்சை நகரிலே புளியந்தோப்பு என்ற இடத்தினைச் சேர்ந்த திரு கு. பழனிசாமி என்பவரைப் பேட்டி காணும் வாய்ப்பு கிடைத்தது.

அவர் இந்த ஆண்டுக் குறுவைப் பட்டத்தில் நான்கு ஏக்கரில் கருணை பயிரிட்டிருந்தாராம். அதில் ஒரு ஏக்கரில் தேசிய செயல் விளக்கத் தளை அமைத்திருந்தாராம். அவர் 19-6-70 அன்று நாற்றுவிட்டு, 14-7-70 அன்று 6 அங்குலம் × 4 அங்குலம் இடைவெளியில் அந்த தேசிய விளக்கத் தளையை நடவு செய்தாராம். மண் பரிசோதனை செய்து கிடைத்த பரிந்துரையின்படி 2,250 கிலோ தழை உரம் 75 கிலோ அமோனியம் சல்பேட்,45 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இட்டாராம் அவர். 53 வது நாளில் அதாவது



11–8–70 அன்று 75 கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாகத் தூவினாராம். அவர் 3 முறை பயிர்ப் பாதுகாப்பும் செய்தாராம்.

அவர் 1-7-70 அன்று நாற்றங்காலில் மருந்து தெளித்ததாகவும், 2-8-70 நடவு வயலில் முதல் முறை மருந்து தெளித்ததாக்வும், 21-8-70 அன்று இரண்டாம் முறை மருந்து தெளித்ததாகவும், 11-9-70 அன்று அதாவது விதைத்த 84-ம் நாளில் மருந்து தூவியதாகவும், கூறுகிறார். 6-8-70 அன்றும், 25-8-70 அன்றும் களை எடுத்ததாகவும் கூறுகிறார்.

அந்த தேசிய செயல் விளக்கத் தளையை (1 ஏக்கர்) பல உழவர் பெருமக்களின் முன்னிலையிலும் பத்திரிகை நிருபர்களின் மத்தியிலும் அறுவடை செய்யப்பட்டதாகவும், அதிலிருந்து 3,497·5 கிலோ மகசூல் கிடைத்ததாகவும் திரு. பழனிசாமி பெருமிதத்துடன் கூறினார்.

'' கருணாநெல் தஞ்சை மாவட்டத்தில் ஒரு புதிய சகாப்தத்தையே உருவாக்கப் போகிறது. பொதுவாக மேட்டூர் அணை காலந் தாழ்ந்தே திறக்கப்படுவதால், ஆடுதுறை-27 நெல்லின் சாகுபடியைக் காலந் தாழ்ந்தே மேற்கொள்ள நேரிடுகிறது. ஐப்பசி மழையில் ஆடுதுறை-24 நெல் சேதமுற்றே வந்தது. இதனால் ஏற்பட்ட சேதம் கண்டு தஞ்சை மாவட்ட உழவர் பெரு மக்கள் 'வெண்ணை திரண்டு வரும் போது தாழி உடைந்த' கதையாகப் போய்விடுகிறதே என்று கவலைப்பட்டு வந்தனர். எங்கள் கவலை தீர்க்க வந்த 'கருணா' வின் புகழ் விரைவில் பரவும்'' என்றார் திரு. பழனிசாமி.

' கருணா நெல் பயிரிட்டு அதிக மகசூல் விளைவித்த அவருக்குத் 'தமிழரசு' சார்பில் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துப் பேட்டியையும், படப் பிடிப்பையும் முடித்துக்கொண்டுசென்னை திரும்பினோம்.

தற்பொழுது தஞ்சைமாவட்டமெங்கும் சுமார் 5·10 இலட்சம் ஏக்கரில் ஆடுதுறை-27 பயிரிடப்பட்டு வருகிறது. ஆடுதுறை-27 ஏக்கருக்கு சராசரியாக 1·3 டன் மகசூல்தான் கொடுத்துள்ளது. ஆனால் 'கருணா' நெல் ஏக்கருக்கு சராசரியாக 1·94 டன் மகசூல் அளித்துள்ளது. 'கருணா' நெல் ஆடுதுறை-27-ஐ விட ஏக்கருக்குச் சராசரியாக 600 கிலோ அதிகமாக மகசூல் கொடுக்கும் என்பது தெளிவாகியுள்ளது. எனவே, 5·10 இலட்சம் ஏக்கர் பரப்பிலும் 'கருணா' பரவும் போது ஏறத்தாழ 3 இலட்சம் டன் நெல் அதிகமாகக் கிடைக்கக்கூடும் என்று புகைவண்டியில் வரும்போதே கணக்கிட்டுக் கொண்டிருந்தேன்.

"1972க்குள் பிற மாநிலத்திற்கும், பிற நாடுகளுக்கும் அரிசி அனுப்பும் அளவுக்குத் தமிழ்நாடு முன்னேறும்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது எனக்குத் திடீரென நினைவுக்கு வந்தது. எதிர்காலம் பற்றி அண்ணா அவர்களின் கணிப்பு எவ்வளவு உண்மை என்பதை எண்ணி வியப்பிலாழ்ந்தேன்! அண்ணாவின் தீர்க்கதரிசனத்தை எண்ணியதும் என் கண்களில் நீர் மல்கியது. என் பயணம் தொடர்ந்தது. பயணத்தின் முடிவாக இக்கட்டுரையும் பிறந்தது!

**(மாணிக்கம்).**



திரு பழனிசாமி அவர்கள் பயிரிட்டிருந்த 'கருணா'வைப் பார்த்து பல உழவர் பெருமக்களும், அலுவலர்களும் பாராட்டியுள்ளனர் (வட்டத்திற்குள் தெரிபவரே திரு பழனிசாமி).


குறளகம்
சென்னை.1
அங்காடி
கதர்-கைத்தொழில்
தொலைபேசி எண்கள் : 26762 21552 21553
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்

# வாதத்தை வென்றிடுவோம்!




காலை வேளை. அந்த மருத்துவ மனையின் ஒரு பகுதியில் சில ஆடவர் எண்ணெய் தேய்த்த உடலுடன் நின்று கொண்டிருந்தனர். ஆவலோடு எட்டிப் பார்த்தேன். பக்கத்து அறையில் ஒருவர் எண்ணெய் பூசிய உடலுடன் படுத்திருக்க, இருவர் சுடச்சுட வெள்ளைப் பொட்டலத்தை ஒத்தடம்போல் உடலில் தேய்த்தபடி இருந்தனர். இவருக்கு ஏன் இவ்வளவு சிறப்பான கவனிப்பு என்று வியப்புடன் நான் நோக்கும்போது அங்கு வந்த சித்த வைத்திய டாக்டர் என் மனத்திலெழுந்த கேள்விக்கு விடை பகர்ந்தார். வாதத்திற்கான சிகிச்சை முறைகளில் அதுவும் ஒன்று என்பது அதன் பின் தான் எனக்குப் புரிந்தது.

சென்னை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில், அமைந்தகரை தாண்டி அண்ணா நகர் செல்லும் பாதை அருகே, சாலையை நோக்கியபடி கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனை. சுமார் எட்டேகால் லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்த மருத்துவ மனையைத் தமிழகக் கல்வி-பொதுநல அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் 17-9-1970 அன்று துவக்கி வைத்தார்கள்.

புதுமைப் பொலிவுடன் விளங்கும் இந்த மருத்துவ மனையில் வாதம், பாண்டு (சோகை), காமாலை, காசம், தோல்நோய்கள் ஆகியவற்றுடன் சுரம், வயிற்றுவலி, போன்ற நோய் நொடிகளுக்கும் சிகிச்சையளிக்கப்படுகிறது.

இந்த வாத நோயில், பக்க வாதம், முடக்கு வாதம், இடுப்புப் பிடிப்பு என்று வாத ரோகங்கள் 80 வகை உள்ளன.

சிலருக்குத் திடீரென்று ஒரு பக்கத்துக் கையும் காலும் அசைவற்று நின்று விடும்; சுரணையும் இருக்காது; தொட்டாலோ, கிள்ளினாலோ எந்த உணர்ச்சியும் ஏற்படாது. இது பக்கவாதம் எனப்படும்.

சிலருக்கு முகத்தில் வாதம் வந்தால் முகம் ஒரு புறமாக இழுத்துக்கொள்ளும்; பேச முடியாது.

முடக்கு வாதம் அல்லது கீல் வாயு என்று சொல்லப்படும் வாதம் வேறொரு வகையானது. இது மூட்டுகளில் வரும். கை மூட்டு, மணிக்கட்டு, விரல்களின் இணைப்பு அல்லது கால் மூட்டு ஏதாவது ஒரு பகுதியில் வீக்கம் ஏற்பட்டு விடும். கால் நடக்க முடியாது. கையை நீட்டவோ மடக்கவோ முடியாது. சிலருக்கு சுரம் கூட ஏற்படுவது உண்டு. ஆனால் இந்த வகை வாதத்தில் உணர்வு இருக்கும்.

கடினமான வேலை; வெய்யிலில் அலைந்து உழைப்பது; உடலில் ரத்தக் குறைவு ஆகியவற்றினால் ஏற்படுகிறது. ஆடவர், பெண்டிர் இருபாலரையும் இந்நோய் தாக்குவதுண்டு.



வாத நோய்க்காரருக்கு வெந்நீர் ஆவி பிடிக்கப்படுகிறது.



நோயாளிக்குச் சிகிச்சை தருகிறார் யுனானி மருத்துவர்.

இந்தவாதம் வந்தவர்கள்இங்கு வந்தால் இவர்களுக்குப்பஞ்சகர்ம (ஐந்து வகை) சிகிச்சை முறை அளிக்கப்படுகிறது. எந்த வகை வாதத்தைச் சேர்ந்தது என்பதை ஆய்வு மூலம் கண்டுபிடித்த பின் சிகிச்சையைத்தொடருகின்றனர்.

சிலருக்கு அவ்வப்போது மருந்து கொடுத்து அனுப்பி விடுவதுண்டு.

தேவைப்படுவோரை மருத்துவ மனையில் அனுமதித்துச் சிகிச்சை அளிக்கின்றனர்.

சிகிச்சையின் ஒரு பகுதி மருந்துகள் கொடுப்பது. கசாயமாகவும், சூரணமாகவும், லேகியமாகவும், தசமூலம் (பத்து வேர் சேர்ந்தது) சித்தாமுட்டி, சித்தரத்தை ஆகியவற்றை நோயாளிகளுக்குக் கொடுத்து வருகிறார்கள்.

முடக்கு வாதத்திற்கு குக்கில் என்றமருந்து கொடுப்பது உண்டு.

ரசம் கலந்த மருந்தும் கொடுப்பது உண்டு.

தைலம் தடவுவது அடுத்த முறை. நாள் தோறும் காலையில் ஆமவாதத் தைலம், தன்வந்திரத் தைலம், சீரபலாத் தைலம்ஆகிய வற்றை நோயாளியின் உடம்பில் தடவி அரை மணி நேரம் ஊற விடுகிறார்கள்.

அதன் பின் சில நோயாளிகளுக்கு (அவசியப்படுவோருக்கு மட்டும்) ஒத்தடமும் தரப்படுகிறது. கோதுமைத் தவிட்டை வறுத்து ஒத்தடம் கொடுக்கலாம். அல்லது நொச்சி, ஆமணக்கு, எருக்கன், புளி ஆகிய பச்சிலைகளை எல்லாம் சேர்த்து, நசுக்கி வேக வைத்துத் துணியில் கட்டி நோயாளியின் உடலில் ஒத்தடம் கொடுப்பார்கள்.

பக்கவாதத்திற்கும், முடக்கு வாதத்திற்கும் நவரக்கிழி ஒத்தடம் கொடுக்கப்படுகிறது. இதனை மருத்துவ சாஸ்திரத்தில் பிண்ட சுவேதம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பாக் கோதுமை நொய்யைக் கசாயத்தில் வேக வைத்துச் சிறிய மூட்டையாகக் கட்டி, பின் பாலும்

அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனை.



கசாயமும் கலந்த கலவையைப் பாத்திரத்தில் சூடாக்கி, அதில் இந்த மூட்டையை அமுக்கி, எண்ணெய் தடவிய உடம்பில் ஒத்தடம் போல் தடவுகிறார்கள். இதுதான் நவரக்கிழி. நாள் தோறும் 45 நிமிடமுதல் ஒருமணி நேரம் வரை இந்தச் சிகிச்சை 21 நாட்களுக்கு அளிக்கப்படும்.

இந்தச் சிகிச்சைக்குப் பின் நோயாளி வெயிலிலோ, வெளிப்புறங்களிலோ போக அனுமதிக்கப்படுவதில்லை. உடல் பாதிக்கப்படும் என்ற காரணத்தால் பூரண ஓய்வு தரப்படுகிறது.

21 நாள் சிகிச்சைக்குப் பின் நோயாளிகளுக்குச் சத்துணவு தரப்படுகிறது. அரிசி, கோதுமைச் சாதம், காய்கறிகள், எலும்பு அல்லது கறி சூப் கசாயத்துடன் சேர்த்துத் தரப்படுகிறது. வாயு பதார்த்தங்கள் (உருளைக்கிழங்கு வாழைக்காய் முதலியன) தவிர்க்கப்படுகின்றன.

இதுதவிரப், பத்து அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை நோயாளிகளுக்குப் பேதிமருந்து தரப்படுகிறது. வஸ்தி (Medicated enima) கொடுப்பதும் உண்டு. பொதுவாகக் காலந் தாழ்த்தாது ஆரம்பக் கட்டத்திலே வந்தால் இந்தச்சிகிச்சை மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும் என்று கூறுகிறார்கள்.



இரத்தச் சோகையுள்ள பெண்ணைச் சித்தவைத்தியர் பரிசோதனை செய்கிறார்.

நாள் தோறும் சுமார் ஆயிரம் நோயாளிகள் வரும் இந்த மருத்துவ மனையில் சித்த ஆயுர்வேத யுனானி முறையில் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இதற்கான மருந்துகள் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையை ஒட்டியுள்ள இந்திய மருந்துத் தயாரிப்பு நிலையத்தில் இருந்து வருகின்றன.

34 ஏக்கர் நிலத்தினைக் கொண்டுள்ள இந்த மருத்துவ மனையின் ஒரு பகுதியில் சுமார் 10 ஏக்கர் நிலத்தில், ஒரு மூலிகைப் பண்ணையும் உள்ளது. ஆடாதோடை, வில்வ மரம், புங்க மரம், மற்றும் பல மூலிகைச் செடிகளும் மரங்களும் உள்ளன. இந்த மருத்துவ மனையிலேயே ஒரு மருந்து தயாரிக்கும் நிலையம் ஏற்படுத்தவும், 100 படுக்கை வசதி கொண்ட இதில் இன்னும் 60 படுக்கை வசதியை அதிகப்படுத்தவும் திட்டங்கள் உள்ளன என்று இந்த மருத்துவ மனையின் கண்காணிப்பாளர் டாக்டர் எஸ். ஏ. சுபான் உற்சாகத்தோடு தகவல் தருகிறார். இந்திய மருத்துவ முறைக்கு இன்றையத் தமிழக அரசு தரும் ஊக்கத்திற்கும் ஆக்கத்திற்கும் எடுத்துக் காட்டாக இந்த மருத்துவ மனை அமைந்திருக்கிறது.

# உங்களுக்குத் தெரியுமா ?

## புத்தகத்தின் விலை ரூ 4 லட்சம்

1465-ஆம் ஆண்டு அச்சியற்றப்பட்ட புத்தகமொன்று விலைக்கு வந்தது. அதை அமெரிக்க நிறுவனமொன்று ரூ. 3,96,000 கொடுத்து வாங்கியுள்ளது. கத்தோலிக்க, கிறித்தவ, தத்துவ ஞானியான லாக்டான்டியஸ் எழுதிய இந்த நூலின் மகத்துவம் என்ன ? புத்தகமாக அச்சிடப்பட்ட மிகப் பழைய நூல்களில் இதுவும் ஒன்று.

ஆமாம்; இதைவிட முன்னால் அச்சிடப்பட்ட நூல் உண்டா ? உண்டு, அது தான் பைபிள். ஜெர்மனியில் 1455ல் பிரசுரிக்கப்பட்ட ஜான் கட்டன்பர்க் பைபிள் தான் உலகத்திலேயே அச்சியற்றப்பட்ட முதல் நூலாகும். இதன் நகலொன்று ஓர் அமெரிக்கர் வசமுள்ளது. இதை ரூ.180 லட்சத்திற்கு வாங்கத் தயாராக உள்ளனர்.

## இலட்சம் தரும் இரத்தம்

இரத்த தானம் செய்வதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 90,000 பெறுகிறார், ஒரு வாலிபர். அவர் பெயர் தாமஸ். அமெரிக்காவிலுள்ள கார் நிறுவனத்தில் தொழிலாளியாகப் பணியாற்றுபவர். அடிக்கடி இரத்த தானம் செய்யும் பழக்கமுள்ளவர்.

அவரது இரத்தத்தில் மதிப்பு மிக்க இரத்த அணுக்கள் (Anti Lewis-B) இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது மருத்துவத் துறை ஆய்வுக்கு மிகவும் முக்கியமானது. எனவே பல மருந்து நிறுவனங்கள் இவரது இரத்தத்தைப்பெற ஓடிவந்தன.

எனவே இவரது இரத்தம் ஏலத்திற்கு விடப்பட்டது. டேட்ரீ ஏஜென்ட்ஸ் என்ற நிறுவனம் இவர் இரத்தத்தை ஒரு கன சென்டிமீட்டருக்கு ரூ. 11.25-க்கு வாங்கிக்கொள்வதாக ஏற்றுக் கொண்டது. அதாவது ஓர் அவுன்ஸ் இரத்தத்தின் விலை சுமார் ஆயிரம் ரூபாய் ஆகும். இதன்படி அவர் ஆண்டுக்கு 8 குவார்ட்ஸ் இரத்தம் வழங்க வேண்டும். அதன் விலை ரூ. 90,000.

# வெண்பாப் போட்டி

> ‘சாதனைக் கீடுண்டோ சாற்று’ என்ற ஈற்றடியை வைத்து எழுதப்பட்ட வெண்பாவில், திரு. குழ. அண்ணாமலை எழுதிய வெண்பா பரிசு பெறுகிறது. பரிசு பெற்ற வெண்பாவும், வெளியிடுவதற்குத் தகுதி படைத்த நூற்றுக்கணக்கான வெண்பாக்களில் இட நெருக்கடி காரணமாகச் சில வெண்பாக்களும் இங்கே வெளியிடப் படுகின்றன.
>
> (ஆ-ர்.)

## 2. சாதனைக் கீடுண்டோ சாற்று

இல்லை உணவிங் கெனுஞ்சொல்லை யிந்நாட்டில்
நெல்லை மிகவிளைத்து நீக்கியதால்—நல்லரசு
ஏதிதுபோ லென்றயலார் ஏத்துந் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

குழ. அண்ணாமலை, கோவை.

இல்லார்க்குப் புன்செயும் ; ஏற்றமிகு கல்விதனில்
வல்லார்க்குப் பல்பணியும் ; வாழவழி—இல்லார்தம்
வேதனைக்கு வீடு(ம்)தந்து ; வெற்றிகொள்ளும் நல்லரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

இரா. கேசவன், ஒசூர்.

ஆற்றுநீர் வற்றி அழிபஞ்சம் முற்றியக்கால்
ஊற்றுநீர் பெற்றே உழவியற்றி—ஏற்றமொடு
வேதனை தீர்த்திட்ட வெற்றித் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

மு. குழந்தைவேல், கரூர்.

எங்கும் தமிழ் முழக்கி, ஏற்ற தொழில்பெருக்கித்
தங்குநிலம் ஏழையர்க்குத் தாமளித்தே—இங்கிளையர்
வேதனைகள் தீர்த்து, விளங்கும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

புலவர் த. வாசுதேவன், பி.ஏ., நயினார்பாளையம்.

நாற்ற மெடுத்து நகரை வலம்வந்த
சேற்றைப் படகுதவழ் சிற்றாறாய்—மாற்றிவிடுஞ்
சோதனை ஏற்றுத் தொழில்படுஉம் நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

சுப்பிரமணியன், புதுவை-3.

வாய்மையுடன் தூய்மையுடன் வண்மையுடன் திண்மையுடன்
தாய் நிகர்த்த நற்பரிவு தாங்கிநிதம்—சேய்நந்தம்
வேதனையைத் தீர்த்து விளங்கும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்

நல்லாரும் நானிலமும் நன்கு புகழ்ந்துரைக்கக்
கல்லக் குடிகொண்ட கண்ணனையார்—வல்லமையைத்
தீதற்ற நற்புலவர் செந்தமிழால் செப்புகின்ற
சாதனைக் கீடுண்டோ சாற்று.

க. அரங்கசாமி, கருவம்பாளையம்.

தக்க சமத்துவத்தைத் தான்பரப்பித் தாயகத்தோர்
எக்காலும் இன்றமிழ் போல் ஏற்றமுற—மக்கள் நம்
மாதவத்தால் வந்துதித்த மாண்பார் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

சோ. உலகப்பன், வெள்ளக்கோவில்.

வாழ்விலையோ என்றெண்ணி வாடிய நம் மக்களின் நல்
வாழ்வுக்குக் கொள்கை வகுத்திங்கே—தாழ்வுற்றோர்
வேதனையைப் போக்குமுயர் வேட்கைத் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

கு. பொன்னையா, பி.ஏ., நரிக்கல்பட்டி.

தெள்ளுதமிழ்ச் சொல்லாட்சித் தேரேறிச் செல்வதனை
உள்ளுங்கால் பேரின்பம் ஊற்றெடுக்கும்—வள்ளுவனார்
போதனையை வண்டிதொறுங் போதிக்கும் நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

இல. சக்கரபாணி, மடவாளம்.

கொல்லன் உலைத்தீபோல் கூத்தாடும் பஞ்சத்தைக்
கல்வியே செந்தமிழைக் காத்ததெது?—வல்லமைசேர்
சோதனையில் சேலம் தொழில்மய மானதொரு
சாதனைக் கீடுண்டோ சாற்று.

புலவர் ச. பாலுச்சாமி, கோட்டூர்.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—

திரு. குழ. அண்ணாமலை, 15/375, என். எச். ரோடு, கோயம்புத்தூர்—1.

சேலம் இரும்பாலைச் சென்னைப் பெயர்மாற்றம்
ஓலமிடும் ஏழைக் குழுநிலத்தின்—மூலமாய்
வேதனையைப் போக்கி விடுவித்த நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

ஆ. செந்தமிழன், கூத்தக்குடி.

போதிமரப் புத்தபிரான் போதனையைப் பின்பற்றி
நீதி நெறி மாறாமல் நேர்மையுடன்—ஓதுபுகழ்
ஏதமிலா ஆட்சிசெயும் எங்கள் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

இ. அன்பரசு, சென்னை-39.

பரிசுதருஞ் சீட்டைப் பரிவுடனே ஈந்து
அரிசி மலிவாய் அடைய—இரவுபகல்
போதெல்லாம் பாராப் பொதுநலம் பேணுகின்ற
சாதனைக் கீடுண்டோ சாற்று.

இராமகிருட்டிணன், கந்தர்வகோட்டை.

இரும்பாலை சேலத்தில் ஏற்படுத்திச் சொந்தக்
கரும்பான தாய்மொழியைக் காத்து—வருகின்ற
சோதனையை வென்றே சுகம்சேர்க்கும் நம்அரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

மா. கணபதி, பழையனூர்.

சேலம் இரும்பாலைச் செவ்விழைநூற் பஞ்சாலை
காலம் கனிந்தளித்த கார்கருணை—ஓலஞ்செய்
வேதனைகள் ஓட்டிவிடும் வேளாண்மை மின்துறையின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

ஆ, பொன்னையன், குளமங்கலம்.

சேலம் கனிவித்துச் சீர்திருத்தப் பாதையிட்டுக்
கோலமிகு நந்தமிழில் கோலோச்சிக்—காலமெலாம்
வேதனைசேர் "கொல்பசியை" வென்ற தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

சியாம் மணாளன், திரு. வி.க. நகர்.

'ஆடுதுறை' நற்'கருணை' 'ஐஆர் எட்டா'லெங்கும்
கூடுதலாய் நெல்லைக் குவித்திட்டே—நாடுலவும்
வேதனையும் வெவ்வறட்சிச் சோதனையும் வென்றோர்தம்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

த. மு. அகமது, கடையநல்லூர்.

இல்லாமை இல்லாத நாடாக இங்குள்ளோர்
எல்லோரும் எல்லாமும் எய்திடவே—நல்லோரின்
சோதனையில் தேறித் துலிந்த தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

ந. இராதாகிருட்டிணன், காரைக்குடி-3.

வல்லாண்மை காட்டவிங்கு வைத்தடால்மி யாபுரம்தான்
கல்லக் குடிபழங்கால் நத்தமென—வெல்லுதமிழ்ச்
சாதனைப் பேராகச் சார்ந்திலங்க வைத்தபெரும்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

இல.க. இரத்தினவேல், திருச்சி-1.

ஊழையும் உப்பக்கம் காணும் உறுதியுடன்,
யாழைப் பழிக்கின்ற இன்மொழியே !—ஏழைகளின்
வேதனை தீர்த்தே விளங்கும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

வி. இரத்தினம், பெங்களூர்-21.

அன்னைத் தமிழை அரியணையில் ஏற்றியதால்
சென்னை தமிழ்நாடாய்ச் செய்ததனால்—மன்னுகுறள்
போதனைகள் காப்பதனால் போற்றரிய நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

ஜி.வி. அர்த்தநாரி, பி.ஏ.பி.டி., வேலூர்.

இன்பத் தமிழ்காத்தும் ஏழை நலம்காத்தும்
அன்புற்ற தாய்போல் அரவணைத்தும்—துன்புற்றோர்
வேதனைகள் நீக்க விரையும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

க. திருமேனி, தாராபுரம்.

சேலத்து மண்ணில் செழுந்தமிழர் வாழ்வுக்குக்
'காலத்தில்' புத்தாலை கண்டிட்டார்—ஞாலத்தில்
வேதனையை வீழ்த்த விழையும் கலைஞரவர்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

வெ. செகநாதன், பி.எஸ்.சி., பி.டி., போத்தனூர்.

சேலம் உருக்காலை சேதுக்கால் வாய்த்திட்டம்
கோலமுடன் சீரடையும் கூவநதி—மேலுமுயர்
தீதற்ற திட்டங்கள் தீட்டும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

செங்கைதாசன், சென்னை-2.

நற்றமிழின் வித்திட்டு நன்மைக்குத் தொண்டாற்றி
உற்றபசி நோயை உருக்குலைத்துப்—பெற்றுவந்த
வேதனைகள் நீங்கிடவே வேலேந்தும் நல்லரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

இரா. கருப்பசாமி, திருச்சி-14.

புஞ்செய் வரிநீக்கிப் போற்றிடும் ஆட்சிசெய்து
நஞ்செய் விளைச்சலில் நாட்டிலுள்ள—பஞ்சையர்
வேதனையைப் போக்கி விளங்கும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

காந்திதாசன், பல்லவராயன்பட்டி.

நெல்லுக் கிருந்ததடை நீக்கியே, நேசமுடன்
சொல்லுக்குச் சொல்தமிழின் சீர்காத்தே—எல்லையிலா
வேதனையை மாய்த்த மேன்மைத் தமிழாட்சிச்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

கோன், திருச்சி-8.

சேலத் திரும்புவரச் செந்நெல் செழித்துவரக்
கோலத் தமிழெங்கும் கொஞ்சிவரக்—காலமெலாம்
வேதனையால் வாடியவர் வாழ்வுயர ஆளுமெங்கள்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—புலவர் குறளடியான், உடுமலை.

மண்ணில் வளம்நிறைத்தும், மண்ணுள் கனிஎடுத்தும்,
எண்ணரிய தாழ்வுகளால் ஏழையர்தாம்—கண்ணிறைத்த
வேதனை நீர்தடுத்தும் வீற்றிருக்கும் நல்லரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று!

—மு. சீனிவாசன், கோடைக்கானல்.

பார்வாழ ஏர்பிடிக்கும் பாட்டாளித் தோழர்கள்
சீர்பெற்று வாழ்ந்து சிறப்புறவே—நீர்வசதி
பாதிக்கா வண்ணம் பணிபுரிந்த நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று!

—ச. வீரப்பன், போதுபட்டி.

நாற்றமிகு கூவத்தை; நாட்டின்மூ டத்தனத்தை;
சாற்றரிய பஞ்சத்தைச் சாயாதே—ஊற்றெடுத்த
வேதனையை, இந்தியுடன் வீழ்த்திட்ட நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று!

—இராசகோபாலன், மேட்டூர் அணை.

எங்கும் தமிழ்முழங்க ஏழ்மை மடிந்தொழியப்
பொங்கும் கலைமல்கிப் பூரிக்கத்—துங்கமுடன்
சோதனைகள் சூழ்ந்தாலும் தூளாக்கும் நம்முதல்வர்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—க. நாகேஸ்வரன், திருத்தணி.

இரும்பாலை சேலத்தில் ஏற்படவே செய்தார்;
கரும்பான செந்தமிழில் கல்வி—தருகின்றார்;
காதினிக்கப் போற்றுகிறார் கற்றார்; கலைஞரின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—மல்லிகை மும்தாசு, கோரிக்கடவு.

சாதிக்கின் றாரிங்குச் சாதனையே இல்லையென
வாதத்தில் வம்பளக்கும் வாயுடையார்—பேதமின்றிச்
சேதமிலாச் செய்கை செயலாற்று(ம்) இவ்வரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—நபிபியாரா, சென்னை-49.

கள்ளக் கருஞ்சந்தை கையூட்டே என்றுமனம்
எள்ளும் இழிதகைமை ஏகிடவே—உள்ளத்தின்
வேதனைத் தீயெல்லாம் வென்றே ஒழிப்பாரின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—தி. சு. பாலசுப்பிரமணியம், புதுக்கோட்டை-2.

படியளந்தாய் செந்நெல் பலகண்டாய் சென்னை
குடிநீர்க்கும் காவிரியைக் கொண்டாய்—முடியாத
வேதனைகள் அத்தனையும் வென்றாய் அரசேயுன்
சாதனைக் கீடுண்டோ சாற்று!

—ஆர். சிவகாமி, திருமாநிலையூர்.

தன்நாடு தன்மொழி தன்னின முய்ந்திட
எந்நாளும் பாடுபடும் ஏற்றமிகு—தென்னரசின்
தீதகற்றும் திட்டங்கள் தேசமதைக் காப்பாற்றும்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—ஏகநாதன், வைத்தியலிங்கபுரம்.

அன்னை மொழிவளர்த்தும் அண்ணாவழி நின்றும்
தன்னை உணர்ந்த தமிழரசில்—என்னதான்
சோதனை வந்தாலும் சோராக் கலைஞரவர்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—கங்கா, இரும்பேடு.

வற்றாது நெல்விளையும் மண்சூழ்ந்த தென்னாட்டில்
மற்றவர் பாலரிசி வாங்கியுணும்—பொற்கொடியே
வேதனைகள் தீர மிகுவிளைச்சல் செய்திடச்செய்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—க. வி. குருசாமி, சென்னை-23.

சேலத்து நற்கனியும் தென்வேலை ஆழ்துறையும்
ஞாலத்திற் கீந்ததுவே நம்மாட்சி—காலத்தின்
வேதனைக ளெல்லாம் விலகபசு மைப்புரட்சிச்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—மணிமாறன், பம்பாய்-19.

சேலத் திரும்பாலை சீர்சால் பெயர்மாற்றம்
ஞாலத்தில் மாதமொரு நற்பரிசு!—காலத்தில்
வேதனையைத் தீர்த்தாளும் வீறுள்ள நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—பி. வெங்கிடாசலம், ஆவத்திப்பாளையம்.

செத்தும் கிடந்திட்ட சேலமிரும் பாலைதன்னை
எத்திக்கும் போற்றுவிதம் தோற்றுவித்தார்—தக்கபல
சோதனைகள் வந்திடினும் சோராது வெற்றிகண்ட
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—மு. சாத்தையன், பரமக்குடி.

கஞ்சமலை என்னும் கருமி புதையலினை
நெஞ்சைப் பிளந்தெடுக்க நேர்செய்து—செந்தமிழர்
வேதனைகள் தீர விழித்துப் பணிசெய்த
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—புலவர் ஆ. பழனி. காரைக்குடி.

வீடுவழங்கி விளைச்சல் தனைப்பெருக்கிப்
பீடு பெறநிற்கப் பேரறிஞர்—ஏடுசொலும்
போதனை ஏற்றுப் புவிக்கே வழிகாட்டும்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

— பாட்சா கிருஷ்ணமூர்த்தி, பூரிப்பாக்கம்.

பண்டைத் தமிழகமாய்ப் பார்புகழ இந்நாட்டைக்
கண்டே பெரிதும் களிக்கின்றோம்—மண்டுபுகழ்
ஆதவன்போல் நாளும் அரசு புரிந்துவரும்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—தி. பொன்னுச்சாமி, தூத்துக்குடி.

விண்ணகத்துச் சோலை விளங்கும் முழுமதியின்
தண்ணகத்தைச் சேர்ந்தார் தரைதொட்டார்—
மண்ணகத்தில்
சோதனையால் தொல்லியற்கைச் சூழலையே வென்றவர்தம்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—த. குப்பால், வேப்பங்குளம்.

நிலமற்ற ஏழை நிலம்பெற்று வாழ
நலமுறும் பட்டாவை நல்கிப்—புலம்பிடும்
வேதனையை நீக்குவதில் வீறுகொண்ட நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

அள்ளும் பசிநீக்கி ஆக்கப் பணியீந்து
துள்ளுந் தமிழ்போற்றித் தொண்டாற்றி—வள்ளுவனின்
போதனையை நெஞ்சிருத்திப் பூத்த தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—பேரிறைவன், பழநி.

கல்லக் குடிகண்டோம்; காரிரும் பாலையும்
நல்லபெயர் வானொலியும் நாம்பெற்றோம்—பல்லோரின்
வேதனைக்கு நன்மருந்தாம் வீரத் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—தமிழ்மாறன், விக்கிரவாண்டி.

வாரி பெருக்கி வறட்சியினைச் சாகடித்தே
ஊரில் குறைகளைய ஓயாமல்—சேருகின்ற
சோதனைகள் தூளாகத் தொண்டாற்றும் நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

க. இரத்தினம், ஆயக்காரன்புலம்.

தென்மலையின் தென்முனிவன் தேர்ந்த அகத்தியமும்
முன்னவனும் மூத்ததமிழ் வள்ளுவனும்—கன்னல்நிகர்
போதனைகள் சாற்றுகின்ற போற்றரிய இன்றாட்சிச்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—அ. மலர் வேந்தன், அனுமந்தன்பட்டி.

கல்வி வளர்ச்சிக்கும் கைத்தொழில் மேன்மைக்கும்
மல்கும் பொருட்கள் மலிவுக்கும்—பல்விதத்தும்
பாதகம் அற்றுப் பணிபுரியும் நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—இளமுகிலன், தூத்துக்குடி-2.

இல்லார்க்கு வீடுகளும் ஏழைகட்கு நன்னிலமும்
வல்லார்க்கு வேலையும் வாய்த்ததிங்கே—நல்லோரின்
போதனையை மெய்யாகப் போற்றும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—இளங்கண்ணன், சென்னை-10.

அண்ணல் அடியொற்றி அண்ணாவும் ஆங்கவரின்
தன்னலமே யில்லாத தம்பியரும்—இந்நிலத்தின்
வேதனையும் வெம்பசியும் வேரோடழித்திட்ட
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—பொ. கருணாநிதி, கோவை-12.

வந்திடுமோ ? வாராதோ ? வந்திடினும் சீர்ப்படுமோ ?
எந்தவிதம் காண்போம் இரும்பாலை ?—இந்தவகை
வேதனையைத் தீர்த்து வினைசெய் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—நா. தண்டபாணி, வடகாடு.

'ஐயாரைந் தெட்டால்' அருமைக் 'கருணா'வால்
எய்யா நிறை விளைவை ஏற்படுத்தி—ஐயாவே
வேதனையாம் தீம்பசியை வென்ற தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—கே. காசியரசன், கீழப்பாலையூர்.

சேலம் இரும்பாலை, சென்னையென வானொலியில்
காலத்தே ஆசிரியர்க் காத்தளித்தல்—ஞாலத்தில்
தீதகற்றி நன்மையெலாம் சேர்க்கும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—முத்தரசன், காரைக்குடி.

ஆறா யிரத்தைநா ற்றாசிரியர்க் கன்மையிலே
சீராக வேலை தரவிருக்கும்—பேறான
ஓதரும் திட்டத்திற் கொப்பில்லை ; மற்றொன்றிச்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—பெ. பழனிச்சாமி, இராசக்கபட்டி.

ஆத்ம திருப்தி கொண்டவர்களுக்காகவும் அறிவுக்கு வேலை கொடுக்கமறுப்பவர்களுக்காகவும் சமூகப் பொருளியல் நிலைமைகள் காத்துக்கொண்டிருப்பதில்லை. மக்களின் கருத்துகள் நின்ற நிலையிலேயே இருக்கலாம். ஆனால் சமூகப்பொருளியல் நிலைமைகள் நின்ற நிலையிலேயே இருப்பதில்லை. அவை வேகமாக முன்னேறிச் செல்கின்றன. காலத்துக் கொவ்வாத கருத்துக்களுக்கும் உண்மையான நிலைமைக்கும் உள்ள இடைவெளி அதிகமாகிக் கொண்டே போகிறது. அந்த இடைவெளியைக் குறைத்து இரண்டையும் ஒன்று சேர்க்காவிட்டால் சமூகக் கட்டடம் இடிந்து விழுகிறது. உண்மையான சமூகப் புரட்சிகள் இப்படித்தான் ஏற்படுகின்றன. நிலைமைகள் மேற்கூறிய பக்குவத்தில் இருந்தால் புரட்சி கட்டாயம் ஏற்பட்டே தீரும். கர்நாடகமான கட்டுப்பெட்டிக் கருத்துக்கள் அதை ஓரளவு தாமதிக்கச் செய்யலாமே ஒழிய நிறுத்திவிட முடியாது. ஆனால் புரட்சிக்குரிய பரிபக்குவ நிலைமை இல்லாவிட்டால், ஒரு சிலர் என்னதான் பெரும் பெரும் முயற்சி செய்தாலும் அதை உண்டு பண்ணமுடியாது. புரட்சி தோன்றுகிறபோது உண்மையான நிலைமையை மக்களிடமிருந்து மறைத்து நிற்கும் திரை விலகுகிறது. அப்போது உண்மை அவர்களுக்குத் தெளிவாகக் காட்சி அளிக்கிறது. அவர்கள் இது வரையில் போய்க் கொண்டிருந்த பழைய போக்கு மாறியவுடனே, அவர்கள் வேகமாகச் செல்ல ஆரம்பிக்கிறார்கள். அதனால்தான், புரட்சிகளின்போது கருதவும் கழறவும் முடியாத பேராற்றலுடன் அவர்கள் விரைந்து முன்னேறுகிறார்கள். ஆகவே, பழைமையைக் கட்டிக்கொண்டு அழுவதாலும், முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தப் பார்ப்பதாலுமே, புரட்சி தவிர்க்க முடியாததாகிவிடுகிறது, என்பது வெளிச்சமாகிறதல்லவா ? சமூகம் மாறுதலற்றது என்னும் மூடக் கொள்கையை விட்டுவிட்டுக் காலத்துக் கேற்றவாறு அது தன்னை மாற்றிக் கொள்ளுமாயின், சமூகப் புரட்சி தோன்றவே தோன்றாது. அப்போது புரட்சிக்குப் பதிலாகச் சமூகம் இயற்கையை ஒட்டி இடைவிடாது வளரும் வளர்ச்சியைக் காணலாம். சமூகப் புரட்சியில் அரசியல் புரட்சியும் அடங்கியிருக்கிறது. ஆனால், அது சமூகத்தின் கட்டுக்கோப்பையே மாற்றி விடுவதால் அரசியல் புரட்சியைவிட அதிகச் சிறப்பு வாய்ந்ததாகும்.


டேய் தங்கப்பா! என்ன பார்க்கிறே!
பொன்னியின் நடையழகை ரசிக்கிறேன்
ரசிப்பேடா! சல்லிக் காசில்லாதவன் என் பெண்ணைப் பற்றி ஒரு நாளும் கனவு காணாதே!
மாமா! நீங்களா?
என்னப்பா, தங்கப்பா! என்ன கவலையப்பா?
ஒன்னுமில்லே மணி! என்னிடம் பணமில்லேங்கிற காரணத்தினாலே எனக்குப் பொன்னியைத் தர மாட்டேங்கிறாரு எங்க மாமா.
உனக்கென்ன குறை? நிலமில்லையா என்ன இல்லை?
நிலமிருந்து என்ன பயன்? மழையில்லையே! விளைச்சல் இல்லையே!


இனி அந்தக் கவலையை விடு! நீர்ப் பாசனக் கூட்டுறவுக் கழகத்திலே சேரு!
என்ன? நீர்ப்பாசனத்துக்குக் கூட்டுறவுக் கழகமா?
5
ஆமாம்! சிறிய விவசாயிகள் சேர்ந்து அமைக்கிற கூட்டுறவு! எல்லோரும் சேர்ந்து ஒரு குழாய்க் கிணறு அமைச்சுக் கலாம்! தண்ணீர் தட்டுப்பாடும் இருக்காது; செலவும் குறைவு!
அதுக்குப் பணத்துக்கு எங்கே போறது? நிலத்தைத்தானே அடமானம் வைக்கணும்!
6
அதுவும் வேண்டாம். நிலத்தை அடமானம் வைக்காமலே கடன் வாங்கத் தமிழ்நாடு அரசு அவசரச் சட்டம் கொண்டு வந்திருக்கு.
அப்படியா? அந்தக் கழகத்திலே சேர்வது தான் என் முதல் வேலை!
7
எழிலார்புரி நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம்
என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்! ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?
8
கோ...

# நேருவின் மணிமொழிகள்

வாழ்க்கையே ஒரு விசித்திர மான கதம்பம்தான். நாம் அதை உள்ளது உள்ளவாறே எடுத்துக்கொண்டு முதலில் அதை அறியவும் பின்னர் அதைச் சீர்திருத்தவும் முயலவேண்டும்.

*  *  *

சாமானிய மக்களின் நலந்தான் நமக்கு மிகவும் முக்கியமானது. ஒரு சிலருக்காக நாம் மிகப்பலரைப் பலிகொடுக்க முடியாது.

*  *  *

உலகம் இருந்த இடத்திலேயே இருப்பதில்லை. யாரோ சொன்னது போல் நம்மைச் சரித்திரத்தின் குப்பைத் தொட்டியில் தள்ளி விட்டு அது முன்னேறிக் கொண்டே இருக்கிறது.

*  *  *

சமூகம் எப்பொழுதுமே பழமைப்பற்றுடையது. மாறுதல் என்றாலே அதற்குப் பிடிப்பதில்லை. அது தான் போகிற போக்கிலேயே போய்க்கொண்டிருக்க விரும்புகிறது. தான் போகிற போக்கு தான் சரியான போக்கு என்றும் அது உறுதியாக நம்புகிறது. ஆகவே, நிலைமையைச் சீர்திருத்த வேண்டும் என்னும் நோக்கத்துடன் சமூகம் தன் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறவர்களை அது தண்டிக்கிறது.

*  *  *

சுதந்திரம் என்பது நழுவி விடும் இயல்புடையது. கையில் இருப்பது போலத் தோன்றும்: பின்னர் பார்த்தால் இராது. வெற்றி என்பது முழுத் தியாகமும் செய்த பின்னரே கிடைக்கக்கூடிய ஒன்று. அது நம்மை அடிக்கடி ஆசை காட்டி மோசம் செய்யும். நம்மைக் கொடிய சோதனைகளுக்கு உள்ளாக்கிய பின்னரே அது நமக்குக் கிடைக்கும்.

இன்று, உண்மையான விஞ்ஞானி என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஒவ்வொருவனும் கல்விக் கடலானது எல்லையற்றுப் பரந்து கிடக்கிறது என்னும் உண்மையை உணர்ந்திருக்கிறான். ஆராய்ச்சிப் பாய் கட்டிய அறிவுத்தோணியில் அமர்ந்து அவன் அதைக் கடக்க முயல்வது உண்மையேயாயினும் அவன் தன் முன்னோர்களைவிட அதிக அடக்கம் வாய்ந்தவனாகவும் தயக்கம் காட்டுபவனாகவும் இருக்கிறான்.

*  *  *

யந்திரமும் யந்திரக் கைத்தொழிலும் வந்தபிறகு மதத்தின்பால் காட்டப்பட்டு வந்த அலட்சியம் இன்னும் அதிகரித்தது. குருட்டு நம்பிக்கையின் அடிப்படையை விஞ்ஞானம் தகர்த்தெறிந்துவிட்டது.

*  *  *

சிறைவாழ்க்கை மரவாழ்க்கை! மரம் ஒரே இடத்தில் வேரூன்றி விடுகிறது. அது இடம் விட்டு இடம் பெயர்வதில்லை; பேசுவதுமில்லை. அதைப்பற்றி நினைப்பாருமில்லை. பேசுவாருமில்லை. அதைப் போலத்தான் சிறையிலிருப்பவனும். சிறையிலிருப்பவர்களுக்கு வெளியுலக நிகழ்ச்சிகள் வேடிக்கையாகவும் சிறிது திகைப்பை உண்டுபண்ணுவனவாகவும் இருக்கின்றன. அவை தூரத்தே நிகழும் வெறும் மாயத் தோற்றமாக அவர்கள் கண்களுக்குத் தென்படுகின்றன. ஆகவே, ராபர்ட் லூயி ஸ்டிவென்சன் எழுதியுள்ள கதையில் வரும் டாக்டர் ஜெகில் மிஸ்டர் ஹைட் என்னும் பாத்திரங்களைப் போல் நாங்களும் ஒன்று அசைவும் ஒன்று அமைதியுமாகவுள்ள இரு இயற்கைத் தத்துவங்களாகவும், இரு வாழ்க்கை முறைகளாகவும் இரு தோற்ற இயல்களாகவும் மலர்ச்சி அடைகிறோம்.

விஞ்ஞானம் மனிதனுடைய தேக சிரமத்தைக் குறைத்தது. அதனால் லட்சக்கணக்கானவர்களுடைய வாழ்க்கையில் கஷ்டம் குறைந்தது. விஞ்ஞானத்தினால் உலகத்தின் ஜனத்தொகை சிறப்பாகத் தொழிலபிவிருத்தி அடைந்த நாடுகளின் ஜனத்தொகை அதிகரித்தது. அதே சமயத்தில், சர்வத்தையும் நாசம் செய்யக் கூடிய அழிப்பு முறைகளையும் விஞ்ஞானம் தோற்றுவித்தது. ஆனால், அது விஞ்ஞானத்தின் குற்றமல்ல. விஞ்ஞானம் மனிதனுக்கு இயற்கையை அடக்கி ஆளக்கூடிய சக்தியை அளித்தது. அந்தச் சக்தியைப் பெற்ற மனிதன் தன்னைத்தான் அடக்கி ஆளும் வழியை அறியாமல் தவறான பாதையில் சென்று விஞ்ஞானத்தின் வரங்களையே சாபங்கள் ஆக்கிக் கொண்டான், ஆனால் விஞ்ஞானம் மட்டும் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டே இருந்தது. அதன் பயனாகப் பல்லாயிர வருடங்களில் அடையாத மாறுதலை நூற்றைம்பது வருடங்களில் இவ்வுலகம் அடைந்துவிட்டது. விஞ்ஞானம் வாழ்க்கையின் வழி, துறைகள் எல்லாவற்றையும் அடியோடு மாற்றிவிட்டது. அது உலகிலேயே ஒரு புரட்சியை உண்டு பண்ணி விட்டது.

*  *  *

விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்ததுமட்டுமின்றி, இயற்கையின் மீது அவன் செலுத்தக்கூடிய ஆதிக்கத்தையும் அதிகரித்தது.

*  *  *

ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வையும் நாகரிகத்தையும் உள்ளவாறு பிரதிபலிக்கும் கண்ணாடி, கலையாகும். இந்திய நாகரிகம் உயிராற்றல் பொங்கித் ததும்பிய காலத்தில் அது அழகுப்பொருள்களைப் படைத்தது. கலைகள் சிறந்தோங்கின. அவற்றின் எதிரொலி தொலை நாடுகளிலும் கேட்கப்பட்டது.

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தித் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர் : அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1

# எவ்வழி நல்லவர் ஆடவர்
# அவ்வழி நல்லை வாழிய நிலனே!

## வெற்றிகள் குவிந்தால் போதுமா?



- பசுமைப் புரட்சி பரவுகிறது!
- புகுமுக வகுப்புவரை இலவசக்கல்வி!
- தொழில்துறையில் புதிய, புதிய முயற்சிகள்!
- சட்டத்தின் துணையோடு ஏழை, எளிய மக்களுக்கு நிலப்பட்டா!
- வீட்டுமனைப் பட்டா!
- தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தனிச்சலுகைகள்!
- எல்லா ஊர்களுக்கும் குடிநீர், வடிகால் திட்டங்கள்!

*சாதனைப் பட்டியல் இப்படி வெற்றிகளைக் குவித்தாலும் முழுமையான பயனை நாம் நுகர முடிகிறதா?*

அரசு
ஆடவர்
ஆரணங்கு

பொறுப்பை
உணர்த்தும்
சிவப்பு முக்கோணம்.



நாள்தோறும் நாட்டுக்கும், வீட்டுக்கும் புதிய பிரச்னைகளை உருவாக்குவது,

**மக்கள் தொகைப் பெருக்கம் தானே!**

## இதைக் கட்டுப்படுத்த வேண்டாமா?



**அடுத்த குழந்தை இப்பொழுது வேண்டாம்**
**இரண்டுக்குமேல் எப்பொழுதும் வேண்டாம்.**

வெளியீடு: இயக்குநர், சுகாதாரம், குடும்பநலத்துறை தமிழ்நாடு அரசு.

முத்து

# தித்திக்கும் தீபாவளி

# 1000000

10 லட்சம் ரூபாய்க்குச் சிறப்புப் பரிசுகள்



ட் விலை ரூ.1 தான்

முதல் பரிசு 5 லட்சம் ரூபாய்

2-வது பரிசு 2 லட்சம் ரூபாய்

மூன்று 3-வது பரிசுகள் 3 லட்சம் ரூபாய்

இது தவிர வழக்கமான

பரிசுகள் அத்தனையும் உண்டு!

10 வரிசைப் பரிசுச் சீட்டுகளுக்கு

| | | |
|---|---|---|
| 10 | முதல் பரிசுகள் | 10 லட்சம் |
| 100 | 2-ம் பரிசுகள் | 10 லட்சம் |
| 1000 | 3-ம் பரிசுகள் | 10 லட்சம் |
| 5000 | 4-ம் பரிசுகள் | 5 லட்சம் |

ஆக மொத்தம் 45 லட்சம் ரூபாய்!

பரிசுகள் எண்ணிக்கை 6115

தமிழ் நாடு அரசு இதுவரை உருவாக்கிய

லட்சாதிபதிகள் 189 பேர்

நீங்களும் ஒரு ரூபாயில் உங்கள் நல் வாய்ப்பைச்

சோதனை செய்யலாமே!

குலுக்கல் தேதி **30-11-70**

நாட்டின் வளர்ச்சித்திட்டத்தில் உங்கள் பங்கு

இன்றே வாங்குங்கள்

## மிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

செலவு ஒரு ரூபாய்

வரவு பல லட்சம்

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத் துறை, சென்னை-9.